கொள்கை விளக்கக் குறிப்பு

மானியக் கோரிக்கை எண். 17—கல்வி
(1992-93)

தமிழ்நாடு அரசு
1992

அரசினருக்காக தமிழ்நாடு எழுதுபொருள்
றை இயக்குநரால் அச்சிடப்பெற்றது

T(X713).211'N92
N92
168932

முன்னதாகவே பார்வைக்கு சுற்றனுப்பப்படுகிறது.

சட்டமன்றப் பேரவையில் விவாதிக்கப் படுமுன் இதனை எவ்விதத்திலும் வெளியிடக்கூடாது.

I. முன்னுரை.

தெய்வப் புலவர் திருவள்ளுவர், அவருடைய ஒப்பற்ற படைப்பான திருக்குறளில்

''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு''

''கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை அவை''

என்று கல்வியின் சிறப்பை, மாண்பை என்றும் பொருந்தும் வண்ணம் எடுத்தோதியுள்ளார்.

''கல்வி கற்ற மாந்தர், கல்லாதவரைக் காட்டிலும் உயர்ந்தவராவர். கல்லாதவர் இறந்தோருக்குச் சமமாவர்'' என்று அரிஸ்டாட்டில் கல்வியின் சிறப்பை பெரிதும் புகழ்ந்துள்ளார். தனிப்பட்ட ஒருவர், தன்னுடைய பாரம்பரியத்தின் விரும்பத்தக்க அம்சங்கள் அனைத்தையும் பெற இயலும் வரையில், அவருக்கு உதவக்கூடிய ஓர் முறை கல்வி என்று கற்றோர் அனைவரும் பெரிதும் பாராட்டியுள்ளனர். சிறுவர்கள் அவர்கள் வாழும் சமுதாயத்திற்கு ஏற்றவர்களாக உருவாகத்தக்க வகையிலும், இன்றைய வளரும் குழந்தைகளின் நலனைப் பேணுவதற்கும் மாநில அரசும், சமுதாயமும், பள்ளியும் உளப்பூர்வமான முயற்சியினை மேற்கொண்டுள்ளன. பள்ளிகள், சமுதாயத்தின் தன்மையையும், அதன் தேவைகளையும் வெளிப்படுத்துகின்றன. இன்றைய சிறுவர்கள் நாளை தலைவர்களாக விளங்கப் போகின்றவர்கள். கல்வியின் தன்மையைப் பொறுத்தே சமூக மலர்ச்சி உருவாகிறது. கல்வியின் பரிணாம வளர்ச்சி நாடோறும் பெருகி வருவதை நாம் அறிவோம். பள்ளிகள், சாதி சமய வேறுபாடின்றி கல்வி கற்கும் கோயில்களாக விளங்குகின்றன. அங்கு அனைவரும் உள்ளத்தால் ஒன்றுபட்டு உடன் பிறந்தோராக வாழ்கின்றனர். கல்வி அறிவை ஊட்டும் இந்த கோயில்கள் வலிவும், பொலிவும் கொண்டிலங்க, அரசு பலதரப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அதன் மூலம் அமைப்பு ரீதியாக அரசும் வலுப்பெறும். சிறுவர்கள் கல்வி வாயிலாகத் தன்னுரிமை பெறுவர்.

குழந்தைகள், மனிதன், உடல், மனம், உள்ளம் ஆகியவற்றின் அடித்தளத்தில் அமைந்துள்ள சிறந்த ஆற்றலை, நற்பண்புகளை வெளிக் கொணரும் அரிய செல்வம் கல்வியே என்று கல்வியின் பெருமையை மகாத்மா காந்தியடிகள் எடுத்தியம்பியுள்ளார்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, கல்வி முறையில் சிறந்த பாடத் திட்டங்களையும் பிற நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்கும் பணியில் அரசு ஈடுபட்டுள்ளது. உடற் பயிற்சிக் கல்விக்கும் உரிய முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தொழில் கல்வி கற்கும் போதே பொருள் ஈட்டுதல் என்ற கொள்கையை மாணவர்களுக்கு கற்பிக்கிறது.

சிறுவர்கள், அறிவாற்றல், உடலாற்றல் பெறவும் சமூக, உளவியல் பண்புகளை அடையவும், உணர்ச்சி தேவைகள் அறியவும் கல்வி வழி வகை செய்வதோடு ஒருங்கிணைந்த ஆளுமையை உருவாக்கவும் அடிகோலுகிறது. இத்தகைய முழுமையான ஆளுமைத் தன்மையை மாணவர்கள் அடைய வேண்டும் என்பதே கல்வியின் நோக்கமாகும்.

கல்வி கற்கும் சிறுவர்கள், குறிப்பாக 6 வயதிலிருந்து 11 வயது வரையிலான சிறுவர்கள், வாழ்க்கையிலும், வாழ்க்கைத் தொழிலிலும், அறிவிலும் அவர்களுக்கு இருக்கும் ஆர்வத்தை மேம்படுத்துவது முதல் நோக்கமாகும். அந்நோக்கத்தை எய்திட தாய்மொழிக் கல்வி இன்றியமையாததாகும். எனவே, தொடக்கப் பள்ளியில் (பயிற்று மொழியாக) தாய் மொழியாம் ''தமிழ்'' மொழியே இருக்க வேண்டும் என்று அரசு வலியுறுத்த விரும்புகிறது. சிறுவர்கள் 14 வயது வரை இடையில் நின்றுவிடாமல் தொடர்ந்து பள்ளிகளில் சேர்ந்து கல்வி கற்கவேண்டும் என்பதே அரசின் தலையாய நோக்கமாகும். நாட்டின், சமூக-பொருளாதார அரசியல், பண்பாட்டு வளர்ச்சியில் கல்வி பெரும்பங்கு வகிக்கிறது. மக்களாட்சி முறையைக் கொண்டுள்ள ஓர் அரசு, அதன் குடிமக்களுக்கு கல்வியறிவைப் புகட்ட வேண்டியது தலையாய கடமையாகும். மாணவர்கள் ஆற்றல் மிக்கவராய் விளங்கத் தக்க வகையில், கல்வியை தொழில் மயமாக்குவது

அவசியமாகும். கல்வித் துறை கடந்த பத் தாண்டு களில் விரைவான வளர்ச்சியினைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு, தொடக்கக் கல்வி நிலையில் நூறு சதவீதம் என்ற அளவிற்கு மாணவர்களைச் சேர்த்து சாதனை யைப் படைத்துள்ளது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம், இலவச பாட புத்தகங்கள், கால ணிகள், சீருடைகள் ஆகியவற்றை வழங்குதல் போன்ற சமூக நல நடவடிக்கைகளின் பயனாக, பள்ளியில் படிப்பை பாதியில் விட்டுச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை பெரிதும் குறைந்துள்ளது. சென்ற தொண்ணூறு ஆண்டுகளில் எழுத்தறிவு பெற்றவர் களின் எண்ணிக்கை 9 பங்கு அதிகரித்துள்ளது. அதா வது 63.72 சதவீதமாக உயர்ந்து, நாட்டில் கேரளத் திற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தை தமிழ் நாடு பெற்றுள்ளது. கடுமையான நிதி இடர்ப்பாடு கள் இருந்தபோதிலும், கல்விக்கு நிதியொதுக்கம் செய்வதில் அரசு அதிக முன்னுரிமை அளித்துள்ளது.

மாநில வரவு-செலவுத் திட்டத்தில் கல்வி குறித்த செலவு.

''மானியக் கோரிக்கை—17. கல்வி'' என்ற தலைப் பின்கீழ் மூலதனச் செலவு ரூ. 1,517.78 கோடியாகும்; இதில் ரூ. 70.81 கோடி திட்டப் பணிகளுக்கானதாகும். இது, இம்மாநிலத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் கல்வி என்ற ஒளி விளக்கை ஏற்றுவதற்கு அரசு பொறுப் பேற்றிருப்பதைக் காட்டுகிறது. மேற்குறிப்பிட்ட மூலதன ஒதுக்கீடு, 1991-92ல் ஒதுக்கப்பட்ட (ரூ. 1299 கோடி) தொகையை விட ரூ. 218 கோடி அதிகமாகும். வருவாய்க் கணக்கின் பேரிலான மொத்த செலவான ரூ. 7,255 கோடியில் மூலதனச் செலவு 21 சதவீதம் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

(1) மேலே குறிப்பிட்டவாறு 1992-93ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ''புதிய திட்டங்கள்'' கொண்டு வரப்பட்டுள்ளன. சில திட்டங்களுக்கு, ஏனைய துறைகளின் வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு களிலிருந்து, பின்வரும் பக்கங்களில் விவரித்துக் கூறி யுள்ளபடி, நிதியுதவி அளிக்கப்பட்டு வருகின்றன.

அட்டவணை 1.

(i) 1992-93ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.

கணக்குத் தலைப்பு. (1)	திட்டத்தில் சேராதது. (2)	திட்டப் பணி. (3)	மொத்தம். (4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
2059. அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றின் கட்டிடங்களை பரா மரித்தலும் செப்ப னிடுதலும்	6.36	..	6.36

2202. பொதுக் கல்வி—			
01. தொடக்கக் கல்வி	5,99,51	31,48	6,30,99
02. இடைநிலைக் கல்வி ..	4,28,51	42,86	4,71,37
03. பல்கலைக் கழக கல்வியும், உயர் கல்வியும்	1,41,02	3,18	1,44,20
04. முதியோர் கல்வி	1,40	10,52	11,92
05. மொழி வளர்ச்சி	2,06	10	2,16
80. பொதுவானவை— ஏனைய செலவு	1,59,09	..	1,59,09
கூட்டுக— திருப்பி வசூலிக் கப்பட்டவை	10,13	..	10,13
மொத்தம் ..	13,41,72	88,14	14,29,86
2203. தொழில் நுட்பக் கல்வி	47,08	4,70	51,78
2204. விளையாட்டு களும் இளைஞர் நலனும் ..	7,72	2,95	10,67
2205. கலையும் பண்பாடும்—			
பொது நூலகங்கள்	11,17	17	11,34
ஆவணக் காப்பகங்கள்	69	39	1,08

(1)	(2)	(3)	(4)
நுண்கலைக் கல்வி—			
கலை-கைத்திறத் தொழில் கல்லூரி	91	1	92
இசைப் பயிற்சி மையங்கள்	27	9	36
ஏனைய செலவு	1	..	1
கூட்டுக—			
திருப்பி வசூலிக்கப் பட்டவை	5	...	5
மொத்தம்— கலையும்-பண்பாடும்	13,10	66	13,76
2205. ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்டோர் நலன் ..	..	4,00	4,00
2235. சமூகப் பாது காப்பும் நலனும்	11	...	11
3425. அறிவியல் பணிகளும் ஆராய்ச்சியும்	..	1,15	1,15
3454. மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆய்வு புள்ளியியல் விவரச் சுவடி பிரிவு	1	8	9
மொத்தம்—மானியக் கோரிக்கை-17. கல்வி ..	14,16,10	1,01,68	15,17,78

(ii) இவை தவிர, கல்விக் கட்டிடங்கள் முதலிய வற்றுக்கான மானியக் கோரிக்கைகளின் கீழ் 1992-93-ல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்விவரம் வருமாறு :—

அட்டவணை 2.

1992-93ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.

கணக்குத் தலைப்பு.	திட்டத்தில் சேராதவை.	திட்டத்தில் சேர்ந்தவை.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
ஏ. வருவாய்க் கணக்கிற்கு உட்பட்ட செலவு—			
மானியக் கோரிக்கை எண். 28. சமுதாய மேம்பாடு சமூகக் கல்வி	..	15	15
மானியக் கோரிக்கை எண். 37. பொதுப் பணிகள்— அரசினர் பள்ளிகள், கல்லூரிகளுக்கான கட்டிடங்கள்— சிறு பணிகள்	8	4	12
மானியக் கோரிக்கை எண். 42-2071. அரசு மானியம் பெறுகின்ற, உள்ளாட்சி அமைப்பின் கீழ் வருகின்ற கல்வி நிலையங்களின் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்	96.33		96.33

(1)	(2)	(3)	(4)
மானியக் கோரிக்கை எண் 72. 2236. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்துணவுப் பொருட்களுக்காகும் செலவு ..	1,73,40	2	1,73,42
மொத்தம் ..	2,69,81	21	2,70,02
பி. வருவாய்க் கணக்கிற்கு உட்படாத செலவு— மானியக் கோரிக்கை எண் 56— 4202. கல்வி, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு— அரசினர் கல்வி நிலையங்களுக்கான கட்டிடங்கள். ..	1,19	6,35	7,54
மானியக் கோரிக்கை எண். 56. கடன்கள்—4515— ஊரகத் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் ..	..	5,00	5,00
மானியக் கோரிக்கை எண் 62. 6202. கடன் அடிப்படையில் வழங்கப்படும் தேசியப் படிப்புதவித் தொகையும், தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்குக் கடனும் ..	..	30	30

(1)	(2)	(3)	(4)
7615. மானிய உதவி பெறும் கல்வி நிலையங்களில் பணி புரியும் ஆசிரியர் களுக்குக் கடன்கள்	10	—	10
மொத்தம் ..	1,29	11,65	12,94

மேற்கூறிய ஒதுக்கீடுகள், அனைத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டால், கல்வி குறித்த செலவு 1992-93-ல் ரூ. 1,800 கோடிக்கு மிகையாக இருக்கும்.

மேலே குறிப்பிட்ட கணக்கில், ஆதி திராவிடர் பிற்பட்ட வகுப்பினருக்கான பள்ளிகள், விடுதிகளுக்கான ஒதுக்கீடுகள், ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், பிற் பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் ஆகியோ ருக்கான படிப்புதவித் தொகைகள் சீர்திருத்தப் பள்ளிகள், உடல் ஊனமுற்றோருக்கான பள்ளிகள், தொழிற் பயிற்சி நிலையங்கள் முதலியவற்றுக்கான நிதி ஒதுக்கீடும் மற்றும் மருத்துவக் கல்வி, வேளாண் மைக் கல்வி, கால் நடைக் கல்வி ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடும் அடங்காது.

1992-93-ல் கல்விப் பணித் திட்டங்கள் குறித்த நிதி ஒதுக்கீடு.

1992-93-ல், கல்வி குறித்த பல்வேறு துறைகளுக்காகும் திட்டச் செலவு (2202 பொதுக் கல்வி, 4202 கல்வி குறித்த மூலதன ஒதுக்கீடு, 6202 கடன்கள் முதலில் அனைத்துத் தலைப்புகளின்கீழ்) வருமாறு :—

[+குறியீடு உள்ள தொகை, மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவினைக் குறிக்கும்].

அட்டவணை-3.

	ஏற்றுக் கொள்ளப் பட்டது.	புதிய திட்டங்கள் 1992-93-ல் அனுமதிக் கப்பட்டது.	மொத் தம்
(1)	(2)	(3)	(4)
			(ரூபாய் இலட்சத்தில்.)
I. பொதுக் கல்வி—			
(i) தொடக்கக் கல்வி	36,12	96	37,08
	+3,40	..	+3.40
(ii) பள்ளிக் கல்வி	.10,61	1,74	12,35
	+4,30		+4,30
(iii) முதியோர் கல்வி	4,95	..	4,95
	+5,57		+5,57
(iv) பல்கலைக் கழகக் கல்வியும், உயர் கல்வியும்.	3,57	51	4,08
	+30		+30
மொத்தம்— பொதுக் கல்வி	55,25	3.21	58,46
	+13,57		+13,57

(1)	(2)	(3)	(4)
			[ரூபாய் இலட்சத்தில்]
தொழிற் கல்வி	8,04 +25	..	8,04 +.25
விளையாட்டுகளும் இளைஞர் நலனும்	1,61 +2,61	3	1,64 +2,61
கலை, பண்பாடு, கல்வி	58	15	73
அறிவியல் பணிகளும் ஆராய்ச்சியும்.	1,01	10	1,11
மொத்தம் ..	66,49 +16,43	3,49	69,98 +16,43

1992–93 ஆம் ஆண்டிற்குறிய புதிய திட்டங்கள்

1. பள்ளிகளில் கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பதற்காக 1,400 இடைநிலை ஆசிரியர்கள் (இளநிலை) பதவிகளை ஏற்படுத்தல்.

இத்திட்டம், 6 முதல் 11 வரையிலான வயதுத் தொகுதியில் கூடுதலாக 85,000 மாணவர்களையும், 11 முதல் 14 வரையிலான வயதுத் தொகுதியில் 1,25,000 மாணவர்களையும் கூடுதலாகச் சேர்ப்பதற்கு தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் கூடுதலாக ஆசிரியர்களை ரூ. 96 இலட்சம் செலவில் (இச்செலவு 1992-93-ல் ரூ. 80 இலட்சமாகும்). 1,000 இடைநிலை ஆசிரியர்களை (இளநிலை) நியமிக்கக் கருதுகிறது. மேலும் 500-க்கு மேற்பட்ட மக்கட் தொகையைக் கொண்டு பள்ளிகள் அல்லாத சிற்றூர்களில் 200 தொடக்கப் பள்ளிகளைத் தொடங்குவதற்கு இடைநிலை ஆசிரியர்கள் (இளநிலை) பதவிகள் 200 ஏற்படுத்தப்படும். 500-க்கும் மேற்பட்ட மக்கட் தொகை கொண்டுள்ள 494 சிற்றூர்களுக்குத் தொடக்கப் பள்ளிகளுக்கு வகை செய்ய வேண்டியுள்ளது.

அத்தகைய சிற்றூர்களில் 1992-93 ஆம் ஆண்டில் 200 தொடக்கப் பள்ளிகள் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. இந்த 200 தொடக்கப் பள்ளிகளையும் நடத்துவதற்கு கூடுதலாக 200 இடைநிலை ஆசிரியர் (இளநிலை) பதவிகள் ஏற்படுத்தப்படும். 1992-93 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 16 இலட்சம் செலவு ஆகும். இது தவிர உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதலாக சேர்த்துக்கொள்ளப்படும். 6—11 வயதுத் தொகுதி, 11—14 வயதுத் தொகுதி மாணவர் களுக்குக் கல்வி கற்பிக்கும் நோக்கத்திற்காக 200 இடைநிலை ஆசிரியர் பதவிகள் (இளநிலை) ஏற் படுத்தப்படும்.

2. 1992-93 ஆம் ஆண்டில் 21 அரசினர் உயர் நிலைப் பள்ளிகள், 10 அரசினர் மேனிலைப் பள்ளி களைத் தொடங்க அரசு கருதியுள்ளது. 6 கி.மீ. தொலைவிற்குள் உயர்நிலைப் பள்ளி வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டிய 1,000—5,000 மக்கட் தொகை கொண்ட 848 சிற்றூர்கள் உள்ளன. தலைமை ஆசிரியர் ஒருவர், பி.எட். உதவியாளர் அல்லது தமிழ் ஆசிரியர் (இளநிலை) ஒருவர், இளநிலை உதவியாளர் ஒருவர் ஆகியோரைக் கொண்ட 21 உயர்நிலைப் பள்ளி களைத் தொடங்க 1992-93 ஆம் ஆண்டில் திட்டமிடப் பட்டுள்ளது. 1992-93 ஆம் ஆண்டில் இதற்கு ரூ. 16.40 இலட்சம் செலவாகும். 1986-87 முதல் 1991-92 வரை 169 அரசினர் உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த அனுமதிக்கப்பட்டன. வரைமுறைக் கோட்பாடுகளின்படி, 8 கி.மீ. தொலை விற்குள் மேல்நிலைப் பள்ளிகள் வசதிகள் செய்துகொடுக் வேண்டிய சிற்றூர்கள் 539 உள்ளன. தனியார் உயர் நிலைப் பள்ளிகள் அரசு மானியம் ஏதுமின்றி மேனிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துவதற்கு அப் பள்ளிகளை ஊக்குவிக்க அரசு கருதியுள்ளது. எனினும் 1992-93 ஆம் ஆண்டில் தேவைப்படும் பகுதிகளில் ரூ. 8.75 இலட்சம் செலவில் 10 அரசினர் உயர்நிலைப் பள்ளிகளை மட்டும் மேனிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த அரசு கருதியுள்ளது. 10 அரசினர் உயர்நிலை பள்ளிகளுக்கு பட்ட மேற்படிப்பு உதவியாளர் பதவி கள் (இளநிலை) 50 (ஒவ்வொரு பள்ளிக்கு 5 என்ற வீதத்தில்) ஏற்படுத்த அனுமதிக்கப்படும்.

3. 18 பி. எட். உதவியாளர் பதவிகள் ஏற்படுத்துதல் :

1992-93 ஆம் ஆண்டில் கூடுதலாகப் பள்ளிகளில் அனுமதிக்கப்படுகின்ற 14—16 வயதுத் தொகுதி மாணவர்கள் 50,000 பேர் ஆவர். 1992-93 ஆம் ஆண்டில் ரூ. 2.52 இலட்சம் செலவில் 18 பி.எட். உதவியாளர் (இளநிலை) பதவிகள் ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கக் கருதியுள்ளது.

4. உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி கட்டிடங்கள் கட்டுதல் :

இம்மாநிலத்தில் 2,700 அரசினர் உயர்நிலை/மேனிலைப் பள்ளிகள் உள்ளன. இவற்றில் பாதிக்கு மேற்பட்ட பள்ளிகளுக்குப் போதுமான கட்டிட வசதி இல்லை. 600-க்கு மேற்பட்ட பள்ளிகள், 60 ஆண்டு களுக்கும் மேலாகச்செயல்பட்டு வருகின்றன. இப் பள்ளிகளுக்கான கட்டிடங்கள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. இவற்றுக்கு புதிய கட்டிடங்கள் கட்டித்தர வேண்டியுள்ளது. மேற்கூறிய செயல் நோக் கத்திற்காக அரசு ஒவ்வோர் ஆண்டும் இயன்ற அள விற்கு நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. 1992-93 ஆம் ஆண்டில் 64 பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்காக அட்கோ நிறுவனத்திடமிருந்து ரூ. 225 இலட்சம் கடன் பெறுவதற்கு அரசு பங்குத் தொகை 25 சத வீதத்திற்கு மூல நிதியாக ரூ. 75 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

5. 51 அரசினர் மேல்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் சாதனங்கள் வழங்குதல்.

+2 வகுப்பில் பயிலும் மாணவர்கள் தங்களுடைய பொதுத் தேர்வுகளில் அறிவியல் செயல்முறைத் தேர்வையும் எழுத வேண்டியுள்ளது. எனவே மேனிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்ட 51 அரசினர் உயர்நிலைப்பள்ளிகளுக்கு அறிவியல் சாத னங்களை வழங்க வேண்டியது அவசியமாகும். 51 அரசினர் மேனிலைப்பள்ளிகளுக்கு அறிவியல் சாத னங்களை வழங்க, 1992-93 ஆம் ஆண்டில் 50 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்படும்.

6. அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் தற்போதுள்ள இட வசதியை விரிவுபடுத்துதல்.

அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் போதிய இட வசதி இல்லை. பிற அரசுத்துறைகளைப் போலல்லாமல், பணியாளர்களுக்கு இடவசதியளிப்பதுடன், தேர்வுப் பணிகளுக்கும் கூடுதலாக இடம் தேவைப்படுகிறது. எனவே, கூடுதல் இடவசதியளிக்க, தற்போதுள்ள கட்டிடத்தில் கூடுதலாக தளம் ஒன்றைக் கட்ட வேண்டியது அவசியமாகும். 1992–93 ஆம் ஆண்டில் கூடுதல் கட்டுமானப் பணிக்கு ரூ. 5 இலட்சம் செலவு பிடிக்கும்.

7. விளையாட்டில் கலந்துகொள்ளும் மாணவியருக்கான இல்லம் ஒன்றை தர்மபுரியில் கூடுதலாக கட்டுதல்.

விளையாட்டில் கலந்து கொள்வோருக்கான மூன்று இல்லங்கள், திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன. 1992–93 ஆம் ஆண்டில் 3.01 இலட்சம் ரூபாய் தொடரினச் செலவிலும், 0.30 இலட்சம் ரூபாய் தொடரா இனச் செலவிலும் விளையாட்டில் கலந்து கொள்ளும் மாணவியருக்கென்றே இல்லம் ஒன்று தருமபுரியில் கட்டப்படும். 1992–93 ஆம் ஆண்டில் 30 மாணவியர் 8 ஆம் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவர், மாணவியரின் எண்ணிக்கை முடிவில் 90 ஆக அதிகரிக்கப்படும்.

8. கட்டிடம் கட்டுதல், சாதனங்கள் வாங்குதல் ஆகியவற்றுக்காக பல்கலைக் கழக மானியக் குழுவின் உதவி பெறும் பல்கலைக் கழகங்களுக்கு திட்ட மானியங்க்ள் ;

பல்கலைக்கழக மானியக்குழு, பல்கலைக்கழக வளர்ச்சித் திட்டங்களின் ஒரு பகுதியாக, கட்டிடங்கள், சாதனங்கள் போன்ற முதன்மை இனங்களுக்கான செலவின் பெரும்பகுதியை ஏற்றுவருகிறது.

மாநில அரசு, அச்செலவில் ஒரு பகுதியை (25 சத வீதம்) ஏற்க வேண்டும். 1992-93-ஆம் ஆண்டில் நான்கு பல்கலைக்கழகங்களுக்கு 50 இலட்சம் ரூபாய் அளிக்கப்படும்.

9. தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் பெயரில் இருக்கை ஒன்றை ஏற்படுத்துதல் :

தஞ்சாவூரில் 1991 ஏப்ரல் திங்களில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களினபோது, அம்மாபெரும் கவிஞரின் நூல்கள் குறித்து ஆராய்ச்சி நடத்த, கவிஞர் பாரதி தாசன் பெயரில் இருக்கை ஒன்றை ஏற்படுத்துமாறு கோரிக்கை விடுவிக்கப்பட்டது. அந்நோக்கத்திற்காக 1992-93-ஆம் ஆண்டில் 1 இலட்சம் ரூபாயை அரசு வழங்கியுள்ளது.

10. தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் தற்போதுள்ள நுண் படப் பிரிவை விரிவு படுத்துதல் :

இரண்டு காரணங்களுக்காக, தமிழ்நாடு ஆவணக் காப்பகத்திலுள்ள நுண்படப் பிரிவில், சில சாத னங்கள் கூடுதலாகத் தேவைப்படுகின்றன. —

(i) தற்போதுள்ள வசதி, ஆவணக் காப்பகங்கள் மற்றும் அறிஞர்களின் தேவைகளை நிறைவு செய்யப் போதுமானவையாக இல்லை ;

(ii) நுண்படப் பிரிவுகளின் செயல்திறனை அதி கரிக்கத் தற்போதுள்ள சாதனங்கள் துணைபுரிய எந்திரங்கள் தேவைப்படுகின்றன. ஆவணக் காப் பகத்தில் தற்போது நுண்படப் பெருக்கி எந்திரம் ஏதுமில்லை. ஆராய்ச்சிக்கு வகை செய்ய, மைக்ரோ பிலிம் ரீடர் (Reader) மற்றும் பிரிண்டர் ஆகியவை தேவைப்படுகின்றன. எனவே, 15.25 இலட் சம் ரூபாய் செலவு பிடிக்கக்கூடிய இந்தக் கூடுதல்

எந்திரங்கள் மூலம் ஏற்கெனவே செயல்பட்டுவரும் நுண்படப்பிரிவை அனைத்து வசதிகளும் கொண்டதாகச் செய்து அதன் செயல்திறனை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

11. அறிவியல் தொழில் நுட்பத் திட்டங்கள் :

1992–93 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டப் பணிகளுக்கு முன்னுரிமை அளித்து இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது:—

(i) ''தேவைப்படுகின்ற வளர்ச்சித் துறைகளுக்கு திட்டப் பணிகள்''.

(ii) குறிப்பிட்ட இடம் வட்டாரத்திற்கு தேவையான, தனிக் கவனம் தேவைப்படுகிற திட்டங்கள்— இத்திட்டங்கள் பொருளாதார மேம்பாட்டிற்குப் பெருந்துணைபுரியும்.

(iii) சமுதாயத்திற்கு உடனடியாக எதிர்காலத்தில் சமுதாயத்திற்கு பலன் அளிக்கக்கூடியவை என்று வல்லுநர்களின் மூலம் கண்டறியப்படும் திட்டப் பணிகள்.

(iv) இத்திட்டங்கள் தொழிற்சாலைகளின் தேவைகளை நிறைவு செய்யும். அதிலும் குறிப்பாகத் தொழில் முனைவோரின் மேம்பாட்டிற்கு இவை உறுதுணையாக விளங்கும்.

1992–93 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ஆகும் மொத்த செலவு ரூ. 7.25 இலட்சமாகும். இத்துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றொரு திட்டம் குழந்தைகள் பாதுகாப்பு வளர்ச்சி குறித்த திட்டத்திற்கான நிதியுதவி தொடர்பானதாகும். ஏழை எளிய குழந்தைகளுக்கு அவர்களின் வளர்ச்சியில் ஊட்டச்சத்தின் பங்கு, பாதுகாக்கப்பட்ட குடிநீர், துப்புரவு ஆகியவைக் குறித்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் 15,000 ரூபாய் செலவில்

நிறைவேற்றப்படும். நன்மைகள் ஏதும் பெறாத நிலையிலுள்ள மக்களுக்கு அறிவியல் தொழில்நுட்ப விவரங்களை அச்சிட்டு வெளியிடுவதற்கான மற்றொரு திட்டத்தை 10,000 ரூபாய் செலவில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் முதியோர் கல்விக்கான ''நீங்களாகவே செய்து கொள்ளுங்கள்'' சிறுவர்களுக்கான ''வழிகாட்டி புத்தகங்கள்'' பெண்களுக்கான ''வீட்டுத்தேவை பொருட்கள்'' முதலியவையும் அடங்கும்.

12. தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மையங்களில் புதிம கண்டுபிடிப்பு, பல்வகை இயக்கப் பொருட்கள் (விளையாட்டுப் பேனா) பார்வைக்கு வைத்தல் :

குழந்தைகளின் கற்பனையையும், கூட்டுறவையும் ஊக்கப்படுத்தும் பல்வேறு விளையாட்டுப் பொருட்களைக் கொண்ட மிகவும் அடக்கமான விளையாட்டு முறை ஒன்றை உருவாக்கிக் கொடுக்க அரசு உத்தேசித்து உள்ளது. 1992-93 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 2.50 இலட்சம் செலவாகும்.

13. பெண் குழந்தைகள் நலனுக்கானத் திட்டம் :

''சிறு குடும்பம்'' என்ற கொள்கையை ஏற்றுக் கொண்ட குடும்பங்களிலுள்ள பெண் குழந்தைகளின் நலனுக்கான திட்டமொன்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். கருத்தடை செய்து கொண்ட பெற்றோர்களின் ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தையுள்ள குடும்பத்திற்கு இத்திட்டம் நன்மை பயக்கும். ஒரு குறிப்பிட்ட நிதியில், ஒவ்வொரு குடும்பத்தின் பேரிலும் ரூ. 2,000 முதலீடு செய்யப்படும். அப்பெண் குழந்தைகள் தொடக்க, இடைநிலை, உயர்நிலை, மேல்நிலை கல்வியினை முடிப்பதற்கு உதவியாக அக்குழந்தைகளின் குடும்பத்திற்கு இந்நிதியிலிருந்து அவ்வப்போது தொகை வழங்கப்படும். அப்பெண் குழந்தைக்கு 20 வயதானவுடன், அவளுடைய குடும்பத்தை அமைப்

பதற்காக ஒட்டுமொத்தமாக ரூ. 10,000 வழங்கப் படும். அல்லது மேற்கொண்டும் படிப்பை தொடர் வதற்காக அத்தொகை வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் 2,000 குடும்பங்கள் பயன் பெறும். இதற்காக 1992–93 ஆம் ஆண்டில் 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

14. ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் ரூ. 14.79 கோடி செலவில் 1068 தொடக்கப் பள்ளிகளுக்கான பள்ளிக் கட்டிடங்களைக் கட்ட அரசு தீர்மானித் துள்ளது.

15. சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் ஆற்றிய உரையில் அரசு உயர்நிலை, மேல்நிலை பள்ளிகளில் மாணவர்கள், மாணவிகளுக்கென தனித்தனியான கழிப்பிடங்களைக் கட்டிக் கொடுப்பதற்கான திட்ட மொன்றை அரசு அறிவித்துள்ளது.

16. பொது நூலகங்களை மேம்படுத்துதல்.

ஐந்தாண்டுக்கால திட்டமொன்றை தொடங்கி வைத்து 5,000-க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் பொது நூலகம் ஒன்றை ஏற்படுத்தி தருவதே அரசின் கொள்கை என்று மாண்புமிகு நிதி அமைச்சர் வரவு-செலவு திட்ட உரையின் போது தெரிவித்தார். 1992-93 ஆம் ஆண்டில் 300 பகுதி நேர நூலகங்களை நிறுவ உத்தேசித்துள் ளோம். 635 கிராமங்களில் முழு அளவிலான நூலகங் கள் ஏற்படுத்தப்படும். 1992-93 ஆம் ஆண்டில் ஒவ் வொரு நூலகத்திலும் தமிழ் சொல் அகராதியும், திருவள்ளுவர், பாரதியாரின் புத்தகங்களும் இடம் பெறும். மேற்சொன்ன இத்திட்டத்திற்கு ரூ. 85 இலட்சம் செலவாகும். நூலக வரி தற்போது சொத்து வரியின் ஒவ்வொரு ரூபாய்க்கும் 5 பைசா என்பதை இனி 10 பைசாவாக உயர்த்த அரசு உத்தேசித்துள்ளது. ஒட்டு மொத்த எழுத்தறிவு இயக்க பணியினை வெற்றி கரமாக செயல்படுத்த முன்னோடி எழுத்தறிவு இயக்க மாக ஒருங்கிணைக்க இந்த பொது நூலகங்கள் உதவும்

17. அறிவொளி இயக்கம்:

அறிவொளித் திட்டம், தற்போது காமராசர், புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கனார், மதுரை, திருநெல்வேலி-கட்டமொம்மன், கன்னியா குமரி, வடஆர்க்காடு-அம்பேத்கார் ஆகிய ஏழு மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத் தின் கீழ் 15 முதல் 35 வயது வரையிலான மொத்தம் 18.34 இலட்சம் எழுத்தறிவற்றோர் பயன் பெறுவர். இத்திட்டம் இராமநாதபுரம், திண்டுக்கல் அண்ணா, தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதே மில்லத், சென்னை, கோயம்புத்தூர், பெரியார், தென்ஆர்க் காடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் வரும் ஆண்டில் நிறைவேற்றப்படும். 1993-94 ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள மாவட்டங்களில் இத்திட்டம் நிறைவேற்றப்படும். 1992-93 ஆம் ஆண்டில் ரூ. 15 கோடி செலவில் 25 இலட்சம் பேருக்கு எழுத்தறிவு புகட்டப்படும்.

18. உலக வங்கி உதவியுடன் செயலபடவுள்ள பள்ளிக் கல்வித் திட்டங்கள்.

ஏழாண்டு கால கட்டத்தில் செயல்படுத்த விரிவான பள்ளிக் கல்வி திட்டமொன்று ரூ. 1200 கோடி செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இது குறித்து உலக வங்கியின் உதவி நாடப்படுகிறது.

II. பள்ளிக்கல்வி.

(1) தொடக்கக்கல்வி.

1. எல்லோருக்கும் தொடக்கக் கல்வி :

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் வழிகாட்டும் கொள்கையின்படி மாநில அரசு 14 வயது வரையிலுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிக்க வழிவகை செய்ய வேண்டும். இந்திய நாடு சுதந்திரமடைந்ததிலிருந்து இந்த குறிக்கோளினை அடைய திட்டமிட்ட உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கல்வியின் முழுப் பலனை அடைய அடித்தளத்திலிருந்தே ஒரு தரமான கல்வித் திட்டத்தை உருவாக்குவதே மாநில அரசின் முயற்சியாகும். ஏற்றத் தாழ்வின்றி சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிரிவினருக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை நீக்குவதும், குறிப்பாக ஏழை மற்றும் நலிந்த பிரிவினருக்கு தரமான கல்வியை அவரவர் வாழும் பகுதியிலேயே அரசுப் பள்ளிகள் மூலம் அளிப்பது அனைவருக்கும் தொடக்கக் கல்வி வலியுறுத்தும் கோட்பாடாகும். இந்தக் கோட்பாட்டை நோக்கி மாநிலத்திலுள்ள எல்லாக் கல்வி நிறுவனங்களும் வேகத்துடனும், உறுதியுடனும் செயல்பட வேண்டுமென்பதே அரசின் நோக்கமாகும். '' அனைவருக்கும் தொடக்கக் கல்வி '' என்ற கோட்பாட்டிற்கு இவ்வரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

தொடக்கக் கல்வியில் வலியுறுத்தப்படுவது ;—

(அ) அனைத்துப் பள்ளி செல்லும் வயது குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்தல், அவ்வாறு சேர்ந்த குழந்தைகளை 14 வயது வரை தொடர்ந்து படிக்கச் செய்தல் மற்றும்

(ஆ) கல்வியின் தரத்தில் நிறைவான முன்னேற்றத்தை அடைதல் ஆகும்.

2. மாணவர் சேர்க்கை :

1982-ம் ஆண்டு கல்வி வளர்ச்சியில் ஒரு திருப்புமுனை வாய்ந்ததாகும். ஏனெனில் இந்த ஆண்டில்தான் மாணவர்கள் பெருமளவில் பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர். இதற்குக் காரணம் இந்த ஆண்டில்தான் அப்போதைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பள்ளி மாணவர்களுக்கென வரலாறு படைத்த சத்துணவு திட்டத்தை தொடங்கி வைத்தார்.

1982-83 ஆம் ஆண்டிற்கு முன்னால் தொடக்கப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை 44.72 இலட்சத்திற்கும் குறைவாக இருந்தது. சத்துணவுத் திட்டம் தொடங்கப் பட்டதால் ஒவ்வொரு ஆண்டும் மாணவர் சேர்க்கை வீதம் கணிசமான அளவில் உயர்ந்தது. இது இன்று 56.25 இலட்சம் என்ற நிலைமை எய்தியுள்ளது. இது பள்ளியிலிருந்து மாணவர் நின்றுவிடும் வீதத்தை வெகுவாகக் குறைத்து படிப்பறிவு பெற்றவர்கள் எண்ணிக்கையை உயர்த்தி தரமான கல்வியை அளிக்க வழி வகுத்திருக்கிறது. இதன் மூலம் கிராமப் புறங்களில் வாழும் ஏழை மற்றும் வசதியற்ற மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது.

அட்டவணை-4.

தொடக்கப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை பின் வருமாறு :—

வரிசை எண்.	ஆண்டு.		மாணவர்	மாணவியர்	மாணவர்கள் சேர்க்கை (இலட்சங்களில்).
1	1981-82	..	24.50	20.22	44.72
2	1982-83	..	25.51	21.22	46.73
3	1983-84	..	26.21	21.85	48.06
4	1984-85	..	26.53	26.39	48.92
5	1985-86	..	27.30	23.12	50.42
6	1986-87		28.09	23.68	51.77
7	1987-88	..	28.58	24.14	52.72
8	1988-89	..	28.99	24.53	53.62
9	1989-90	..	29.41	25.05	54.46
10	1990-91	..	29.80	25.70	55.50
11	1991-92	..	30.19	26.06	56.25

பொதுவாக மாநிலத்தில் ஏற்பட்டுள்ள மக்கள்தொகை பெருக்கத்திற்கேற்ப 6-11 வயது பிரிவிலும் மற்றும் 11-14 வயது பிரிவிலும் அதற்கேற்றவாறு மாணவர் சேர்க்கை அதிகமாகி அரசுக்கு கூடுதலான சுமையை ஏற்படுத்தியுள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொடக்கத்தில் 6-14 வயது மாணவர் சேர்க்கை நிலை மற்றும் 1989-90, 1991-92 ஆம்

ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மாணவர் சேர்க்கை படிப்படியாக உயர்ந்துள்ளதைக் காட்டுகின்றது.

அட்டவணை 5.

வயது	வகுப்பு	1984-85	1989-90	1990-91	1991-92
		(இலட்சங்களில்.)			
6-11	1-5 தொடக்கம்.	70.44	76.78	77.64	78.50
11-14	6-8 நடுநிலை.	23.19	30.33	31.59	32.84
மொத்தம்		93.63	107.11	109.23	111.34

6-14 வயதுப்பிரிவில் மாணவர் பள்ளியிலிருந்து நின்று விடும் வீதத்தைக் குறைத்து மாணவர் சேர்க்கையினை 100 சதவீதமாக உயர்த்தி பள்ளியை விட்டு விலகாமல் இருக்கச் செய்வது இவ்வரசின் சீரிய முயற்சியாக இருக்கும்.

3. மாநிலத்தில் தொடக்கக் கல்வியில் வளர்ச்சி :

அனைவருக்கும் தொடக்கக் கல்வியளித்தல் என்ற கோட்பாட்டினை எய்த மாநிலத்தின் தொடக்கக் கல்வியில் ஒரு சீரான வளர்ச்சி இன்றியமையாததாகும். இந்த நிலை ஏற்படுவதற்குப் பள்ளிகள் மாணவர்களின் இருப்பிடங்களுக்கு அருகாமையிலிருக்க வேண்டும்.

பல்வேறு மக்கள் தொகை உள்ள வாழிடங்கள் மற்றும் அங்குள்ள தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை விவரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:—

அட்டவணை 6

(1986 ஆம் ஆண்டின் அகில இந்திய கல்விப் புள்ளியின் கணக்கெடுப்பு அறிக்கையின்படி.)

மக்கட்தொகை	குடியிருப்புகள் எண்ணிக்கை	பள்ளிகள் குடியிருப்புகளுக்கேற்ப ஒரு கி.மீ. கீழ் எண்ணிக்கை	சதவீதம்	குடியிருப்புகள் ஒரு கி.மீ. வரை எண்ணிக்கை	சதவிதம்	ஜனத்தொகைக் கேற்ப சதவிகிதம் ஒரு கி.மீ. கீழ்	ஒரு கி.மீ. வரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
5000 மற்றும் அதற்கு மேலும்	340	340	100.0	340	100.0	100.0	100.0
2000—4999	2,906	2,792	96.1	2,895	99.6	96.2	99.75
1000—1999	7.624	7,105	93.2	7,542	98.9	93.1	98.95
500—999	12,361	10,204	82.5	11,960	96.8	84.0	97.0
400—499	396	2,653	66.0	3,680	92.8	67.6	92.9
300—399	4,873	2,610	53.6	4,193	86.0	55.9	85.9
200—299	5,641	1,589	28.2	4,429	78.5	28.9	7.78
100—199	6,268	648	10.3	4,417	70.5	10.7	70.5
100க்கு கீழ்	3,412	164	4.8	2,178	63.7	6.8	64.3
மொத்தம்	43,821	28,105	59.3	41,629	87.8	83.9	96.0

5,000 மற்றும் அதற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 340 குடியிருப்புகளிலும் தொடக்கப் பள்ளிகள் அமைந்துள்ளன. 2,000 முதல் 4,999 வரை மக்கள் தொகை கொண்ட 2,906 குடியிருப்பு களில் 2,792-ல் குடியிருப்புக்குள்ளாகவே தொடக்கப் பள்ளிகள் உள்ளன. ஒரு கிலோ மீட்டர் தொலைவில் 2,895 குடியிருப்புகளில் தொடக்கப் பள்ளிகள் உள்ளன. இது குடியிருப்புகளில் 99.6 சதவீதமும், இக் குடியிருப்புகளிலுள்ள மக்கள் தொகையில் 99.7 சதவீதமும் ஆகும். 1,000 முதல் 1,999 மக்கள் தொகைக்கு 98.9 சதவீதமும் தொடக்கப் பள்ளிகள் உள்ளன. மக்கள் தொகை குறைய இச்சதவீதமும் குறைந்து கொண்டே வருகிறது. 500 மற்றும் அதற்கு மேல் மக்கள் தொகை கொண்டதும் 1 கிலோமீட்டர் தூரத்திற்குள்ளதுமான பள்ளி களில்லாத பகுதிகளில் புதிய தொடக்கப் பள்ளிகள் ஆரம்பிப்பது அரசின கொள்கையாகும். 1981-82 முதல் தொடக்கப் பள்ளிகளில் எண்ணிக்கையில் தொடர்ந்து முன்னேற்றம் காணப்படுகிறது. அதாவது 27,767 பள்ளிகளிலிருந்து 1991-92-ல் 30,004 பள்ளி களாக உயர்ந்துள்ளது. தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கையில் தொடர்ந்து முன்னேற்றம் காணப் படுகிறது. அதாவது தொடக்கப் பள்ளிகளில் எண்ணிக்கை ஆண்டு வாரியாக உயர்ந்து வருவதை கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ள லாம்.

3. தமிழ்நாட்டில் தொடக்கப் பள்ளிகளின் வளர்ச்சி (1981–1991) :

அட்டவணை— 7

வ. எண்	ஆண்டு	தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை	நடுநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை	மொத்தம்
(1)	(2)	(3)	(4)	(5)
1.	1981—82	27.767	5,526	33,293
2.	1982—83	28,290	6.565	34,855
3.	1983—84	28,548	5,635	34,183
4.	1984—85	28,847	5,691	34,538
5.	1985—86	29,118	5,691	34,809
6.	1986—87	29,268	5,663	34,931
7.	1987—88	29,319	5,749	35,068
8,	1988—89	29,359	5,707	35,066
9.	1989—90	29,491	5,651	35,142
10.	1990—91	29,979	5,624	35,603
11.	1991—92	30,004	5,581	35,585

4. பள்ளியை விட்டு இடையில் நின்று போனதற்கான பிரச்சினைகள் :

மாணவர்கள் பள்ளிகளிலிருந்து அதிக அளவில் இடையில் நின்று போவதற்கு பின்வருபவை பெரிதும் காரணமாக அமைகின்றது.—

1. மாணவர்களின் குடும்பங்களின் ஏழ்மையும் பொருளாதார சூழ்நிலையும்.

2. குடும்ப வருமானத்தைப் பெருக்க வேலைக்கு சென்று பொருளீட்ட வேண்டிய நிலை.

3. வீட்டிலுள்ள சிறு குழந்தைகளைப் பராமரிக்க வேண்டிய சூழ்நிலை.

1991–92 ஆம் ஆண்டில் தொடக்கப் பள்ளியிலிருந்து இடையில் நின்றுபோன மாணவர் சதவீதம் பின்வருமாறு :—

அட்டவணை— 8

வகுப்புகள்	மாணவர்	மாணவியர்	மொத்தம்
1 முதல் 5 வரை	17.72	21.16	19.31
1 முதல் 8 வரை	37.48	46.50	41.67

பள்ளிப் படிப்பை இடையில் விட்டுச் செல்லும் மாணவிகளின் எண்ணிக்கை மாணவர்கள் எண்ணிக்கையை விட அதிகமாக உள்ளது. ஆதலால் 6-14 வயதுள்ள மாணவிகளின் சேர்க்கைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென அரசு கருதுகிறது.

ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பள்ளியிலிருந்து அதிக அளவில் இடையில் விட்டுச் செல்லும் மாணவ/மாணவிகளின் எண்ணிக்கை குறைந்தும் பள்ளிகளில் படிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்தும் வருகின்றது.

அட்டவணை— 9

தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் விட்டு விலகு வோரின் எண்ணிக்கை.

வ எண்	வருடம்	தொடக்க விழுக்காடு (6-11 வயதுப் பிரிவு)	(6-14 வயதுப் பிரிவு) விழுக்காடு
1.	1981— 82	30.61	64.93
2.	1984— 85	23.14	58.75
3.	1985— 86	22.48	56.45
4.	1986— 87	22.29	52.45
5.	1987— 88	21.78	48.22
6.	1988— 89	21.42	45.97
7.	1989— 90	21.05	45.43
8.	1990— 91	20.32	44.48
9.	1991— 92	19.31	41.67

மாநிலத்தில் பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தி விடும் மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்க ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வரும் கீழ்வரும் பல்வேறு நலத் திட்டங்கள் தீவிரமாக்கப்படும்.

1. புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சத்துணவுத் திட்டம்.

2. இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம்.

3. இலவசச் சீருடை வழங்கும் திட்டம்.

4. இலவசக் காலணி வழங்கும் திட்டம்.

5. பள்ளி செல்லும் மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டம்.

6. 1-ம் வகுப்பில் படிக்கும் குழந்தைகளுக்கு இலவசப் பலகைகள் வழங்கும் திட்டம்.

கல்வியின் தரத்தை உயர்த்தவும் பள்ளியின் இடையில் நின்றுவிடும் மாணவர்களின் வீதத்தைக் குறைக்கவும் அரசு தீவிர முயற்சிகள் மேற்கொள்ளும்.

5. 1992-93-ல் கல்வியாண்டில் 6-11 வயது தொகுதி மற்றும் 11-14 வயது மாணவ, மாணவிகளைக் கூடுதலாகச் சேர்ப்பதற்கு 1,000 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் பகுதியிரண்டு திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளன. 500-க்கும் மேற்பட்ட ஜனத்தொகை கொண்ட ஆனால் 1 கி.மீ. தொலைவிற்குள் பள்ளிகள் இல்லாத கிராமங்களில் பள்ளிகளை ஏற்படுத்த 200 அரசு பள்ளிகள் துவக்க அரசு அனுமதித்துள்ளது. இதற்காக 200 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

6. <u>கரும்பலகைத் திட்டம்</u> :

இத்திட்டத்தின் கீழ் ஓராசிரியர் பள்ளிகள் ஈராசிரியர் பள்ளிகளாக மாற்றப்படுகின்றன. கட்டிட வசதியில்லாத பள்ளிகளுக்கு இரண்டு அறைகள் கொண்ட கட்டிடம் கட்டித்தரப்படுகின்றன. மூன்று கட்டங்களில் கற்பிப்பதற்கு இன்றியமையாத

பொருள்கள் துவக்கப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடும் செலவினமும் பின்வருமாறு :—

அட்டவணை 10.

கரும்பலகைத் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் செலவினம்.

வ. எண்.	அம்சம்.	அனுமதிக் கப்பட்ட தொகை.	செலவினம்.
(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சங்களில்)	
1.	ஆசிரியர் ..	754.32	754.32
2.	கற்பிப்பதற்கான பொருள்கள் ..	2,306.66	2,112.22
3.	கட்டிடங்கள் : நிதி ஒதுக்கீடு ஊரக வளர்ச்சித் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. 1,197 கட்டிடங்களில் 809 கட்டிடங்கள் கட்டி முடிக்கப் பட்டுவிட்டன. 388 கட்டிடங் களின் கட்டுமான பணிகள் நடை பெற்று வருகின்றன.		

இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட 1,829 இடைநிலையாசிரியர் பணியிடங்களை ஏற்கனவே உள்ள 1,829 ஓராசிரியர் பள்ளிகளுக்குப் பயன்படுத் தப்பட்டன. இவ்வாசிரியர் நியமனத்திற்காக 31—12—91 வரை ஆன செலவினம் ரூ. 1,074.2 இலட்சமாகும். ரூ. 754.32 இலட்சம் இதுவரை மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளன. கற்பிப்ப தற்குத் துணையாகும் பொருட்கள் வழங்கும் திட்டத் தின்கீழ் கற்பிப்பதற்குத் துணையாகும் பொருட்கள் மற்றும் நூலகப் புத்தகங்களும் 29,075 தொடக்கப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதற்காக ரூ. 2,306.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் ரூ. 2,112.22 இலட்சம் மூன்று கட்டங்களில் செலவு செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் பேசியபோது குறிப்பிட்டுள்ளபடி மத்திய அரசு நிதி உதவியுடன் தொடக்கப் பள்ளிகளுக்கு கரும்பலகைத் திட்டத்தின் கீழ் விசேட வசதிகள் தமிழக அரசால் செய்து தரப்படும்.

கரும்பலகைத் திட்டத்தின் நான்காவது கட்டத்தில் 1986 ஆம் ஆண்டிற்குப் பிறகு துவங்கப்பட்ட 885 ஆரம்பப் பள்ளிகளுக்கும் நடுநிலைப் பள்ளிகளில் உள்ள தொடக்கநிலை வகுப்புகளுக்கும் கற்பிப்பு பொருள்கள் வழங்கத் தேவையான கருத்துருக்கள் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 459 ஓராசிரியர் பள்ளிகளை மூன்றாசிரியர் பள்ளிகளாகவும், 6,545 ஈராசிரியர் பள்ளிகளை மூவாசிரியர் பள்ளிகளாகவும், மாற்றவும் கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன. 351 பள்ளிகளுக்கு மூன்று அறைகள் கட்டித் தரவும், 899 பள்ளிகளுக்கு இரண்டு அறைகள் கட்டித்தரவும், 1,110 பள்ளிகளுக்கு ஒரு அறை கட்டித் தரவும் கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

கரும்பலகைத் திட்டத்தின்கீழ் நான்காம் கட்டத்தில் மேற்படித் திட்டத்தினைச் செயல்படுத்த மொத்தத் தொகை ரூ. 62.47 கோடி மதிப்பிடப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு :—

கரும்பலகைத் திட்டம்—நான்காம் கட்டம்—விவரம்.

		(ரூபாய் இலட்சத்தில்)
1.	கற்பிப்பதற்கான பொருள் வழங்கப்படுவதற்காக ஆகும் செலவினம் ..	508.06
2.	ஆசிரியர் நியமன செலவினம் ..	1,777.67
3.	கட்டிடங்கள் கட்டுவதற்கான செலவினம் ..	3,961.00
	மொத்த செலவினம்	6,246.73
		(அல்லது) 62.47 கோடி

7. நடுநிலைப் பள்ளிகளில் அறிவியல் கல்வியினை மேம்படுத்தல் :

அறிவியல் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் முதலாம் கட்டத்தில் 1,159 நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ. 19.08 இலட்சம் செலவில் அறிவியல் பெட்டகம் வழங்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டத்தில் 1,151 நடுநிலைப்பள்ளிகளுக்கு 13.24 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன. மூன்றாம் கட்டத்தில் 328 நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ. 5.25 இலட்சம் செலவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன — எஞ்சியுள்ள 2,002 நடுநிலைப்பள்ளிகளுக்கு ரூ. 40.04 இலட்சம் செலவில் அறிவியல் பெட்டகம் வழங்க மத்திய அரசுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

8. தொழில்நுட்பவியல் மூலம் கல்வியின் தரத்தை உயர்த்தும் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் முதல் கட்டத்தில் 2,666 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு 2,666 வானொலி மற்றும் ஒலிப்பதிவுக் கருவிகள் ரூ. 30 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன. இத்தொகை மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டது. இரண்டாம் கட்டத்தில் 6,222 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் பயனடைய ரூ.70.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டன. மூன்றாம் கட்டத்தில் 10,000 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு வானொலி மற்றும் ஒலிப்பதிவு கருவிகள் பயனடைய ரூ. 100.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளன.

(ii) உயர்நிலைப் பள்ளிக் கல்வி

1991–92-ல் தமிழ்நாட்டில் 14—16 வயதுத் தொகுதியினரான 19.78 இலட்சம் பேர்களுள் 61.13 விழுக்காடாகிய 12.09 இலட்சம் பேர் உயர்நிலைப் பள்ளிகளில் 9—10 வகுப்புகளில் சேர்க்கப்பட்டனர். 1991–92-ல் உயர்நிலைப் பள்ளி வகுப்புகள் நடைபெற்று வந்த பள்ளிகளின் விவரங்கள் வருமாறு :—

அட்டவணை—II.

	மாநிலக் கல்வித் துறை மேற்பார்வையிலுள்ள பள்ளிகள் (ஆங்கிலோ இந்திய மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் உட்பட)	நடுவண் உயர்நிலைப் பள்ளிக் கல்வி வாரியம் போன்றவற்றோடு இணைந்தவை.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
உயர் நிலைப் பள்ளிகள் ..	3,070	93	3,163
மேல்நிலைப் பள்ளிகள் ..	2,003	81	2,084
மொத்தம் ..	5,073	174	5,247

1991–92-ல் மேற்கண்ட பள்ளிகளில் வெவ்வேறு நிலைகளில் பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு :

(1)	மாணவர்களின் எண்ணிக்கை (2) (இலட்சத்தில்)
1—5 வகுப்புகள் ..	3.80
6—8 வகுப்புகள் ..	20.67
9—10 வகுப்புகள் ..	12.08
11—12 வகுப்புகள் ..	5.09
மொத்தம்..	41.64

பல்வேறு மேலாண்மையின் கீழ் உள்ள பள்ளிகளின் விவரங்கள் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

2. 1992–93ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்டவாறு கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட உள்ளன:

இடைநிலை ஆசிரியர் . 1,400

ஏற்கெனவே உள்ள பள்ளிகள்—
தொடக்கக் கல்வி 1,200
இடைநிலைக் கல்வி 200

(தொகுப்பூதியம்—மாதம் ரூ. 800 வீதம் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு)

உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கு
பி. எட். தர ஆசிரியர்கள் .. 18
தமிழ் ஆசிரியர்கள் (ஜுனியர்)

புதிய 10 மேல் நிலைப் பள்ளிகளுக்கு முதுகலை
ஆசிரியர் பணியிடங்கள் .. 50

பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்.

3. பள்ளிகளின் வசதிகளைப் பெறுக்குவதற்காக முன்னேற்றத்திற்கான முயற்சிகளை திரட்டும் நோக்குடன் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்படுகின்றன. 1991–92-ல் தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்ற ஒரு பள்ளி சீரமைப்பு மாநாடு மூலம் சுமார் ரூ.1.25 கோடி மதிப்புள்ள பலவகைப்பட்ட பொருட்கள் நன்கொடையாகப் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டன.

புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சத்துணவுத் திட்டம், 1—10 வகுப்பு பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு.

4. தமிழ்நாடு தொடக்கப் பள்ளி மதிய உணவுத் திட்டம் 1957 முதல் 1982வரைஅமுல்படுத்தப்பட்டது. அதன் இடத்தில் 1982-விருந்து தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம் அமுலாக்கப்பட்டது. இப்புதிய திட்டம் முன்னதைவிட விரிவானதும் பரவலானதும் ஆகும். தமிழ்நாட்டில் 1—7—1982, 15—9—1982 முதல் 1—5 வகுப்புகளிலும், 15—9—1984 முதல் 6—10 வகுப்புகளிலும் இத்திட்டம் அமுலாக்கப்பட்டது.

5. பள்ளிக் கல்வி இயக்குநர் கட்டுப்பாட்டில் உள்ள உயர்நிலை/மேல்நிலைப் பள்ளியில் இத்திட்டத்தின் கீழ் 1—10 வகுப்புகளில் 19 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு 3,863 பள்ளி உணவு மையங்கள் மூலமாக சத்துணவு அளிக்கப்படுகிறது. (பெரும்பான்மை மையங்கள் பள்ளிக் கல்வி இயக்குநர் கட்டுப்பாட்டில் உள்ளன.) 1—5 வகுப்புகளில் உள்ள குழந்தைகளுக்கு ஆண்டு முழுவதும் அதாவது 365 நாட்களிலும் உணவு அளிக்கப்படுகிறது. (சில குறிப்பிடப்பட்ட ஏறக்குறைய 20 விடுமுறை நாட்களில் முன்னதாகச் சமைக்கப்பட்ட உணவு கொடுக்கப்படுகிறது.) 6—10 வகுப்புகளில் உள்ள குழந்தைகளுக்கு எல்லா பள்ளி வேலை நாட்களிலும் சத்துணவு அளிக்கப்படுகிறது.

தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் :

6. முதல் வகுப்பில் சேர்ந்த குழந்தைகளில் 15 விழுக்காடு மாணவர்களே 12-வது வகுப்பை அடை கிறார்கள். இந்த 15 விழுக்காடு மாணவர்களில் 65 விழுக்காடு மாணவர்கள் மட்டுமே தொழில், கல்லூரி, தொழில் நுட்பம் மற்றும் உயர் கல்விக்குச் செல்கிறார் கள். உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக்கான அதிகரித்து வரும் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அரசு, தனியார் (நிதி உதவி பெறாத) பள்ளிகளை, புதிதாக திறப்பதற்கு ஊக்குவிக்கிறது. ஒரு சில இடங் களில் மட்டும் அரசு நடுநிலைப் பள்ளிகளை, உயர் நிலைப் பள்ளிகளாக உயர்த்தும்.

7. உயர் நிலைப் பள்ளிகளுக்கு அறிவியற் கூடங்களை அமைப்பதற்கான சிறப்பு திட்டத்தின் கீழ் 1990-91 முடிய 1,163 உயர்நிலைப் பள்ளிகள் பயன் பெற்றுள் ளன. இத்திட்டத்தின்படி ஆய்வுக் கூடத்திற்கு அறி வியற் பொருட்கள் பள்ளிக் கல்வி இயக்குநரால் வாங்கப் பட்டு, பயன்பெறும் பள்ளிகளுக்கு விநியோகிக்கப்படு கின்றன. பள்ளி ஒன்றுக்கு ரூ. 25,000 மதிப்புள்ள தேவைப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. அரசுப் பள்ளி ஒன்றுக்கு ஆய்வுக் கூட கட்டிடச் செலவு ரூபாய் 1.00 இலட்சமாகும். உள்ளாட்சி மற்றும் தனியார் உயர் நிலைப்பள்ளி ஒன்றுக்கு ஆய்வுக்கூட கட்டிடம் கட்ட ஆகும் செலவில் 60 விழுக்காடு அல்லது ரூபாய் 60,000 இதில் எது குறைவோ அது மானியமாக வழங் கப்படுகிறது. அரசு மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த மட்டில் ஒரு பள்ளிக்கு ரூ. ஒரு லட்சம் மதிப்புள்ள உப கரணங்கள் வழங்கப்படுகின்றன. 1989-90-ஆம் ஆண் டில் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்ட 39 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு உபகரணங்கள் வழங்குவதற்காக 1991-92-ல் அரசு ரூ. 35 லட்சம் அனுமதித்துள்ளது. 1992-93-ல் 51 அரசு மேல் நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் உபகரணங்கள் வழங்கு வதற்காக ரூ. 50 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தனியார் மேல்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டவும் தளவாடங்கள் வாங்கவும் ஆகும் செலவில் 40 விழுக்காட்டை பள்ளிக்கு ரூ. ஒரு லட்சம் (கட்டிடத்திற்கு ரூ. 75,000 மற்றும் ஆய்வுக்கூட தளவாடங்களுக்கு ரூ. 25,000) என்ற வரம்புக்குட்பட்டு மானியமாக தரும் திட்டம் ஒன்றுக்கும் அரசு ஏற்பு அளித்துள்ளது. இதுவரை இவ்வாறு இணை மானியமாக ஏற்பளிக்கப்பட்டுள்ள மொத்த தொகை சுமார் ரூ. 3 கோடியாகும்.

8. பள்ளிகளில் அறிவியல் கல்வியை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் 1,306 உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் பயன் அடையத்தக்க வகையில் நடுவண் அரசு ரூ. 5 கோடி அனுமதித்துள்ளது. ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ. 20,000—க்கு அறிவியல் உபகரணங்களுக்காகவும் ரூ. 15,000-க்கு நூலக புத்தகங்களுக்காகவும் வழங்கப்படும்.

9. ஒவ்வொரு ஆண்டும் மாநில அளவிலான அறிவியல் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு (1991–92) 12—1—1992-லிருந்து 16–1–1992 வரை கோயம்புத்தூரில் நடைபெற்ற 114 பள்ளிகளிலிருந்து 458 மாணவர்கள் கலந்து கொண்டனர். 15 பரிசுகள் திறமையான மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த ஆண்டு தென் இந்திய அறிவியல் கண்காட்சி புதுவையில் 31—1—1992 முதல் 4—2—1992 முடிய நடைபெற்றது. 50 பள்ளிகளிலிருந்து 117 மாணவர்கள் கலந்து கொண்டனர். 20 தமிழக மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

10. கல்வித் தொழில் நுட்ப செயல்பாடு விரிவாக்கத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் ரூ. 85 லட்சம் செலவில் கல்வி தொலைக்காட்சி படநிலையம் ஒன்று மைய அரசு அனுமதியுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இப்படநிலையத்தையும் கல்விதொழில் நுட்பப் பிரிவையும் இணைத்து " மாநில கல்வி தொழில் நுட்ப நிறுவனம் " என பெயரிடப்பட்டுள்ளது. தொலைக்காட்சி மற்றும் வானொலிக்கான கல்வி சம்பந்தமான ஒலி/ஒளிப்பதிவு நாடாக்களை தயாரிக்கும் பணி கல்வி தொழில் நுட்பப் பிரிவிடம் ஒப்படைக்

கப்பட்டுள்ளது. வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தினர் இத்தகைய கல்வி ஒலி/ஒளிப்பதிவு நாடாக்களை தயாரிக்கும் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர். பட நிலையம் துவங்கப்பட்டதும் அனைத்து தயாரிப்பு பணிகளும் கல்வித்துறையிடமிருக்கும். வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் நிகழ்ச்சிகளை ஒலி/ஒளி பரப்பும் பணியை மட்டும் மேற்கொள்ளும்.

11. பள்ளிகளில் சுற்றுப்புறச் சூழல் கல்வித்திட்டத்தை தமிழ்நாட்டில் தென் ஆற்காடு மாவட்டத்தில் 1,014 பள்ளிகளிலும் தர்மபுரி மாவட்டத்தில் 1,919 பள்ளிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிற நடவடிக்கைகளோடு பள்ளிகளில் செடிகள் வளர்த்தியும் பழம் தரும் மரங்கள் மற்றும் பிற மரங்களை பள்ளி வளாகத்திலும் வளர்த்து சுற்றுபுற சூழ்நிலை சிறப்படைய செய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும் சுற்றுப்புற சூழல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை இளம் உள்ளங்களில் ஏற்படுத்தி சுற்றுப்புற சூழலை தூய்மையாக வைத்துக் கொள்வதன் அவசியத்தை உணர்த்துவதும் இத்திட்டத்தில் அடங்கும்.

12. ஹட்கோ நிறுவனத்தின் உதவியுடன் தமிழக அரசு 1991–92-ல் அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பு அறைகள் கட்டுவதற்காக ரூபாய 3 கோடி அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 64 அரசுப் பள்ளிகள் பயன்பெறும். இதே போன்று 1992–93-ல் அரசு ரூ. 75 லட்சம் ஒதுக்கீடு செய்யும். ஹட்கோ நிறுவனம் அதன் பங்காக ரூ. 225 லட்சம் கடனாக அளிக்கும். ஆகமொத்தம் ரூ. 3 கோடி இதற்காக ஒதுக்கீடு செய்யப்படும்.

மழலையர் பள்ளிகள் மற்றும் அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் கற்பதற்கு வசதி செய்யும் குழு.

13. மழலையர் பள்ளிகள் பெருகிவருவது குறித்தும் அனைத்து பள்ளிகளிலும் தமிழை ஒரு மொழிப்பாடமாக 10-ம் வகுப்புவரை கற்பிக்கும் திட்டம் குறித்தும்

ஆராய அண்ணாமலை மற்றும் மதுரை காமராசர் பல் கலைக்கழக முன்னால் துணைவேந்தர் முனைவர் எஸ். வி. சிட்டிபாபு அவர்கள் தலைமையில் ஓர் உயர் மட்டக்குழு அரசு அமைத்துள்ளது. இக் குழு ஆழ்ந்து ஆராய்வு செய்து அதன் அறிக்கையை விரைவில் அரசுக்கு சமர்ப்பிக்கும்.

14. கிராமப்புறத்தில் உள்ள மாணவர்களை ஊக்குவிப் பதற்காக திறமையின் அடிப்படையில் தகுதியுள்ளவர் களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை செயல் படுத்த தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. இத் திட்டத்தின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் (50 மாண வர்கள் மற்றும் 50 மாணவியர்கள்) மொத்தம் 100 மாணவர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஆண் டொன்றுக்கு ரூ. 1,000 வழங்கப்படும். இத்தொகை ஒன்பதாவது வகுப்பு முதல் பன்னிரண்டாவது வகுப்பு வரை தேர்ச்சி பெற்ற மாணவர்களிலிருந்து நான்கு ஆண்டுகளுக்கு வழங்கப்படும். இத்திட்டம் 1991–92 கல்வி ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. 1990—91-ல் எட்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்களிலிருந்து தெரிந்தெடுக்கும் தேர்வு பிப்ரவரி-92-ல் நடத்தப்பட்டது. அடுத்துவரும் ஆண்டுகளில் இத்தேர்வு முறைப்படி மே மாதம் நடைபெறும். இறுதி யாக அரசுக்கு ஆண்டுதோறும் ரூ. 84 லட்சம் செல வாகும்.

15. 1986-ம் ஆண்டு தேசீய கல்விக் கொள்கையின்படி தமிழகத்தில் பாடத்திட்டத்தினையும் மற்றும் கலைத் திட்டத்தினையும் திருத்தி அமைக்கும் தேவை ஏற்பட் டது. அதன்படி, உயர்மட்டக்குழுவின் வழிகாட்டலு டன், பல்வேறு துணைக் குழுக்களால் 1–12 வகுப்புகளுக் குரிய திருத்தப்பட்ட கலைத்திட்டமும், பாடத்திட்ட மும் தயாரிக்கப்பட்டது. திருத்தப்பட்ட கலைத் திட் டத்தையும், பாடத்திட்டத்தையும் 1988–89-ம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்திட அரசு அனுமதி வழங்கியது. திருத்தப்பட்ட பாடத்திட்டத்திற்கேற்ப பல்வேறு பகுதி களுக்குரிய புதிய பாடப்புத்தகங்கள் 1988–89-ம் ஆண்டு முதல் மூன்று வளர்ச்சிக்கட்ட நிலையில் வெளியிடப் பட்டது. மேல்நிலை வகுப்புகளுக்குரிய புதிய பாட புத்தகங்கள் வெளியிடும் கடைசி கட்டநிலை 1991-ஆம் ஆண்டில் நிறைவுற்றது.

ஆசிரியர் நலதேசீய நிறுவனம்.

16. ஆசிரியர் நல தேசீய நிறுவனத்தால் (1962-ம் ஆண்டு முதல் ஏற்படுத்தப்பட்டது) வசூல் செய்யப் படும் தொகையை (1) உடல் நலிவுற்று அவதியுறும் ஆசிரியர்கள் மற்றும் அவர்களை சார்ந்தவர்களுக்கு உதவி புரியவும் (2) மேல் வகுப்பு பயிலும் ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு படிப்புதவித் தொகை வழங்குவதற் காகவும் பயன்படுத்தப்படுகிறது. 1991-ம் ஆண்டு ஆசிரியர்தின விழாவினையொட்டிய கொடி விற்பனை மூலமாகவும் மற்றும் நன்கொடை மூலமாகவும், ரூ. 9,31,608 வசூல் செய்யப்பட்டது. இத்தொகை யில் ரூ. 85,394 புதுடெல்லியில் உள்ள ஆசிரியர் நல தேசீய நிறுவன நிதிக்கு மாற்றப்பட்டது. வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நுட்ப பட்டப்படிப்பு பயில் வோருக்கு படிப்புதவித் தொகையாக ஆண்டுக்கு ரூ. 1000-மும் தொழில் நுட்ப பட்டய படிப்புபயில்வோ ருக்கு படிப்புதவித் தொகையாக ஆண்டுக்கு ரூ. 500-ம் வழங்கப்படுகிறது. 1991-92-ம் ஆண்டில் படிப்புத வித் தொகை பெறுவோர்கள் எண்ணிக்கை 73 ஆகும். காசநோய் போன்ற சில குறிப்பிட்ட நோய்களால் அவதி யுறும் ஆசிரியர்களுக்கு ஒட்டுமொத்த உதவித் தொகையாக ரூ. 750 அனுமதிக்கப்படுகிறது. ரூ. 28,30,000 செலவில், சைதாப்பேட்டை ஆசிரி யர் கல்வி கல்லூரி வளாகத்தில் ''ஆசிரியர் இல்லம்'' கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. பள்ளி ஆசிரியர்களுக்கான விருது வழங்கும் திட்டத்தின் கீழ் 228 ஆசிரியர்களுக்கு 1990—91-ம் ஆண்டுக்கான விருதுகள் வழங்கப்பட்டன. 112 தொடக்கப்பள்ளி ஆசிரியர் களுக்கும், 112 உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும், 2 ஆங்கிலோ இந்தியப்பள்ளி ஆசிரியர் களுக்கும் மற்றும் 2 மெட்குரிலேஷன் பள்ளி ஆசிரியர்களுக் கும் விருதுகள் வழங்கப்பட்டன. இந்த விருது ஒவ் வொன்றும் ரூ. 1000 பணமுடிப்பும், வெள்ளிப்பதக்கம் மற்றும் தகுதிச்சான்றிதழ் ஆகியவற்றைக் கொண்ட தாகும். தமிழகத்தைச்சார்ந்த 15 தொடக்கப்பள்ளி ஆசிரியர்களும் மற்றும் 7 இடைநிலைப்பள்ளி ஆசிரியர் களும் ஆசிரியர்களுக்கான தேசீய விருது பெற்றுள்ளனர்.

(iii) மேல்நிலைப்பள்ளி கல்வி :

1991—92-ம் கல்வி ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2084 மேல்நிலைப்பள்ளிகள் செயல்பட்டு வந்தன :—

அட்டவணை 12.

பள்ளிகளின் வகை :	
அரசு	869
தனியார்	762
நகராட்சி/மாநகராட்சி ..	68
மெட்ரிகுலேஷன் ..	276
ஆங்கிலோ இந்தியன் ...	28
மத்திய கல்வி வாரியத்துடன் இணைந்தவை ...	81
மொத்தம்	2084

மேற்கண்ட 2084 மேல்நிலைப்பள்ளிகளில் அரசுப் பள்ளிகள் 21, தனியார் பள்ளிகள் 18 ஆக மொத்தம் 39 மேல்நிலைப்பள்ளிகள் 1991–92 கல்வி ஆண்டில் புதிதாக துவக்கப்பட்டவை ஆகும் (மத்திய கல்வி வாரியத்துடன் இணைந்த பள்ளிகள் இதில் சேர்க்கப்படவில்லை) 1991–92-ம் கல்வி ஆண்டில் மேல்நிலைப் பள்ளிகளில் பயின்று வந்த மாணவ மாணவியர் எண்ணிக்கை பின்வருமாறு :—

அட்டவணை-13

	மாணவர்	மாணவியர்	மொத்தம்
பொதுப் பாடங்கள்	2,42,677	1,72,918	4,15,595
தொழிற் பாடங்கள்	54,264	38,059	92,323
மொத்தம் ..	2,96,941	2,10,977	5,07,918

அட்டவணை-14

வரிசை எண்.	பாடத்தின் பெயர்.	பள்ளிகளின் எண்ணிக்கை.	தொழிற்கல்வி பயிலும் மாணவர்/மாணவியர்		
			மாணவர்	மாணவியர்	மொத்தம்
1.	வேளாண்மை	151	8904	391	9295
2	மனை இயல்	97	124	5625	5749
3.	வணிகத் துறை	1074	24118	23446	47564
4.	பொறியியலும் தொழில் நுட்பவியலும்	572	20541	2023	22564
5.	உடல் நலம்	121	364	6485	6849
6.	இதர பாடங்கள்	6	213	89	302
	மொத்தம் ..	2021	54264	38059	92323

பகுதி நேர தொழிற் பாட ஆசிரியர்களிடமிருந்து தங்களின் பணியினை வரன்முறை செய்து போதிய ஊதியம் அளிப்பதற்கு அடிக்கடி கோரிக்கைகள் பெறப்பட்டு வந்தன. 1990—91-ம் ஆண்டில் 800 இரு பகுதி நேர தொழிற்பாட ஆசிரியர்களின் பணியினை வரன்முறை செய்தும் அந்த ஆசிரியர்களுக்கு ரூ. 1400—2620 ஊதிய விகிதம் நிர்ணயம் செய்தும் அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. ஏனைய பகுதி நேர தொழிற் கல்வி ஆசிரியர்களின் பணியினை வரன்முறை செய்வது குறித்தும் அரசு பரிசீலிக்கும்.

1984–85-ம் கல்வி ஆண்டிலிருந்து பள்ளிகளில் கணிப்பான் அறிவியல் சார்ந்த பாடபோதனை செயல் படுத்தப்பட்டு வருகிறது. நடுவண் அரசால் நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டத்தின் கீழ் நமது மாநிலத்தில் இதுவரை 137 உயர்/மேல்நிலைப் பள்ளிகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேல் நிலைப்பள்ளித் தொழிற்கல்வி பயில்வோர் வேலை வாய்ப்பை மேலும் அதிகரிக்கும் பொருட்டு வேலை நியமனங்களுக்கும், உயர்கல்விக்கும் கீழ்க்கண்ட தொழிற்பாடங்கள் அரசினால் ஏற்பளிக்கப்பட்டுள்ளன;

1) அலுவலகக் கல்விப்பணி (Office Secretary ship) பாடத்தின் கீழ் வழங்கப்படும், தட்டச்சு (மேல்நிலை) மற்றும் சுருக்கெழுத்து (கீழ்நிலை).

2) தொழிற் கல்வி பயிலும் மாணவர்களும் மேல் நிலைக்கல்வி, பொதுப் பிரிவு மற்றும் தொழிற் பிரிவுகளில் பயின்ற பாடங்களுக்கேற்பவும் பல்கலைக் கழக விதி முறைகளுக்கு உட்பட்டும் பொறியியற் கல்லூரிகள் மருத்துவம் மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகள், வேளாண்மைக்கல்லூரிகள், கால்நடை மருத்துவக் கல்லூரிகள் ஆகியவற்றில் சேரத் தகுதியுடையவராவர்.

3) அவர்கள் பல் தொழில் பயிலகங்களில் நேரடியாக இரண்டாமாண்டில் சேரத் தகுதியுடையவராவர். இதற்காக 10 விழுக்காடு இடங்கள் ஒதுக்கப் பட்டுள்ளன.

4. தொழிற் கல்வியில் செவிலியர் பணி (Nursing Course) பாடம் படித்தவர்கள் நேரடியாக செவிலியர் பணி இளங்கலை வகுப்பில் இரண்டாமாண்டில் சேரத் தகுதியுடையவராவர்.

மேல்நிலைப்பள்ளி அளவில் கல்வியை வாழ்க்கை தொழிற்கல்வி மயமாக்கும் திட்டம் ஏற்கெனவே 400 மேல்நிலைப்பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டுவருவதுடன், 1991—92-ம் கல்வி ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்த மேலும் 100 மேல்நிலைப்பள்ளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கென பிப்ரவரி திங்களில் நடுவண் அரசிடமிருந்து 7.25 கோடி ரூபாய் பெறப்பட்டுள்ளது.

நாட்டு நலப் பணித்திட்டம் மைய அரசு மற்றும் மாநில அரசு உதவியினை 7 : 5 என்ற விகிதத்தில் பெற்று செயல் படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் படி தற்போது அன்றாட நடவடிக்கைகளுக்காக மாணவர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு பொதுத் திட்டத்தில் ரூ. 120-ம் சிறப்புப் பயிற்சித் திட்டத்தில் ரூ. 200 ஆக கணக்கிட்டு வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 1991–92–ல் நாட்டு நலப் பணித்திட்டத்தில் பங்கு கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை மேல்நிலைப் பள்ளிகளில் 50,000. ஒரு பள்ளிக்கு 50 மாணவர்கள் வீதம் 1,000 பள்ளிகளிலிருந்து பங்கேற்றனர்.

தொண்டுள்ளம் கொண்ட பாரத சாரண, சாரணியர் இயக்கம் தமிழ்நாட்டில் எல்லா வகைப் பள்ளிகளிலும் நடைபெற்று வருகின்றது. தமிழ்நாட்டில் தற்போது சாரணர் 0.74 லட்சமும், சாரணியர் 0.43 லட்சமும் உள்ளனர். இவ்வெண்ணிக்கை இந்தியா அனைத்திலுமுள்ள சாரண, சாரணியர் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்காகும். இந்த இயக்கம்

4,303 சாரண ஆசிரியர்கள் மற்றும் 1,311 சாரண ஆசிரியைகள் ஆகியோரைக் கொண்டு 3,768 பள்ளிகளில் திறம்பட செயல்பட்டு வருகிறது. இந்நாட்டில் வருங் காலக் குடிமக்களாகிய மாணவர்களிடத்தில் நன்னடத் தையைஉருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

சாரண சாரணியர் இயக்கத்திற்கென பள்ளிமாணவ மாணவியர் ஒவ்வொருவரிடமிருந்தும், ஒரு ரூபாய் சிறப்புக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் பாரத சாரண சாரணியர் இயக்க நிர்வாக செலவிற்கென மாநில அரசு 5 இலட்சம் ரூபாய் மானியம் வழங்குகிறது.

தற்போது இம் மாநிலத்திலுள்ள 5,000 பள்ளி களில் செஞ்சிலுவைச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 3.80 லட்சம் மாணவ, மாணவியர் பங்கு பெறுகின்றனர். உடல் நலம் மற்றும் நலவியல், பிறர்க்கு சேவை செய்வது மற்றும் நட்புறவை வளர்ப்பது ஆகியவை இளைஞர் செஞ்சிலுவை சங்கத்தின் நோக்கங்களாகும்.

1991–92–ம் ஆண்டிலிருந்து தனிக் கட்டண நிதி யாக ரூ. 1 இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

(iv) ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி ஆசிரியர் கல்வி.

மாநிலத்தில் ஆசிரியர் கல்வி மறறும் பயிற்சி முறையில் மேம்பாடு காணும் நோக்கத்தில் 1990–ம் ஆண்டு புதிய இயக்ககம் தோற்றுவிக்கப்பட்டது. இந்த புதிய இயக்ககம் பின்வரும் பல்வேறு அமைப்பு களை கொண்டதாகும்.—

(1) மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம். (SCERT)

(2) கல்வியியல் உயர்படிப்பு நிறுவனங்கள் (IASE) மற்றும் ஆசிரியர் கல்வியியற் கல்லூரி.

(3) மாவட்ட கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (DiET) உள்ளிட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்.

(4) ஆங்கில மொழி கற்பிக்கும் மையம் மற்றும் மாவட்ட ஆங்கில மொழி பயிற்சி மையம் (கோயம்புத்தூர்).

இந்த ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்ட பல புதுமை காணும் திட்டங் கள் ஆசிரியர்களிடையே குறிப்பிடத்தக்க விளைவு களை எற்படுத்தியுள்ளன. இத்தகைய ஆராய்ச்சி திட்டங்களினால், பாட கலைத் திட்டங்களில் பல மாற்றங்கள் செய்ய முடிந்தது, மற்றும் புதிய உத்திகளையும் அணுகுமுறையையும் கொண்டு அண்மைக்கால கற்பித்தல் முறைகளில் ஆசிரியர் களுக்கு மறு பயிற்சிகள் வழங்கவும் மற்றும் மாணவர் களுக்கு கற்றுணர்தல் முறையில் கல்வி அறிவு பெற்று பயன் பெறவும் முடிந்தது.

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்காக ஏற்படுத்தப்பட்ட இந்த உயர்மட்ட நிறுவனம், கல்வித்தர மேம்பாட்டிற்காக சில குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கல்வியியல் உயர்படிப்பு நிறுவனங்கள் (IASE) மற்றும் ஆசிரியர் கல்வியியற் கல்லூரி (CTE).

சைதாப்பேட்டையில் உள்ள ஆசிரியர் கல்வியியல் கல்லூரியையும், மற்றும் சீமாட்டி வெலிங்டன் கல்வியியல் கல்லூரி ஆகியவற்றை கல்வியியல் உயர் படிப்பு நிறுவனங்களாக உயர்த்தி அரசு அனுமதி வழங்கியுள்ளது. இது தவிர, வேலூர், ஒரத்தநாடு. குமாரபாளையம், புதுக்கோட்டை மற்றும் கோயம்புத்தூரில் அமைந்துள்ள கல்வியியற் கல்லூரி களை, ஆசிரியர் கல்வியியற் கல்லூரிகளாக உயர்த்தி அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த நிறுவனங்களில் 1,120 மாணவர்கள் ஆண்டுதோறும் அனுமதிக்கப்படுகின்றனர்.

மாவட்டக் கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம்

மாநிலத்தில் உள்ள 14 அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை மாவட்டக் கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களாக இரண்டு கட்ட நிலையில் உயர்த்தி அரசு அனுமதி வழங்கியுள்ளது. மூன்றாவது கட்ட நிலையில் 1992-93 கல்வி ஆண்டு முதல் மேலும் ஏழு மாவட்டக் கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் தொடங்கப்படும். இந்நிறுவனங்களில் ஆண்டுதோறும் 50 மாணவர் கள் (25 ஆண், 25 பெண்) சேர்க்கப்படுகின்றனர். பணியிடைப் பயிற்சி நடத்துவதற்காக முதல்கட்ட மாக 1989-90-ல் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ரூ. 3 லட்சம் வீதம் மொத்தம் ரூ. 21 லட்சம் அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதைப் போன்ற பணியிடைப் பயிற்சி நடத்துவதற்காக 1990-91ம் ஆண்டிலும் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ரூ. 3 லட்சம் வீதம் மொத்தம் ரூ. 42 லட்சம் அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி மாவட்டக் கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மூலமாக இதுவரை 770 பணியிடைப் பயிற்சி திட்டங்கள் நடத்தப்பட்டு, 19,740 ஆசிரியர்கள் பயன் பெற்றுள்ளனர்.

ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்.

மேலே தெரிவிக்கப்பட்ட 14 மாவட்டக்கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் தவிர அங்கீகரிக்கப்பட்ட 85 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்

இயங்குகின்றன. ஒவ்வொறு நிறுவனத்திலும் ஆண்டு தோறும் 40 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். ஏற்கனவே ஏராளமான ஆசிரியர் பயிற்சி பெற்றவர் வேலை வாய்ப்புக்காக வேலை வாய்ப்பு நிறுவனத்தில் பெயர்களை பதிவு செய்துகொண்டு காத்திருக்கும் நிலை இருப்பதால், மறு ஆணை பிறப்பிக்கப்படும் வரை புதிய தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் ஏற்படுத்துவதை அனுமதிக்கக் கூடாது என அரசு முடிவு செய்துள்ளது.

ஆங்கில மொழி போதனா மையம்.

1967-68ம் ஆண்டு முதல் ஆங்கில மொழி கற்பித்தலுக்காக ஆங்கில மொழி கற்பித்தல் மையங்களில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. (தற்போது எட்டு மையங்கள்) 1967–68 முதல் 1991–92 வரை 65,000 இடைநிலை ஆசிரியர்களும், 17,000 பட்டதாரி ஆசிரியர்களும் பயிற்சி பெற்றுள்ளனர்.

(v) அரசுத் தேர்வுகள்.

அரசுத் தேர்வுத்துறை, 1911-ம் ஆண்டு முதல் இடைநிலைக் கல்விச் சான்றிதழ் பொதுத் தேர்வினையும், 1980-ம் ஆண்டிலிருந்து மேல்நிலைத் தேர்வினையும் நடத்தி வருகிறது. இந்த இயக்குநரகத்தால் 42 தேர்வுகள் நடத்தப்படுகின்றன. 1991-ம் ஆண்டில் இடைநிலைக் கல்விச் சான்றிதழ் பொதுத் தேர்வினை 5.51 இலட்சம் மாணவர்களும், 2.95 இலட்சம் மாணவர்கள் மேல்நிலைத் தேர்வினையும் எழுதியுள்ளார்கள் இந்த ஆண்டு 8.91 இலட்சம் மாணவர்கள் இடைநிலைக் கல்விப் பொதுத்தேர்வினையும், மேல்நிலைக் கல்விப் பொதுத்தேர்வினையும் மார்ச்/ஏப்ரல் 1992-ல் தேர்வெழுதுகிறார்கள். இடைநிலைக் கல்விச் சான்றிதழ் பொதுத் தேர்வு, மேல்நிலைத் தேர்வு, ஆசிரியர்

பயிற்சி பட்டயத்தேர்வு, மெட்ரிகுலேஷன் தேர்வு, ஆங்கிலோ இந்தியன் பள்ளி இறுதித் தேர்வு, மருந்தாளுநர் பட்டயத்தேர்வு முதலியன மைய மதிப்பீடு முறையில் விடைத்தாட்கள் திருத்தப்படுகின்றன. இத்தேர்வுகளின் முடிவுகள் தேர்வு முடிந்த 45 நாட்களில் வெளியிடப்படுகின்றன. மதிப்பெண் சான்றிதழ்கள், மற்றும் மதிப்பெண் பட்டியல்கள் அனைத்தும் தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் நாளிலேயே பள்ளிகளில் கிடைக்கும்படி வழங்கப்படுகிறது.

அட்டவணை—15

இடைநிலைக் கல்விச் சான்றிதழ் பொதுத் தேர்வு மற்றும் மேல்நிலைத் தேர்வுகள் மாணவர் மாணவியர் எண்ணிக்கை.

வருடம்.	எஸ்.எஸ்.எல்.சி.		மேல்நிலைத் தேர்வு.	
	வருகை புரிந்தவர் மொத்தம்.	தேர்ச்சி பெற்றவர். விழுக்காடு.	வருகை புரிந்தவர் மொத்தம்.	தேர்ச்சி பெற்றவர் விழுக்காடு.
(1)	(2)	(3)	(4)	(5)
1989	5,07,139	53.6	2 58,695	58.7
1990	5,65,217	57.5	2 86,305	68.6
1991	5,51,631	59.4	2 94,955	64.0
மாணவர்	2,34,585	55.8	1,14,391	59.0
மாணவிகள்	1,65,367	64.5	93,205	70 0
தனி மாணவர்	1,51,679		87,359	
	5 51 631		2,94,955	

1992—8.91 இலட்சம் மாணவர்கள் இடைநிலை மற்றும் மேல்நிலைத் தேர்வு எழுத உள்ளனர்.

2. இடைநிலைக் கல்விச் சான்றிதழ் பொதுத் தேர்வு மற்றும் மேல்நிலைத் தேர்வு ஆகிய மாநில அளவிலான பெரிய தேர்வுகளுடன் ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் தேர்வினையும் இத்துறை நடத்தி வருகிறது. தொழில் நுட்பத் தேர்வில் நெசவு, இசை, தச்சுவேலை, அச்சுப்பிரிவு போன்ற வேலை சார்ந்த தேர்வுகளும் இத்துறையால் நடத்தப்பட்டு வருகின்றன. தேசிய திறனாய்வுத் தேர்வு (முதல் கட்டம்) அகில இந்திய முறைப்படி சுமார் 9,500 மாணவர்களுக்கு ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வருகிறது.

அகில இந்திய தேர்வாணைக் குழுவினரால் நடத்தப்படும் இந்திய ஆட்சிப் பணிக்கான (ஆரம்ப மற்றும் இறுதித் தேர்வு) தவிர, மத்திய பொது பணியாளர் தேர்வுக் குழு நடத்தும் பொறியாளர் தேர்வும், இதர 12 தேர்வுகளும் மற்றும் பணியாளர் தேர்வுக்குழுவின் சில தேர்வுகளும் இத்துறையின் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசு அறிவித்ததற்கேற்ப ஊரக மாணவர்களின் திறனாய்வுத் திட்டம் 1991-92-ல் ஏற்படுத்தப்பட்டது. இந்த சிறப்புத் திட்டம் கிராமப்புற மாணவர்களின் திறனை ஆய்ந்து அதற்காக ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவருக்கும் ரூ. 1,000 ஆண்டு தோறும் 4 வருடங்களுக்கு வழங்கப்பட உள்ளது. 50 மாணவர்கள் மற்றும் 50 மாணவிகள் இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுப்பணம் பெற்று பயன்பெற உள்ளனர். இத்தேர்வில் மாணவர்களை தேர்வு செய்ய கிராமப்புறங்களிலுள்ள பள்ளி மாணவர்களின் திறனாய்வுத் தேர்வு இத்துறையால் 23 பிப்ரவரி 1992-ல் நடத்தப்பட்டுள்ளது.

அத்தியாயம்-III.

ஆசிரியர் தேர்வு வாரியம்.

தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் வரம்பிற்குட் பட்ட பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்த ஆசிரியர் பணியிடங்களுக்கு தேர்வு செய்ய தனியாக ஒரு ஆசிரியர் தேர்வு வாரியம் 1988 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் அமைக்கப்பட்டது. அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் முறையான பணியிடங் களுக்கு ஆசிரியர்களைத் தேர்வு செய்ய, மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலரைத் தலைவராகவும், பள்ளி கல்வி இணை இயக்குநர் பணி நிலையில் ஒரு உறுப்பினர் மற்றும் ஒரு உறுப்பினர்-செயலர் ஆகியவர்களையும் தேவையான இதர அலுவலகப் பணியாளர்களையும் கொண்டு தேர்வு வாரியம் அமைக்கப்பட்டது. பள்ளிக் கல்வி இயக்குநரால் அளிக்கப்படும் ஆசிரியர் தேவைப் பட்டியலின் அடிப்படையில், வேலை வாய்ப்பு அலுவலகத்தில் உள்ள தகுதி வாய்ந்தவர்களின் பட்டியல் பெற்று, நேர்முகத் தேர்வு நடத்தி, தகுதியான ஆசிரி யர்களைத் தேர்வுக்குழு தேர்ந்தெடுக்கிறது. தேர்வு வாரியத்தின் தலைவர், உறுப்பினர், உறுப்பினர்-செயலர், ஒரு சம்பந்தப்பட்ட பாட நிபுணர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநரின் பிரதிநிதி ஆகியோரடங்கிய குழு ஆசிரியர்களைத் தேர்வு செய்கிறது.

2. 26—9—1990 ஆம் நாளிட்ட கல்வித்துறை, அரசாணை எண் 1357-ன்படி ஆசிரியர் தேர்வு வாரி யம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. கல்லூரிக் கல்வி, சட்டக் கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வி ஆசிரியர் களைத் தேர்ந்தெடுக்க முதுநிலை இந்திய ஆட்சிப்பணி அலுவலர் தலைவராகவும், இயக்குநர் நிலையில் இரு உறுப்பினர்கள் (ஒருவர் பள்ளிக் கல்வி துறையைச் சார்ந்தவராகவும் மற்றொருவர் கல்லூரிக் கல்வித் துறையைச் சார்ந்தவராகவும்) மற்றும் இணை இயக்கு நர்/கூடுதல் இயக்குநர் நிலையில் பள்ளிக் கல்வி/ கல்லூரிக் கல்வி/தொழில் நுட்பக் கல்வி ஏதேனும் ஒன் றைச் சார்ந்த ஒரு உறுப்பினர்-செயலர் ஆகியோரையும் கொண்டு வாரியம் அமைந்துள்ளது. அரசினர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், சட்டக் கல்லூரிகள்,

பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கான ஆசிரியர்களைத் தேர்வு செய்ய இவ்வாரியம் தகுந்த நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. 1988-ல் தொடங்கியதிலிருந்து பள்ளிக் கல்வித்துறைக்காக இதுவரை 4,522 ஆசிரியர்கள் இவ்வாரியத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

1991–92 ஆம் ஆண்டில் (1992 பிப்ரவரி மாதம் வரை) 641 நபர்கள் (காத்திருந்தோர் பட்டியலில் உள்ளவர்கள் உட்பட) முதுகலைப் பட்டதாரி மற்றும் பட்டதாரி ஆசிரியர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

1988 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் 1992ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் வரை தேர்வு செய்யப்பட்டவர்கள் விவரம்.

அட்டவணை 16.

வரிசை எண்.	ஆண்டு.	நேர்காணலில் கலந்து கொண்டவர் எண்ணிக்கை.	தேர்வு செய்யப் பட்டவர் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
1.	1988–89	5,332	1,996
2.	1989–90	8,082	1,208
3.	1990–91	2,928	677
4.	1991–92 (பிப்ரவரி வரை).	2,548	641
	மொத்தம்	18,890	4,522

அத்தியாயம் IV.

தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம்

புதிய கல்விக் கொள்கைக்கிணங்க, தயாரிக்கப்பட்ட 1 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான தரமான பாட நூல்களை, நியாயமான விலையில் நிறுவனம் வெளி யிடுகிறது. புதிய வரிசையிலான இப்பாட நூல்கள் 1988-89லிருந்து 1990-91 வரையிலான காலக்கட்டத் தில் வெளியிடப்பட்டன. தமிழ்மொழி மற்றும் தமிழ் வழியில் 99 தலைப்புகளிலும், தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது ஆகிய சிறுபான்மை மொழிகளில் 136 தலைப்புகளிலும், ஆங்கில மொழி, ஆங்கில வழி நூல் கள் மற்றும் ஆசிரியர் கையேடுகள் 137 தலைப்புகளி லும் தயாரித்து வெளியிடப்பட்டன. 1991-92ஆம் கல்வியாண்டில் 457 இலட்சம் பாட நூல் படிகள் மாநிலத்திலுள்ள 118 இலட்சம் மாணவர்களுக்கு விநி யோகிக்கப் பட்டுள்ளன. சிறுபான்மைமொழி பாட நூல்களை வழங்குவதில் மாநில அரசு மேற்கொண்ட முயற்சிகள் குறித்து மைய அரசின் சிறுபான்மையினர் ஆணையம் பாராட்டியுள்ளது. 1992-93ஆம் கல்வி யாண்டிற்காக இந் நிறுவனம் 305 தலைப்புகளில் 306 இலட்சம் பாட நூல் படிகளை அச்சிடும் பணியை மேற்கொண்டுள்ளது. இவற்றால் பயனடையும் மாண வர்களின் எண்ணிக்கை 119 இலட்சம் ஆகும்.

2. தவிர, 1992-93ஆம் கல்வியாண்டில் இலவசப் பாட நூல் வழங்கும் திட்டத்தின கீழ் இந்நிறுவனம் ரூ. 18.51 கோடி பெறுமானமுள்ள 362 இலட்சம் பாட நூல் படிகளை வழங்கவுள்ளது. இவற்றால் தொடக்க மற்றும் நடுநிலைக் கல்வி பள்ளிகளில் பயி லும் 62 இலட்சம் மாணவர்கள் பயனடைவார்கள்.

55 வட்டக் கூட்டுறவு மொத்த விற்பனைச் சங் கங்கள், 2,099 கூட்டுறவுத் துறையின் கீழ் உள்ள சில் லரைக் கடைகள் 1,006 தனியார் சில்லறைக் கடைகள் பாட நூல் விநியோகப் பணியினை மேற்கொள்கின்றன.

சலுகை விலையில் குறிப்பேடுகள் வழங்கும் திட்டம் இந்நிறுவனத்திடம் 1980ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது. மாநில முழுவதுமுள்ள சுமார் 300 குறிப்பேடு தயாரிப்பாளர்களை இந்நிறுவனம் இப்பணிக்காக அமர்த்தியுள்ளது. 1991-92ஆம் ஆண்டில் ரூ. 325 இலட்சம் பெறுமானமுள்ள குறிப்பேடுகள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை 17.

தமிழ்நாட்டில் பாடநூல் நிறுவனத்தால் விநியோகிக்கப்பட்ட பாடநூல்கள் விவரம்,

(இலட்சத்தில்)

வரிசை எண்	மொழி	1987-88	1988-89	1989-90	1990-91	1991-92
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1	தமிழ்	88.67	99.84	113.73	122.43	102.82
2	ஆங்கிலம்	53.12	63.57	70.13	79.06	65.39
3	தெலுங்கு	0.50	0.52	0.54	0.55	0.54
4	மலையாளம்	0.25	0.26	0.27	0.28	0.34
5	கன்னடம்	0.08	0.09	0.10	0.11	0.12
6	உருது	0.24	0.26	0.27	0.27	0.33
	மொத்தம்	142.86	164.54	185.04	202.70	169.54

அத்தியாயம் V.

பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி

இந்திய அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்னும் இலக்கை அடைய வயதுவந்தோருக்கான எழுத்தறிவுத் திட்டமும் பள்ளிசாராக் கல்வியும் முக்கியமான கல்வி குறிக்கோள்களாக உள்ளன. இதுவரை பல்வேறு வகை யான திட்டங்கள் மூலம் வயதுவந்தோருக்கு கல்வி கற் பிக்கச் செய்த முயற்சிகள் பெரும்பாலும் ஓரளவே பய னைத் தந்துள்ளன. பள்ளிக் கல்வியில் இடையில் நின்றுவிடுபவர்கள் விகிதம் அதிகமாக உள்ளதால் எழுத் தறிவு பெறாத வயதுவந்தோர் எண்ணிக்கை பெருக்கம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதுவரையில் வயதுவந்தோர் கல்வியின் மூலம் எடுக்கப்பட்ட முயற்சி கள் போதுமானதாக இல்லை. இடையில் விட்டவர் கள் எண்ணிக்கை 6—14 வயதுப் பிரிவில் 35.57 இலட் சம் (6—11 வயதுப் பிரிவில் 17.87 இலட்சம், 11—14 வயதுப்பிரிவில் 17.70 இலட்சம்) என ஒரு மதிப்பீட் டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு இடையில் விட் டவர்கள் பள்ளிசாரா கல்வி மூலம் பயன் பெற வேண் டியவர்களாக உள்ளனர். இவர்களில் பெரும்பான்மை யினர் சிறுமியர்கள் ஆவர் (20.65 இலட்சம்), சிறுவர் கள் எண்ணிக்கை சற்றுக் குறைவாகவே உள்ளது (14.92 இலட்சம்). 15–35—வயதுப் பிரிவில் எழுத் தறிவு பெறாதவர்கள் எண்ணிக்கை 78 இலட்சம் பேர் உள்ளதும் ஓர் பிரச்சினையாகும். இந்த வயதுப் பிரி வினர்தான் ஆக்கப்பூர்வமான பயன் விளைவிக்கக்கூடிய பிரிவினர் என்பது அரசின் கவனத்தில் கொள்ள வேண் டிய ஒன்றாகும். மேலும், 15—35 வயதுப் பிரிவின ரைத் தவிர்த்து பிற எல்லா வயதுப் பிரிவிகளிலும் கூடுத லாக 100 இலட்சம் பேர் எழுத்தறிவு பெறாதவர்கள் என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே, மாநில அரசு பள்ளிக் கல்வித் திட்டத்துடன் வயது வந்தோர் எழுத்தறிவு திட்டத்தையும் முழுமையான எழுத்தறிவு இயக்கத்தின் மூலம் ஒருங்கிணைத்து அத் துடன் சிறார்களுக்கான பள்ளிசாரா கல்வித் திட்டத் தையும் செயல்படுத்த முயற்சி எடுத்துள்ளது.

1. முழுமையான எழுத்தறிவு இயக்கம்.

2. 1991ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்குப் படி தமிழ்நாட்டில் 7 வயதிற்கு மேற்பட்டவர்களில் எழுத்தறிவு பெற்றவர்கள் சதவிகிதம் 63.72. ஆண் பெண் எழுத்தறிவு சகவிகிதம் முறையே 74.88 மற்றும் 52.29 ஆகும். தமிழகம் நாட்டின் பிற பெரிய மாநில கள்ில் எழுத்தறிவு நிலையில் கேரளாவுக்கு அடுத்து இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை 1991ஆம் ஆண்டு குடிக்கணக்குப்படி தமிழகத்திலும் இந்தியாவிலும் உள்ள எழுத்தறிவு விபரங்களைக் காட்டுகிறது :—

அட்டவணை—18

	இந்தியா		தமிழ்நாடு	
மொத்த மக்கள் தொகை	8,439.30	இலட்சம்	556.38	இலட்சம்
7 வயதுக்கு மேற்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ..	7,004.70	,,	478.47	,,
எழுத்தறிவு பெற்றவர்கள் மொத்தம்	3,642.40	,,	303.83	,,
எழுத்தறிவு விகிதம் :—				
ஆண் ..	63.86	சதவீதம்	74.88	சதவீதம்
பெண் ..	39.42	,,	52.29	,,
மொத்தம் ..	52.11	,,	63.72	,,

3. முழுமையான எழுத்தறிவு இயக்கம் என்பது நம் நாட்டில் 1988ஆம் ஆண்டு துவக்கப் பட்ட மக்கள் இயக்கமாகும். தமிழகத்தில் இது 1991–92ஆம் ஆண்டில் துவக்கப்பட் டது. சமுதாயத்தின் எல்லாப் பிரிவினரின் ஈடுபாட் டுடனும் ஒத்துழைப்புடனும் செயல்படுத்த வேண்டிய திட்டமாகும். ஆர்வமும் ஈடுபாடும் உள்ள ஒவ்வொரு வரும் தங்கள் வாழ்வில் செய்யும் தொழில் தகுதி, பொருளாதார நிலை என்ற வேறுபாடுகளுக்கு அப்பாற்

பட்டு இந்த மாபெரும் பணியில் தங்களைக் கற்றல் சூழலை உருவாக்குபவராக, பயிற்சியாளராக, மதிப்பீட்டாளராக, கருத்தாளராக அல்லது தொண்டராக ஈடுபடுத்திக்கொள்ள முடியும்.

4. மாநிலத்தில் எழுத்தறிவு பெறாதவர்களை 3 வகையாகப் பிரிக்கலாம்.

(i) 6 முதல் 14 வயதுப் பிரிவு

(ii) 15 முதல் 35 வயதுப் பிரிவு

(iii) 35 வயதுக்கும் மேல் உள்ளவர்கள்.

முதல் வகை (6—14 வயது) பள்ளி செல்லும் வயதுப் பிரிவாகும். புரட்சித் தலைவர் எம்,ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் அமுல் செய்யப்பட்டதன் விளைவாக தமிழ் நாட்டில் ஏறத்தாழ முழுமையான சேர்க்கையளவை. எய்தியுள்ளோம். ஆரம்ப கல்வி நிலையில் இடையில் நின்று விடுபவர் 1991 ஆம் ஆண்டில் 20 சதவிகிதமாக குறைந்துள்ளது. முழுமையான சேர்க்கையும் முழுமையாகக் கல்வியைத் தொடரச் செய்து நிலை நிறுத்துவதும் அரசின் வகுக்கப்பட்ட கொள்கையாகும். அரசினால் பள்ளிக் குழந்தைகளுக்காக நடத்தப்படும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் போன்ற ஊக்கப்படுத்தும் திட்டங்கள் அதிகமான குழந்தைகள் பள்ளியில் சேர உதவுகின்றன. இம் முயற்சிகள் குழந்தைகள் 14 வயது வரை எழுத்தறிவு பெற உதவும். எனவே வருங்காலத்தில் 7—14 வயதுப் பிரிவில் எழுத்தறிவு பெறாதவர்கள் 15—35 வயதுப் பிரிவில் சேருவது குறையும். பள்ளிசாராக் கல்வித் திட்டத்தையும், முழுமையான எழுத்தறிவுத் திட்டத்தையும் இணைத்து மாநிலம் முழுவதும் செயல்படுத்தும்போது 2—3 ஆண்டுகளில் எழுத்தறிவு அற்ற நிலை முற்றிலும் நீங்கிவிடும்.

5. இரண்டாவது வயதுப் பிரிவு (15—35) மாநிலத்தில் சமுதாய பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் மிக முக்கியமான வயதுப் பிரிவாகும். இப்பிரிவினர்

மொத்த மக்கட் தொகையில் 40 சதவிகிதமாகவும் செயல்திறன் கொண்ட பிரிவினாராகவும் உள்ளனர். முழுமையான எழுத்தறிவு இயக்கம் இவர்களை செயல் திறன் கொண்ட எழுத்தறிவு பெற்றவர்களாக மாற்றச் செய்யும். தமிழகத்தின் மொத்தமுள்ள 556.38 இலட்சம் மக்கட்தொகையில் சுமார் 78 இலட்சம் பேர் 15—35 வயதுப் பிரிவில் எழுத்தறிவு பெறாதவர்கள் ஆவர். இந்த செயல்திறன் எழுத்தறிவு 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் தேவை. ஆனால் குறைந்த சதவிகிதத்திலுள்ள முதியவர்களுக்கு இத் திட்டம் தேவையில்லை. எனவே 35 வயதிற்கு மேல் 45 வயதுவரையுள்ள எழுத்தறிவு பெறாதவர்கள் அனைவருக்கும் உடனடியாக எழுத்தறிவு அளிக்க வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

6. முழுமையான எழுத்தறிவு இயக்கம் வெற்றி பெற கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவொளி இயக்கம் மூலம் மேற்கொண்டு வருகின்றனர்.

(i) மக்கள் இயக்கத்தை உருவாக்கவும் கற்றல் சூழலை ஏற்படுத்தவும் பல்வேறு செயல்பாடுகள் முழு அளவில் எழுத்தறிவுத் திட்டத்திற்கு முன்னதாக செயல் படுத்தப்படுகின்றன. எழுத்தறிவு இயக்கத்திற்கு முன்னோடி நடவடிக்கைகளில் மக்கள் ஈடுபடுத்தப் படுவார்கள்.

(ii) பெறும் எழுத்தறிவு நிலைகள் கற்றலில் தற்சார்பு உடையவர்களாகக் கற்போரை மாற்ற உதவும் வகையில் அமைய வேண்டும்.

(iiii) முழு எழுத்தறிவு இயக்கம் கற்போரை ஒன்றுபட்டு செயல்படவும் அவர்களது நிலைமைகளைப் புரிந்துகொள்ளவும் தனித்தன்மையை உணரச் செய்யவும், பிரச்சினைகளை முறையாகத் தீர்க்கவும் உதவுகிறது.

7. மாவட்ட எழுத்தறிவுக் குழுவின் தலைவர் என்ற முறையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முக்கிய பணியாற்றுகின்றனர். இயக்கத்தின் அடிப் படைச் செயல்பாடுகள் பின்வருமாறு :

(அ) மாவட்ட எழுத்தறிவுக் குழு : மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாவட்ட எழுத்தறிவுக் குழு அமைப்பு அரசு அலுவலர்கள், மக்கள் பிரதிநிதிகள் அரசு சார்பற்ற நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்படும். இந்த அமைப்பு சங்கங்களின் பதிவு சட்ட விதிமுறைகளின்படி பதிவு செய்யப் படவேண்டும். பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் கொண்ட செயற்குழு ஒன்றும் அமைக்கப்படும். இந்த செயற்குழு திட்டமிடுதல், திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான வழிமுறைகள் ஆகியவற்றை உருவாக்கும்.

(ஆ) தொண்டர்கள், கற்போரை கண்டறிதல் : முழுமையான எழுத்தறிவு இயக்கத்தின் முக்கிய செயல்பாடுகள் பல்வேறு அமைப்புகளின் தொண்டர்கள் மூலமாக செயல்படுத்தப்படுவதால் தொண்டர்களை கண்டறிவது மாவட்ட நிர்வாகத்தின் முக்கிய பணியாகிறது. தொண்டர்களை கண்டறிதல் மிக அவசியமான ஒன்று என்பதால் கற்போர் கணக்கெடுக்கும் போதே தொண்டர்கள் பட்டியலும் தயார் செய்யப் படவேண்டும். ஊக்கப்படுத்தும் இயக்கங்கள், தெருக் கூத்து, பாட்டுகள், குழு நடனங்கள், ஒயிலாட்டம் நாடகங்கள் போன்ற விளம்பரச் செயல்பாடுகள் மூலம் கூடுதலாகக் கற்போறையும் தொண்டர்களையும் கண்டறியலாம்.

(இ) மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தங்கள் மாவட்டங்களின் தேவைகள், நிர்வாக அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையிலும் கீழே குறிப்பிடப்பட்டவைகளைக் கவனத்தில் கொண்டும் கருத்துக்களைத்தயார் செய்கின்றனர்,

(i) ஆய்வு (ii) நிர்வாக இயந்திரத்தை ஈடுபடுத்தல் (iii) கள அலுவலர்களைத் தேர்வு செய்தல் (iv) கற்றல் கற்பித்தல் உபகரணங்களைத் தயாரித்தல் (முதல் நூல்கள்) (v) பயிற்சி முகாம்கள் (vi) விளம்பரம் (vii) மதிப்பீடு மற்றும் (viii) தொடர் கல்வி திட்டத்திற்கான செலவின் வபரம் ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு கற்போருக்கு சுமார் ரூ. 60 என்ற விகிதத்தில் கவனமாகக் கணக்கிடப்படுகிறது. மாநில அரசு ஒப்புதலுக்குப்பின் தேசிய முனைப்பு இயக்க உயர் மட்டக் குழு மூலம் நடுவண் அரசு திட்டத்திற்கான ஒப்புதலை அளிக்கிறதுசெலவினத்தில் மாநில அரசு 3-ல் ஒரு பங்கினையும் நடுவண் அரசு 3-ல் 2 பங்கினையும் ஏற்கின்றன.

8. 1993–94 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டில் முழு எழுத்தறிவு நிலையை ஏற்படுத்தவேண்டும் என்பது தமிழக அரசின் அறிவிக்கப்பட்ட கொள்கையாகும். எனவே 3 திட்டங்களில், முழுமையான எழுத்தறிவு இயக்கத்தைச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டத்தில் 7 மாவட்டங்களில் (காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் புதுக்கோட்டை, கன்னியாகுமரி, மதுரை, வடாற்காடு அம்பேத்கார், திருநெல்வேலி கட்டகொம்மன்) 1991–92ம் ஆண்டில் முழுமையான எழுத்தறிவு இயக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இரண்டாவது கட்டத்தில் 1992–93ல் இராமநாதபுரம், திண்டுக்கல்-அண்ணா, தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதே மில்லத், சென்னை, கோவை, பெரியார், தென்னாற்காடு, சேலம், தருமபுரி, ஆகிய 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். 1993–94ஆம் ஆண்டு இறுதிக் கட்டத்தில் எஞ்சியுள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும்.

அட்டவணை—19.

1991—92-ல் செயல்படும் முழுமையான எழுத்தறிவு இயக்கம்.

	மாவட்டங்கள்.	கற்போர் எண்ணிக்கை (லட்சத்தில்).	திட்டத்திற்கான மொத்த செலவினம்.	இந்திய அரசின் 2/3 பங்குத் தொகை.	இந்திய அரசால் அனுமதிக்கப்பட்ட தொகை.	மாநில அரசின் 1/3 பங்குத் தொகை.	மாநில அரசால் அனுமதிக்கப்பட்ட தொகை.
	(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
				(ரூபாய் இலட்சத்தில்).			
1.	காமராசர்	2.40	150.30	100.30	90.00	50.00	10.00
2.	பசும்பொன் முத்துராமலிங்கம்	1.00	64.80	43.19	43.19	21.61	10.00
3.	புதுக்கோட்டை	2.30	150.00	100.00	75.00	50.00	26.74
4.	கன்னியாகுமரி	0.84	58.80	38.58	25.00	20.22	4.00
5.	திருநெல்வேலி—கட்டபொம்மன்	2.80	182.00	121.00	50.00	61.00	5.00
6.	வடாற்காடு—அம்பேத்கார் ..	4.80	310.00	207.00	85.00	103.00	8.00
7.	மதுரை	4.20	280.00	187.00	75,00	93.00	5.00
	மொத்தம்	18.34	1,195.90	797.07	443.19	398.83	68.74

ஊரக செயல்முறை எழுத்தறிவு திட்டம்.

9. நடுவண் அரசின் 27 ஊரக செயல்முறை எழுத்தறிவுத் திட்டங்களின் 300 மையங்கள் வீதம் 1991–92ம் ஆண்டில் 8,100 மையங்கள் செயல்படுத்தப்பட்டன. இத்திட்டங்களின் மூலம் மொத்தம் 2.43 இலட்சம் கற்போர் பயன்பெற்றுள்ளனர். இந்திய அரசு இத்திட்டத்திற்கான நிதி அமைப்பையும் செயல்பாட்டையும் மாற்றி அமைந்துள்ளது. அதன்படி (அ) கற்பித்தல் கால அளவை 6 மாதமாகவும் (ஆ) ஒரு ஆண்டில் 2 சுற்றுகளாக நடத்தவும் மற்றும் (இ) ஒரு திட்டத்திற்கு 100 மையங்கள் எனக் குறைத்தும் மாற்றி அமைத்துள்ளது. இதன்படி 1992–93-ல் 96 புதிய ஊரக செயல்முறை எழுத்தறிவுத் திட்டங்கள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இவை முழுமையான எழுத்தறிவு இயக்கம் செயல்படுத்தப்படாத மாவட்டங்களில் 15—35 வயதுப் பிரிவில் 2.8 இலட்சம் எழுத்தறிவற்றவர்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும்

தொடர்கல்வித் திட்டம்

10. புதிதாகக் கற்றவர்களுக்கு அவர்களது திறமைகளை நிலைநிறுத்த தொடர் கல்வி மையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தொடர் கல்வி நிலையங்கள் உள்ளூர் தொண்டர்களின் உதவியுடன் செயல்படுத்தப்படுகின்றன. அவற்றின் செயல்பாடுகள் பின்வருமாறு

1. எழுத்தறிவு எண்ணறிவு திறன்களை மேம்படுத்த மாலை வகுப்புகள்.

2. நூலகமாக செயல்படுதல்.

3. செய்தித் தாட்கள் சஞ்சிகைகளுடன் கூடிய படிப்பகம்.

4. பொதுப் பிரச்சினைகளை விவாதிக்கும் விவாத அரங்கு.

5. விளையாட்டு மற்றும் வீர தீர செயல்கள்.

6. பொழுதுபோக்கு மற்றும் கலைநிகழ்ச்சிகள்

7. பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் சார்ந்த செய்திகளை அளிக்கும் பலகணி.

8. ஒலிப்பதிவு நாடாக்களுடன் கூடிய செய்தி வெளியீட்டு மையம்.

தமிழகத்தில் 1,013 தொடர் கல்வி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் 350 தொடர் கல்வி மையங்கள் நடுவண் அரசின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட உள்ளன.

திறன்வளர் திட்டங்கள்.

11. இளைஞர்களின் தொழில் நுட்பத் திறனை வளர்க்க உழைப்போர் பல்நோக்குக் கல்வி நிறுவனங்கள் (ஷிராமிக் வித்யாபீட்) சென்னை, மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்கள் உழைப்போரும் அவர் தம் மக்களும் தம் தொழிலில் தற்காலத் திறன் வளர்ச்சி பெறுவதற்கு உதவியாகக் குறுகிய நீண்டகாலப் பயிற்சிகளை நடத்தி வருகின்றன. அவை (அ) நீண்டகாலப் பயிற்சிகள்—வீட்டு மின் இணைப்பு, நீரேற்றும் எந்திர பழுது பார்ப்பு, தட்டச்சு, திரையச்சு, சுவரொட்டிகள் தயாரித்தல் வானொலி பழுதுபார்த்தல், தொலைக் காட்சிப் பெட்டி பழுதுபார்த்தல் முதலியன.

(ஆ) குறுகிய கால பயிற்சிகள்—சோப்பு தயாரித்தல், தையல் வேலை, சலவைத் தூள், ஷாம்பு ஊதுவத்தி தயாரித்தல் முதலியன.

இதுவரை 5,687 பயிற்சிகள் மூலம் (நீண்டகால மற்றும் குறுகிய காலப் பயிற்சிகள்) 1,84,029 பேர் பயன்பெற்றுள்ளனர். இவர்களுள் 1,48,189 பேர் பெண்கள், 35,840 பேர் தாழ்த்தப்பட்ட மலைஜாதி பிரிவைச் சார்ந்தவர்கள். இதே போன்ற பயிற்சிகள் 10,000 பேர் பயன்பெறத்தக்க வகையில் 1992–93ம் ஆண்டில் நடத்தப்பட உள்ளன. இந்நிறுவனங்களுக்கான முழுச் செலவையும் இந்திய அரசே ஏற்கிறது.

பள்ளிச்சாராக் கல்வித் திட்டம்

12. 6–14 வயதுப் பிரிவைச்சார்ந்த பள்ளிப்படிப்பை பாதியில் விட்டவர்கள், பள்ளிக்கே செல்லாதவர்கள் போன்ற முறையான கல்விக்கு வாய்ப்பற்றவர்கள் நல னுக்கென அமைந்தது பள்ளி சாராக் கல்வித் திட்டம் இது அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்ற திட்டத்தின் ஒருபகுதியாகும். இதில் எழுத்தறி விற்கும், எண்ணறிவிற்கு முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது. சென்னையில் குடிசைப் பகுதியிலும் சிவகாசியில் தொழிற்சாலைப் பகுதிகளிலும் பள்ளிப் படிப்பை பாதியில் விட்ட சிறுவர்களுக்கென இரு திட்டங்கள் செயல்பட்டு வந்தன. இதில் சேர்க்கப் பட்ட சிறுவர்கள் மூன்று ஆண்டு காலம் தொடர்ந்து அதே மையத்தில் படித்து ஐந்தாம் வகுப்பு கல்வித் தகுதியை அடைந்துள்ளார்கள். இத்திட்டத்திற்கான செலவை மத்திய அரசும், மாநில அரசும் 90 : 10 என்ற விகிதத்தில் பெண்கள் மையங்களுக்கும் 50 : 50 என்ற விகிதத்தில் பிற மையங்களுக்கும் செல வினத்தை பகிர்ந்துகொள்கின்றன. 1991–92-ஆம் ஆண்டில் இத்திட்டத்தினால் 6,000 குழந்தைகள் பயன் பெற்றுள்ளனர். இதற்கான செலவு ரூ. 6.88 இலட்சமாகும் (மாநில அரசு ரூ. 2.23 இலட்சம் இந்திய அரசு செலவு ரூ. 4.65 இலட்சம்) 1991–92 ஆம் ஆண்டில் அரசு ஒருங்கிணைந்த ஒரு சிறப்பு பள்ளிசாராக் கல்வித் திட்டத்தை படித்த வேலை யில்லாத இளைஞர்களை பயன்படுத்துவதின் மூலம் படிப்பை இடையில் விட்டவர்களை பள்ளிக் கல்வியில் சேர்ப்பதற்காக திட்டமிட்டது. இத்திட்டத்தை சில மாவட்டங்களில் பரீட்சார்த்தமாக செய்து பார்க்கவும் அதன்பின் விரிவுபடுத்தவும் திட்டமிட்டு வருகிறது.

மலைவாழ் மக்களுக்கான சிறப்புத் திட்டம்.

13. மாநில அரசு மலைவாழ் மக்களுக்காக ஐந்து மலைவாழ் நலத் திட்டப் பகுதிகளில் 1986-ம் ஆண்டு முதல் ஒரு சிறப்பு பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் திட்டத்தை செயல்படுத்தி வரு கிறது. இத்திட்டம் தற்போது சேலம் மாவட்டத்தில்

கொல்லிமலை, ஏற்காடு பகுதிகளிலும், தென்னாற்காடு மாவட்டத்தில் கல்ராயன் மலைப்பகுதியிலும், வடாற்காடு—அம்பேத்கார்; திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்களில் ஜவ்வாது மலைப் பகுதிகளிலும், திருச்சி மாவட்டத்தில் பச்சைமலைப் பகுதியிலும் இயங்கிவருகிறது. இந்த ஐந்து பகுதிகளிலும் 6—14 வயதுப் பிரிவினருக்காக 100 பள்ளிசாராக் கல்வி மையங்களிலும் 15—35 வயதுப் பிரிவினருக்காக 100 வயதுவந்தோர் கல்வி மையங்களிலும் 2,000 சிறார்களும், 2,000 வயதுவந்தோரும் பயன் பெற்று வருகின்றனர். 1991—92-ல் இதற்காக ரூ. 7 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1992—93 ஆம் ஆண்டில் 4,000 பேர் பயன்பெறும் வகையில் ரூ. 11.08 இலட்சம் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

கடலோர மீனவர்களுக்கு வயதுவந்தோர் கல்வி

14. தமிழ்நாட்டின் கடற்கரைப்பகுதிகளில் வாழும் மீனவர்களுக்கு எழுத்தறிவு நல்கிட இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டத்தின் கடற்கரைப் பகுதிகளான கேளம்பாக்கம், திருவொற்றியூர் பகுதிகளில் இரண்டு முன்னோடித் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு திட்டத்திலும் செயல்படும் 100 மையங்கள் மூலம் 6,000 வயதுவந்தோர் (2,820 ஆண்கள் மற்றும் 3,180 பெண்கள்) பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டங்கள் டேனிஷ் அரசின் நிதி உதவியுடனும் இந்திய அரசுக்கும் டேனிஷ் அரசுக்குமான இருவழி ஒப்பந்த அடிப்படையில் அமைந்த வெளிநாட்டு உதவி பெறும் திட்டமாகும். மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்த 200 ஊக்குநர்கள் (94 ஆண்கள் மற்றும் 106 பெண்கள்) இம்மையங்களை நடத்தி வருகின்றனர். கற்போருக்கு இலவசமாக கற்கும் உபகரணங்கள் பலகை, பலப்பம், நோட்டுப் புத்தகங்கள் பென்சில்கள், முதல் நூல்கள் மற்றும் துணை நூல்கள் வழங்கப்படுகின்றன. மீனவர்களுக்காக பிரத்யேகமாக தயாரிக்கப்பட்ட முதல் நூல்களும், துணை நூல்களும் பயன்படுத்தப்படுகின்றன. இவ்விரண்டு திட்டங்களையும் தொடர்ந்து நடத்துவதுடன்

1992-93ஆம் ஆண்டில் கடற்கரையோர மாவட்டங்களில் மேலும் அதிகப்படியான திட்டங்கள் துவக்கப்பட உள்ளன. இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ. 14.37 இலட்சத்தில் டேனிடா (Danida) உதவியாக ரூ. 7 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

அத்தியாயம் VI

கல்லூரிக் கல்வி.

1992—93 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் கல்லூரிக் கல்விக்கு ரூ. 125.87 கோடியும், பல்கலைக் கழகங்களுக்கு மொத்த மானியமாக ரூ. 18.33 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

பொதுக் கல்வி இயக்ககத்திலிருந்து பிரிக்கப்பட்ட கல்லூரிக் கல்வித் துறை 1965 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் நாட்டில் உயர் கல்வி, பல்கலைக் கழக கல்வி தொடர்பான தேவைகளை நிறைவு செய்வதற்கென இயங்கி வருகிறது. தமிழகத்தில் கடந்த ஆண்டுகளில் கல்லூரிகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை குறிப்பிடத் தக்க வகையில் வளர்ச்சி கண்டுள்ளது. தற்போது கல்லூரிக் கல்வித் துறையின்கீழ் 244 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் (அரசு கல்லூரிகள் 54, நிதியுதவி கல்லூரிகள் 132, நிதியுதவி பெறாத கல்லூரிகள் 38) 15 கீழ் திசை கல்லூரிகளும் (நிதியுதவி பெறுபவை 9, நிதியுதவி பெறாதவை 6), 3 உடற் கல்வி கல்லூரிகளும் (நிதியுதவி பெறுபவை) 2 சமுதாயப் பணி பள்ளிகளும் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள 15 பல்கலைக் கழகங்களில் 11 பல்கலைக் கழகங்கள் கல்வித் துறையின்கீழ் வருவனவாகும். அவற்றில் கீழ்க்காணும் 5 பல்கலைக் கழகங்கள் இணைவு அளிக்கும் தன்மையுடையவை—

வரிசை எண்ணும் பெயரும்.	இணைவு பெற்ற கலைக்கல்லூரிகள் எண்ணிக்கை.
1. சென்னை பல்கலைக் கழகம், சென்னை	87
2. மதுரை காமராசர் பல்கலைக் கழகம் மதுரை.	48
3. பாரதியார் பல்கலைக் கழகம், கோவை	33
4. பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சி	38
5. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், திருநெல்வேலி.	38
	244

இதர ஆறு பல்கலைக் கழகங்களான அண்ணா மலைப் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், அழகப்ப பல்கலைக் கழகம், தமிழ் பல்கலைக் கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் மற்றும் ஸ்ரீஅவினாசிலிங்கம் மகளிர் மனை அறிவியல் மற்றும் உயர் கல்வி நிறுவனம் (பல்கலைக் கழகமாகக் கருதப் படுவது) ஆகியன தன்னடங்கியப் பல்கலைக் கழகங் களாகும். கல்லூரிகளின் நிர்வாகம் நிதிக் கட்டுப் பாடு கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் அதிகாரத்தின் கீழும் கல்வி பற்றிய செயல் முறைசாராக் கட்டுப் பாடு அவை இணையப் பெற்ற பல்கலைக் கழகங்களிட மும் உள்ளன.

கல்லூரிக் கல்வி இயக்ககம், கல்லூரிக்கல்வி இயக்கு நர் மற்றும் ஒரு இணை இயக்குநர், 2 துணை இயக்கு நர்கள், சென்னை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூரில் அமைந்துள்ள மண்டல அலு வலகங்களின் 5 துணை இயக்குநர்கள் மற்றும் இதர அலுவலர்களைக் கொண்டதாகும். ஆங்கில மொழிப் போதனையை வளர்ப்பதற்கெனவே தனியாக ஒரு துணை இயக்குநரும் உள்ளார். கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் உள்ள ஆசிரியர்களின் நலத் திற்கு அரசு அதிக முன்னுரிமை அளிக்கிறது. 1988ஆம் ஆண்டில் 1–1–1986 முதல் முன்மேவு பலனுடன் அமுல் படுத்தப்பட்ட பல்கலைக் கழக மானியக் குழு திருத்திய ஊதிய விகிதங்களை தென் மாநிலங்களுக்குள் தமிழக அரசே முதலாவதாக அமுல்படுத்தியது.

மகளிர் கல்வி.

மொத்தமுள்ள 186 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 14 அரசு மற்றும் 38 உதவி பெறும் கல்லூரிகளைச் சேர்த்து 52 கல்லூரிகள் மகளிர் கல்லூரி களாகும். 1990–91 ஆம் ஆண்டிலிருந்து எங்கெங்கு மகளிருக்கெனத் தனியாகக் கல்லூரிகள் இல்லையோ அங்குள்ள ஆடவர் கல்லூரிகளில் மொத்த இடங்களில் 30 விழுக்காட்டிற்குக் குறையாமல் மாணவிகள் சேர்க் கப்படுகின்றனர்.

86–43—10

கடுமையான நிதி நெருக்கடிகளுக்கிடையேயும் தருமபுரி மாவட்டம் கிருட்டிணகிரியில் மொத்தச் செலவினம் ரூ. 50 இலட்சத்தில் 1991–92 ஆண்டுக்குரிய ஒதுக்கீடாக ரூ. 32.39 இலட்சம் செலவில் ஒரு புதிய அரசு மகளிர் கல்லூரியைத் துவக்க அரசு ஆணை பிறப்பித்தது. கல்லூரி கட்டுவதற்குரிய இடம் தெரிவு செய்யப்பட்டு நிர்வாக மற்றும் வகுப்புகளுக்கான கட்டிடங்கள் கட்டும் பணி முன்னேறி வருகிறது. இக்கல்லூரி 1992–93 ஆம் கல்வி ஆண்டிலிருந்து கணிதம், வணிகவியல், கணிப் பொறியியல் மற்றும் கூட்டுச் செயலாண்மை ஆகிய வேலை வாய்ப்பு அதிகமுள்ள பாடங்களுடன் செயல்படத் துவங்கும். கடுமையான நிதி நெருக்கடியைக் கருத்தில் கொண்டு (வளர்ச்சியடைந்து வரும் புதிய இனங்களில் வேலை வாய்ப்புக்கு அதிக முன்னுரிமை உடைய பாடப் பிரிவுகளான கணிப் பொறி அறிவியல், மின்னணுவியல் மக்கள் தொடர்பு மற்றும் வணிக மேலாண்மை ஆகிய பாடங்களை)உதவி பெறும் கல்லூரிகளில் புதிய வகுப்புகளை இனிமேல் மானியம் இல்லாத அடிப்படையில் தொடங்குவது என அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்து அமல்படுத்தியது. அப்படி தொடங்கப்படும் வகுப்புகளும் கணிப் பொறி அறிவியல், மின்னணுவியல் மக்கள் திறன் தொடர்பு, வணிக மேலாண்மை போன்ற வேலை வாய்ப்புக்குள்ளனவாகவே இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. தற்போதும் இது தொடரப்படுகிறது.

தரமேம்பாடும் உயர் கல்வியில் திட்டமிட்ட வளர்ச்சியுமே இத்துறையின் முக்கிய குறிக்கோள்களாகும். அனைத்து 54 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இன்றைய நவீன தேவைக்கேற்ப தங்களது உள்ளமைப்பு வசதிகளை வலுவூட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. மேலும் கணிப் பொறி அறிவியல் போன்ற வேலை வாய்ப்புகள் உடைய பாடத் திட்டங்களை அனைத்து அரசு கல்லூரிகளிலும் தொடங்குவது அரசின் நோக்கமாகும். இது காறும் எட்டு அரசு கல்லூரிகளில் கணிப் பொறி பாட வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் வேலை வாய்ப்புகள் உள்ள பாடத் திட்டங்களான வணிக நிர்வாகம், வணிக மேலாண்மை, விளையாட்டு மற்றும் உடல்

நலக் கல்வி ஆகிய பாடத் திட்டங்களையும் அரசு தொடங்கி வருகிறது. தற்போது அரசு கல்லூரிகளி லுள்ள வசதிகளை எந்த அளவுக்கு அதிக பட்சமாக பயன்பாட்டிற்குக் கொண்டு வர முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு அதிக பொருள் செலவில்லாமல் வேலை வாய்ப்பு கூடுதல் உள்ள பாடத் திட்டங்களை தொடங்க அரசு பெரு முயற்சி எடுத்து வருகிறது.

தமிழ்நாடு கல்லூரிக் கல்விப் பணிக்கான ஆசிரியர் கள் நியமனம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர் வாணைக் குழுவின் அதிகாரத்திநின்று எடுக்கப்பட்டு ஆசிரியர் தேர்வு வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள் ளது. புதியதாக நியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள் தமிழகத்தில் உள்ள இணைப்புத் தகுதியுடைய 5 பல் கலைக் கழகங்கள் மற்றும் புதுவை மத்திய பல்கலைக் கழகம் நடத்தும் கல்விப் பணியாளர் நிறுவனத்தில் பயிற்சி பெறுவர். தற்போது பணியிலுள்ள ஆசிரி யர்களும் தத்தம் பாடப் பிரிவுகளில் உள்ள நவீன முறைகளை அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் கல்விப் பணியாளர் நிறுவனத்தால் நடத்தப்படும் புத்தாக்கப் பயிற்சிகளில் கலந்து கொள்ளச் செய்யப்படுகினறனர்.

ஒவ்வொரு ஆண்டும் மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து தேர்ச்சி பெறும் ஏறத்தாழ 2 இலட்சம் மாணவர்களில் 70,000 பேர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மேல் படிப்பு தொடர வாய்ப்புள்ளது. இதனால் மேல் நிலைப்பள்ளிக் கல்வியில் தேர்ச்சி பெறும் சுமார் மூன் றில் ஒரு பங்கு மாணவர்கள் கலைக் கல்லூரிகளில் தொடர்ந்து படிக்கும் சாதக நிலை ஏற்பட்டுள்ளது.

பிற மாநிலங்களைவிட அதிகமான தன்னாட்சி பெற்ற கல்லூரிகளை தமிழ்நாடு கொண்டுள்ளது. 1986ம் ஆண்டு புதிய கல்விக் கொள்கையின்படி அப்போதிருந்த கல்லூரிகளில் 10 விழுக்காட்டினைத் தன்னாட்சி பெற்ற கல்லூரிகளாக்கும் நோக்கம் கொண்டிருந்தது. ஆனால் தமிழ்நாடு இந்தக் குறியீட்டைக்குறிப்பிடத்தக்க அள வில் மிஞ்சி உள்ளது. மொத்தமுள்ள 186 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 37 கல்லூரிகள் தன்னாட்சிப் பெற்றவையாகும். இப்பரிட்சார்த்த முறை 1977-78ம் ஆண்டிலிருந்து நடைமுறையில் உள்ளதால் இந்த தன்

ணாட்சிக் கல்லூரிகளின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்வது நலம் என தமிழ்நாடு அரசு கருதியது. எனவே தன்னாட்சி பெற்ற கல்லூரிகளின் செயல்பாட்டினை மதிப்பீடு செய்யவும், பிரச்சினைகள் உள்ள சூழல்களை இனம் கண்டு இக்கல்லூரிகளில் கல்வியின் தரத்தை வளர்ப்பதற்கும் மாநில அளவிலான ஒரு குழுவை தமிழக அரசு அமைத்தது. இக்குழு தனது ஆய்வு அறிக்கையினை அரசிடம் சமர்ப்பித்து அதன் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

கல்லூரிக்கல்வித் துறை பல்வேறு படிப்பு உதவித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை வருமாறு :—

1. இந்திய அரசு வழங்கும் தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம்.

10-ஆம் வகுப்பு +2 வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் அதிகபட்ச மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை வழங்க படுகிறது. சம்பந்தப்பட்ட மாணவர்கள் பயிலும் பாடத் திட்டத்தைப் பொறுத்து இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் படிப்புதவித் தொகை ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 720-லிருந்து ரூபாய் 3,600 வரையாக இருக்கும். 1991-92-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 3,680 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 1992-93ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் 42 இலட்சம் இத்திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏறத்தாழ 4,000 மாணவர்கள் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

2. தேசிய கடன் படிப்புதவித் தொகைத் திட்டம் :

இந்திய அரசால் முழுவதுமாக நிதி உதவி அளிக்கப்படும் இத்திட்டத்தின கீழ் பெற்றோர்களுக்கான ஆண்டு வருமானம் ரூ. 25,000-க்கு மிகாத தகுதிவாய்ந்த மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 720-லிருந்து ரூபாய் 1,750 வரை கடன் உதவி அளிக்கப்படுகிறது. அம்மாணவர்கள் கல்வி பயின்று முடித்த பின்னர் இக்கடன் தொகையினை திரும்பச் செலுத்த வேண்டும்

என்ற நிபந்தனையுடன இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 1991-92 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 4,080 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 1992-93ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கென ரூபாய் 30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

3. பள்ளி ஆசிரியர்களில் குழந்தைகளுக்கு மாநில அரசு வழங்கும் படிப்புதவித் தொகைத் திட்டம் :

இத்திட்டத்தின்கீழ் ஆண்டு வருமானம் ரூபாய் 12,000-க்கு மிகைப்படாத பள்ளி ஆசிரியர்களின் பிள்ளைகள் பயன்பெறத் தகுதியுடையவர். மாணவர்கள் பயிலும் பாடப்பிரிவுகளின் அடிப்படையில் உதவித் தொகை ரூபாய் 720-லிருந்து ரூபாய் 1,840 வரை வழங்கப்படுகிறது. 1991-92ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 109 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 1992-93ஆம் ஆண்டிற்கான வரவு—செலவு மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. மாநில அரசின் முதன்மையாக வரும் மாணவர்களுக்கான படிப்புதவித் தொகைத் திட்டம் :

வருமான வரம்பின்றி பள்ளியிறுதி வகுப்பு, மெட்ரிகுலேஷன் மற்றும் பொதுத் தேர்வுகளில் அதிக படிநிலை பெறும் மாணவர்களுக்கு மாநில அரசால் இத்திட்டத்தின்கீழ் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. மாணவர்கள் பயிலும் பாடப்பிரிவின் அடிப்படையில் இவ்வுதவித் தொகை ரூபாய் 500-லிருந்து ரூபாய் 1,200 வரை வழங்கப்படும். 1991-92ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 13 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 1992-93ஆம் ஆண்டிற்கான வரவு—செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கென ரூபாய் 20,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு மதிப்பு உதவி மானியம் :

நல் மதிப்பெண்கள் பெற்ற ஆதிதிராவிடர் / பழங்குடி மாணவர்களை உயர் கல்வி தொடர ஊக்குவிக்கும் வகையில் கூடுதல் மான்ய உதவித் தொகை வழங்கப்படுகிறது. மாணவர்கள் மேல்நிலைப் பள்ளி தேர்வில்

60 விழுக்காட்டிற்கு குறையாத மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 300 அரசு இத்திட்டத்தின் கீழ் வழங்குகிறது. இவ் உதவித் தொகை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்கள் வழக்கமாக பெறும் உதவித் தொகைக்கு மேற்படியாக ஊக்கத் தொகையாக இது அளிக்கப்படுகிறது. 1991-92 ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 2,206 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 1992-93ம் ஆண்டிற்கான வரவு செலவு மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென 2,200 மாணவர்கள் பயன்பெறும் பொருட்டு ரூபாய் 7 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு ஊக்க உதவித் தொகைத் திட்டம் :

அரசின் கொள்கை அளவிலான அடிப்படையில் கல்லூரிகளில் தமிழ் வழியாக பயிலும் மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு தலா ரூபாய் 180 ஊக்கத்தொகையாக அரசால் வழங்கப்படுகிறது. 1991-92ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 23,600 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 1992-93ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கென ஏறத்தாழ 24,000 மாணவர்கள் பயனடையும் பொருட்டு ரூபாய் 48 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. மாணவிகளுக்கான உதவித் தொகை.

அனைத்து வகுப்பைச் சார்ந்த மாணவியர்களும் பயன்பெறும் வகையில் பெரியார் ஈ. வெ. ரா. நாகம்மை இலவச கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மாணவியர்களின பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூபாய் 12,000-க்கு மிகையில்லையென்றால் சாதி, இன, மத வேறுபாடின்றி பி.ஏ./பி.எஸ்சி./பி.காம்/பி.லிட். வகுப்புகளில் பயிலுவோருக்கு படிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. 1992-93இல் நான்காவது ஆண்டு தொடங்கும் இத்திட்டத்தின் கீழ் கல்லூரிகளில் இளங்கலை வகுப்புகளில் முதல் இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டுகளில் பயிலும் அனைத்து மாணவிகளும் பயன் பெறுவர். 1992-93 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூபாய் 30 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

தமிழ் வெளியீடுகளை வெளியிடுவதற்கென 1—4—1962-ல் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்ப்பதிப்பகக் குழு, புதிய தமிழ் வெளியீடுகளையும் தமிழில் மொழி பெயர்த்த நூல்களையும் வெளியிட்டு வருகிறது. கல்லூரி மட்டத்திலான தமிழ்ப்பாட நூல்களை வெளியிடுவதற்கென ரூபாய் 1 கோடி இந்நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டது. இந்நிறுவனம் தொடர்ந்து தனது பணியினை மேற்கொள்ள ஏதுவாக விற்பனை மூலம் வரும் தொகையினை சுழல் நிதியாகப் பயனபடுத்திக் கொள்ள அதனிடம் நிறுத்தி வைக்கப்பட்டது. தமிழ் பதிப்பகக் குழு பினனர் தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு இத்திட்டத்தின்கீழ் கல்லூரி மட்டத்திலான 910 பாடப் புத்தகங்களை வெளியிட்டது. இதற்கென பல்கலைக் கழகங்களுக்கு ரூபாய் 50 இலட்சம் அளிக்கப்பட்டது. அண்ணா பல்கலைக் கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகம் ஆகியவை ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினை பெற்றுள்ளன.

அத்தியாயம் VII

தொழில்நுட்பக் கல்வி.

எந்த ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், தொழில் நுட்பத்தில் பயிற்சி பெற்றவர்கள் இன்றியமையாதவர்களாவர். இந்த முக்கியத்துவத்தினை உணர்ந்து இம் மாநில அரசு தொழில் நுட்பக் கல்வியின் வளர்ச்சிக்கு மிக அதிக முக்கியத்துவத்தினை அளித்துள்ளது. நான்கு பொறியியற் கல்லூரிகள் மற்றும் ஒன்பது பல்தொழில் பயிலகங்களுடன் 1957ம் ஆண்டு நிறுவப்பட்ட தொழில்நுட்ப கல்வித் துறை இன்று முப்பத்தொன்பது பொறியியற் கல்லூரிகள் மற்றும் நூற்று இருபத்தொன்பது பல்தொழில் பயிலகங்களோடு முறையே நான்காண்டு பட்டபடிப்பும் மூன்றாண்டு பட்டயப் படிப்பும் கற்பிக்கும் நிலை பெற்று பெருமையோடு விளங்குகிறது. பல பொறியியற் கல்லூரிகளும் பல்தொழில் பயிலகங்களும் முறையே பட்ட பிற்படிப்பு வகுப்புகளுக்கான பாடங்களும் பட்டயப் பிற்படிப்புக்கான பாடங்களும் போதிக்கின்றன. இன்றைய நாளில் உள்ள கல்வி நிறுவனங்களின் விவரங்கள் வருமாறு ;—

அட்டவணை 20.

1. பொறியியற் கல்லூரிகள் :		எண்ணிக்கை.
(அ) பிராந்திய பொறியியற் கல்லூரி உட்பட அரசு பொறியியற் கல்லூரிகள்	6	
(ஆ) அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள்	3	
(இ) சுயநிதி பொறியியற் கல்லூரிகள்	30	
மொத்தம்	39	39

அட்டவணை 20 தொடர்ச்சி — எண்ணிக்கை

2. பல்தொழில் பயிலகங்கள் — தனித் தன்மை வாய்ந்த பயிலகங்கள்		
(அ) அரசு தொழில்நுட்பக் கல்வி நிலையங்கள் மற்றும் தனித் தன்மை வாய்ந்த பயிலகங்கள்	21	
(ஆ) அரசு உதவி பெறும் பல்தொழில் பயிலகங்கள்	35	
(இ) சுயநிதிப் பல்தொழில் பயிலகங்கள்	73	
மொத்தம்	129	129
மொத்தம்		168

2. இம்மாநிலத்திலுள்ள தொழிற் கல்வி நிலையங்கள் பல்வேறு நிலைகளில் (பட்ட மேற்படிப்பு, பட்டப் படிப்பு, பட்ட மேல் பட்டயப் படிப்பு, பட்டயப் படிப்பு, பட்டய பிற்படிப்பு மற்றும் சான்றிதழ் படிப்பு) கல்வி கற்பிக்கின்றன. தமிழ்நாடு, இத்துணைக் கண்டத்தில் உள்ள பிற மாநிலங்களை விட பட்ட மேற்படிப்பினை, வளரும் தேவைகளுக்கேற்ப துவக்கியதில் எப்போதும் முன்னிலையில் இருந்து வருகிறது. வெவ்வேறு திட்ட அடிப்படையில் பல்வேறு பொறியியற் கல்லூரிகள் பல்தொழில் பயிலகங்கள் ஆகியவற்றிற்கான மொத்த மாணவ மாணவியர் சேர்க்கும் விவரங்கள் கீழே குறிப்பிட்ட அட்டவணையில் அளிக்கப்பட்டுள்ளன—

86-43—11

அட்டவணை 21

தொழிற்கல்வி நிலையங்களில் கற்போர் விவரம்

வரிசை எண்	கல்வி நிலையம் வகை	எண்ணிக்கை	பட்டம் பட்டயம்	முழு நேரம்	பகுதி நேரம்	மொத்தம்
1	திருச்சி பிராந்திய பொறியியற் கல்லூரி உட்பட பொறியியற் கல்லூரிகள் ..	39	பட்டம்	7,437	1,160	8,597
			பட்டபிற் படிப்பு	276	56	332
			பட்டமேற்படிப்பு பட்டயம்	21	5	26
2	பல்தொழில் பயிலகங்கள்	129	பட்டயம்	22,562	1,675	24,237
			பட்டய பிற் படிப்பு	203	90	293
			சான்றிதழ்	10	210	220
	மொத்தம்	168		30,509	3,196	33,705

3. பல்தொழில் பயிலகங்களுக்கான உலக வங்கி உதவி :

(1) உலக வங்கியின் கடன் வசதியினைப் பெற்று பட்டய நிலையில் கல்வியின் மேம்பாட்டிற்காகவும், 1991–92-ம் ஆண்டு முதல் 1995–96 வரை, தமிழ் நாட்டிலுள்ள 21 அரசு மற்றும் 34 அரசு உதவி பெறும் பல்தொழில் பயிலகங்களுக்காக ரூ. 76 கோடி செலவில் திட்டம் தொடக்கப்பட்டுள்ளது. இதன்படி 1991–92-ம் ஆண்டில் வரவு–செலவு நிதி ஒதுக்கீடாக ரூ. 200 இலட்சம் ஒதுக்கப்பட்ட போதி லும் இதற்கான ஒப்பந்தம் மைய அரசினால் 16—12—1991-ல்தான் கையொப்பமிடப்பட்டதால், இத்திட்டத்தினை டிசம்பர் 1991 வரையில் நிறை வேற்ற இயலவில்லை. இதன் காரணமாக இத்திட் டம் இந்த ஆண்டில் ரூ. 25 இலட்சம் ஒதுக்கீட்டுடன் ஆரம்பிக்கப்படும். தற்போதுள்ள உலக வங்கி திட்ட விதிகள்ன்படி, கட்டிடப் பணிகள் உலக வங்கி திட்ட அலுவலகத்தினால் ஒப்பமிடப்பட வேண்டும். பல் தொழில் பயிலகங்களின் ஆய்வக உபகரணங்கட் காக ரூ. 19.43 கோடி செலவிட வரையறுக்கப்பட்டு மைய அரசுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டு 1991–92-ல் ரூ. 1.00 கோடியும், 1992–93-ல் ரூ. 3.00 கோடியும் செலவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கி செயல்திட்ட முறையில், கீழே குறிப்பிட்ட பிரிவுகள் செயல்பட, அரசின் பரிசீலனை யில் உள்ளன.

(1) 1992-93-ம் ஆண்டு முதல் புதிய பட்டயம் மற்றும் பட்டய பிற்படிப்பு வகுப்புகள் துவக்குதல்,

(2) கல்வி நிலையங்கட்கு தன்னாட்சி நிலை வழங்கு தலும், வெவ்வேறு நிலைகளில், ஒரு சில தெரிந் தெடுக்கப்பட்ட பல்தொழில் பயிலகங்களில் பல வகை பாடத் திட்டங்கள் அறிமுகப்படுத்துதல்

(3) ஆசிரியர்கட்கு உயர் கல்வியிலும், பயிற் யிலும் தரமேம்படுத்துதல்.

(4) தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தில், தொழில்நுட்பக் கல்விக்கான மாநில திட்ட மையம் அமைத்தல்.

1—10—1990 முதல் 31—12—1990 வரை, இத்திட்டத்திற்காக, 55 பல்தொழில் பயிலகங்கள் முன்னதாகச் செலவிட்ட தொகையினை ஈடு செய்ய அரசு நடவடிக்கைகளைத் தொடக்கியுள்ளது. 1991–92-ம் ஆண்டில், பல்தொழில் பயிலகங்களுக்கு புத்தகங்கள், அறைகலன்கள், கணிப்பான்கள் ஆகியவற்றினை அளித்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வரப்படுகிறது.

(ii) கனடாவின் நாட்டிடை மேம்பாட்டு முகமையின்கீழ் பயிற்சித் திட்டம்.

பல்தொழில் பயிலகங்களிலுள்ள ஆசிரியர்கள் தரமேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற, 'கனடா நாட்டிடை மேம்பாட்டு முகமை' மைய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறையின் மூலம், நிதியுதவி அளிக்க முன் வந்துள்ளது. கனடாவிலுள்ள சமுதாயக் கல்லூரிகள் ஒன்றியத்தில் (ஏசிசி) அங்கத்தினராக உள்ள கல்லூரிகள் இத்திட்டத்தினை மேற்கொள்கின்றன.

இத்திட்டம் கனடா நாட்டு விற்பன்னர்கள் தமிழகம் வந்து நவீனமுறைகளை தொழில் நுட்பத்தில் பயன்படுத்த ஆசிரியர்கட்குப் பயிற்சியளிப்பதும், இதன் மறு பயிற்சியாக இங்குள்ள ஆசிரியர்கள் கனடாவிற்குச் சென்று மேலும் பயில்வதுமான இருவழித்திட்டமாகும். தொழில் நுட்பக் கல்வி கூடுதல் இயக்குநர் ஒருவரும் பல பாலிடெக்னிக்குகளிலிருந்து நான்கு ஆசிரியர்களும், கனடாவில் மூன்று மாதங்கள் பயிற்சி பெற ஏற்கனவே வேறு பணியாக அனுப்பப்பட்டுள்ளனர். இத்திட்டம் பல்தொழில் பயிலக ஆசிரியர்கட்கு உயர்ந்த அளவில் பயன்பட்டு அவர்கள், பயனுள்ள வழியில் பயிற்சியளிக்க உதவும் நிலையில் நான்காண்டுகள் நடைமுறையில் இருக்கும்.

4. தொழில் நுட்பக் கல்வியின் முன்னுரிமைப் பிரிவுகள் :

(i) நாட்டுப்புறங்களில் தொழில் நுட்பக் கல்வி வசதியினை விரிவுபடுத்துதல் :

தமிழ்நாடு, இந்நாட்டில் தொழில் நுட்பக் கல்விக்கு வித்திட்ட ஒரு சில மாநிலங்களில் ஒன்று என்றபோதும் 1947ம் ஆண்டுக்கு முற்பட்ட அன்னியர் ஆட்சிக் காலத்தில் இங்கு தொழிற் கல்வியில் ஏற்பட்ட முன்னேற்றம் மிகவும் குறைவாகும். அக்காலை இரண்டு அரசு பொறியியற் கல்லூரிகள், ஒன்பது பல்தொழில் பயிலகங்கள் (இரண்டு தனித்தன்மை வாய்ந்த பயிலகங்களுடன்) மற்றும் இரண்டு கலை மற்றும் கைத்தொழில் கல்லூரிகளே இயங்கிவந்தன. சுதந்திரமடைந்த பின் கடந்த ஆண்டுகளில் இந்நிலையில் கணிசமான முன்னேற்ற மேற்பட்டது. அதில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம், சில நல்ல உள்ளம் கொண்ட தனியார் நிறுவனங்களும் இத்தகைய கல்வி நிலையங்களையும் ஏற்படுத்த முன்வந்து அரசோடு இணைந்து கூடுதலான தொழில் நுட்பக் கல்வி வசதிகள் செய்து தர முன்வந்ததாகும். 1982ம் ஆண்டில், இக்கல்வி நிலையங்கள் நகர்ப்புறங்களிலேயே அமையப் பெற்று நகர்ப்புற மக்கள், நாட்டுப்புற இளைஞர்களில் முன்னேற்றம் மற்றும் உழைப்பிற்பான பயனை அனுபவிக்கும் நிலை இருந்தது. 1982–83-ம் ஆண்டில்தான் அப்போதைய முதல்வர் மாண்புமிகு (மறைந்த) டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் கொணர்ந்த திட்டத்தின் பயனாக பல மாவட்டங்களில் உள்ள நாட்டுப்புறங்களில் தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள் அமையப் பெற்று, கடந்த பத்தாண்டுகளில் தமிழ்நாட்டில் நாட்டுப்புறமும் தொழில் நுட்பக் கல்விப் பயனருகில் வரும் நிலை ஏற்பட்டது. அப்போதிருந்து இதே கொள்கை கடைபிடிக்கப்பட்டு, புதிய தொழிற் கல்விக் கூடங்கள் அமைக்க, பிற்பட்ட பகுதிகளே ஒரு முக்கிய மையங்களாக கருதப்பட்டன.

(ii) மகளிருக்கான கூடுதல் தொழில் நுட்பக் கல்வி வாய்ப்புகள் :

தொழில் நுட்பக் கல்வியை மகளிர் விரும்பிப் பயில தமிழ்நாடு பெண்களுக்கென்றே தனியாக பல்தொழில் பயிலகங்கள் துவக்கிய ஒரு முன்னோடி மாநிலமாகும். தற்போது இம்மாநிலத்தில் பெண்களுக்கென்றே பதினொரு பல்தொழில் பயிலகங்கள் உள்ளன. மற்ற பல்தொழில் பயிலகங்களிலும் ஆண் பெண் இருபாலரும் கல்வி பயில வசதியாக அனைத்து பல்தொழில் பயிலகங்களிலும் பெண்களையும் சேர்க்க வேண்டுமென்பது அரசின் கொள்கையாகும். பெண்கள் பல்தொழில் பயிலகங்கள் உள்ள நகர்ப்புற பல்தொழில் பயிலகங்கள் தவிர மற்ற பல்தொழில் பயிலகங்கள் இக்கொள்கையினைக் கடைபிடித்து மகளிரைச் சேர்த்து வருகின்றன. பெண்கட்கு தொழில் நுட்பக் கல்வி வசதியளிக்க, இருபாலரும் கற்கும் ஒருசில பல்தொழில் பயிலகங்கள் மகளிருக்கென்று தனியான பிரிவுகளும் உள்ளன. பல்தொழில் பயிலகங்களில் மகளிர் சேர்க்கை தற்போது 30 விழுக்காட்டிற்கு உயர்ந்துள்ளது. வரும் ஆண்டுகளில், பெண்களின் சேர்க்கை மேலும் உயர வேண்டுமென்று அரசு விரும்புகிறது. பெண்கட்கான அரசுப் பயிலகங்களில் பெண்களையே முதல்வர்களாக வருங்காலத்தில் அமர்த்த வேண்டுமென அரசினர் முடிவு செய்துள்ளனர்.

(iii) மலைவாழ் குடியினர் வாழும் பகுதியில் தொழில் நுட்பக் கல்வி வசதி :

நீலகிரி மாவட்டத்தில் உள்ள மலைவாழ் குடியினர் வாழும் பகுதியில் தொழில் நுட்பக் கல்வி வசதியினைப் பெருக்கிட 1982-83 ஆம் ஆண்டில் உதகமண்டலத்தில் ஒரு அரசு பல்தொழில் பயிலகம் அமைத்தது மட்டுமின்றி 1991-92 ஆம் ஆண்டில் நீலகிரி தோட்ட அமைப்பாளர் சங்கத்தினரால் ஒரு அரசு உதவி பெறும் பல்தொழில் பயிலகமும் துவக்கப்பட்டுள்ளது.

(iv) கல்வி நிலையங்களில் கணிப்பான் வசதிக்கான ஒதுக்கீடுகள் :

தொழில் நுட்பக் கல்வி பெறுபவர்களில், கணிப்பானில் பயிற்சி பெருபவர்கட்கும், தேர்ச்சி பெறுபவர்கட்கும் நல்ல எதிர்காலம் வருங்காலத்தில் உள்ளது

என்பதனைக் கருத்தில் கொண்டு இப்பிரிவில் சிறந்த பயிற்சியளிக்க தனியான முயற்சிகள் மேற்கொண்டு, அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிலையங்களில் மிகச் சிறந்த கணிப்பான் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரி களில் சராசரியாக ஒரு கோடி ரூபாய் செலவில் கணிப் பான் வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. மைய அரசும் இதற்காக தாராளமாக நிதி உதவிகளை கல்வி நிலை யங்கட்கே நேரடியாக அளித்து வருகினறனர். மேலும் கணிப்பான் குறித்த பாடம் பொறியியற் கல்லூரி, மற்றும் பல்தொழில் பயிலகங்கட்கான பாடத்திட்டத்தில் ஒரு கட்டாய விருப்பப் பாடமாகவும் புகுத்தப்பட்டு, இதன் அவசியத்தினை மாணவ, மாணவியர் உணரவும் வழிவகுக்கப்பட்டு, அதன் காரணமாக இக்கல்வி நிலை யங்களிலிருந்து கற்று வெளியேறும் மாணவ, மாணவி யர்கட்கான பரந்த மற்றும் மிகுந்த வேலை வாய்ப்பு பெருகிடவும், பெறவும் இப்பயிற்சி வழிவகுத்துள்ளது.

(v) உள்ளமைப்பு அடிப்படை வசதிகளை விரிவாக்கு தல் :

ஆய்வகங்களைப் புதுப்பித்தல், பட்டறைகளைப் புதுமைப்படுத்தல், பழைய தளவாடங்களைக் களைந்து நவீனப்படுத்தல், ஆகிய திட்டங்களும், நூலக வசதி களைப் பெருக்குதல் ஆகிய திட்டங்களும் செயல் படுத்துவதோடு, திட்டம் மற்றும் விரிவாக்கும் வசதி களும் உருவாக்கப்படுகின்றன.

5. பிற முக்கிய செயல்பாடுகள் :

(i) வணிகவியல் பிரிவுகளில் தேர்வுகள் நடத்துதல்:

தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் ஆண்டுதோறும் இரண்டு காலக் கட்டங்களில் (மே, நவம்பர்) வணிக வியல் பிரிவுகளான தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணிதவியல் ஆகிய பாடங்களில் இரண்டரை லட்சம் மாணவர்களுக்கு தேர்வுகள் நடத்தி வருகின்றது.

(ii) தேர்வுப் பணிகளை கணிப்பான் மூலம்செயல் படுத்தல் :

இத்துறையில் பட்டயப் படிப்புத் தேர்வு நடத்தல், முடிவு வெளியிடுதல், தேர்ந்தோர்கட்கு பட்டயம்

வழங்கல், மதிப்பெண் பட்டியல் தயாரித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிக்கான அனைத்து வேலைகளும் கணிப்பான் கொண்டே செயல் பட்டு, இந்த முழுப்பணியின் செயல்பாடும் மிகக் குறுகிய கால அளவில் முடிக்கப்படுகிறது. மேலும் மாணவர்கள் தேர்வின் பாட வாரியாக, பயிலக வாரியான தேர்வு குறித்த விளக்க விவரங்களும் மாநில சராசரி விவரங் களுடன் விளக்கப்படங்களும் இதே முறையில் தயா ரிக்கப்படுகின்றன.

6. பொறியியற் கல்லூரிகட்கு உலக வங்கி உதவி :

அறிவுத்திறமை (தொழில் நுட்ப) விரிவாக்கும் திட்டத்திற்கு மைய அரசு மூலம், உலக வங்கி நிதி உதவி பெற, அரசு ஒரு கருத்துருவினை ஆய்ந்து வரு கின்றது. இதில் தரமேம்பாடு திறன் மேம்பாடு ஆகிய வற்றை மாநிலத்திலுள்ள எட்டு பொறியியற்கல்லூரி கள் மற்றும் அண்ணா பல்கலைக் கழகத்துடன இணைந்த நான்கு கல்வி நிலையங்களில் கொணரத் திட்டமுள்ளது. இத்திட்டத்தின்படி, உள்ளமைப்பு அடிப்படை வசதி களை வலுவடையச் செய்தல், முக்கிய பிராந்தியங் களில் உள்ள கல்வி நிலையங்களில் புதிய பாடப் பிரிவு களை ஏற்படுத்தல் எல்லா அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகளில் மூன்றாண்டு பி.எஸ்.சி., பி.டெக்., ஆகிய பாட திட்டங்களைக் கொணர்தல், ஆகியவை செயலாக்கப்படும். இந்த கல்வி நிலையங்களில் முனனேற்றத் திட்டத்திற்கான செலவினம் ரூ. 390 கோடி ஆக இருக்கலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முடியும் தருவாயில் உள்ளதால், இது மைய அரசுக்கு மிக விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

7. 1992-93 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு :

அண்ணா பல்கலைக் கழகத்திற்கு வழங்க வேண்டிய கல்விக் கொடையினையும் சேர்த்து, 1992-93 ஆம் ஆண்டு தொழில் நுட்பக் கல்விக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 51 கோடியளவில் இருக்கும். இது சென்ற ஆண்டுக் கான நிதி ஒதுக்கீட்டினை விட 25 விழுக்காடு கூடுத லான ஒதுக்கீடாகும்.

அண்ணா பல்கலைக் கழகம்.

அண்ணா பல்கலைக் கழகம், நாட்டிலேயே மிகப் பெரிய தொழில் நுட்பப் பல்கலைக் கழகமாக தோற்று விக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தில் உள்ள, 5,044 மாணவர்களில் 596 பேர் மாணவிகள் உள்ளனர். நாட்டிலேயே பொறியியல், தொழில் நுட்பவியல் படிப்புகளில் வேறு எப்பல்கலைக் கழகங்களிலும் இல்லாத அளவு மிக அதிகமான மாணவியர்கள் இப்பல்கலைக்கழகத்தில் உள்ளனர். இதுவரை இப்பல்கலைக் கழகத்தால் நடத்தி வரும் 20 இளநிலை பட்டப்படிப்புகள், 36 முதுநிலை பட்டப் படிப்புகள், 5 முதுநிலை பட்ட பிற் படிப்புகள் ஆகியவற்றில் பெரும்பாலானவை தமிழ்நாடு உள்ளிட்ட இந்திய நாட்டின் உடனடி வளர்ச்சித் திட்டங்களைச் சார்ந்தவையாகும். இப்பல்கலைக் கழகம் உயிரியல் தொழில் நுட்பம், படிக வளர்ச்சி, தொலை உணர்வு, சுற்றுப்புறச் சூழல், பொறியியல், நீர்பாசனமும் நீர்வள மேலாண்மையும், மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் என்ற துறைகளில் ஆற்றும் பணி மிகவும் போற்றத்தக்கதாக அமைந்துள்ளது. நீர்ப்பாசனம், நீர்வள மேலாண்மை, சுற்றுப்புறச் சூழல், பொறியியல், தொலை உணர்வு, உயிரியல், தொழில் நுட்பம், கணிப்பொறி அறிவியல் மற்றும் பொறியியல் போன்ற பலதிறப்பட்ட முதுநிலைப் பட்டப் படிப்புகள்; நாட்டுக்குத் தேவையான மனித ஆற்றலினை வெளிப்படுத்தக் கூடியனவாக அமைந்துள்ளன. இப்பல்கலைக் கழகம் ஏழாவது திட்ட காலத்தில் குறிப்பிடத் தக்க ஒரு பெரும் வளர்ச்சித் திட்டத்தினை நிறைவேற்ற உள்நாட்டு, வெளிநாட்டு நிதியுதவியுடன் ஏறத்தாழ 7.50 கோடி ரூபாய்களை இன்றியமையாத வளர்ச்சி, துறைகளின் முன்னேற்றம் புதிய துறைகளில் பட்டப் படிப்புக்களை நடத்துதல் போன்றவைகளுக்கு செலவிட்டுள்ளது. இப்பல்கலைக் கழகம் நமது நாட்டிற்கு உள்ளே உள்ள நிதியுதவி நிறுவனங்கள் மட்டுமின்றி, வெளி நாடுகளான ஜெர்மானியக் கூட்டுக் குடியாட்சி, அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற நாடுகளினின்றும் நிதி உதவி பெற்று வருகின்றது.

2. அண்ணா பல்கலைக் கழகத்தின் நான்கு கல்லூரிகளில் 1991-92 ஆம் ஆண்டு மாணவர் சேர்க்கை பின்வருமாறு :

அட்டவணை 22

நிறுவனம்/கல்லூரி.	இளநிலைப் பட்டப் படிப்புகள்		முதுநிலைப் பட்டப் படிப்புகள்		மொத்தம்
	முழு நேரம்	பகுதி நேரம்	முழு நேரம்.	பகுதி நேரம்	
பொறியியற் கல்லூரி ..	1,547	755	993	125	3420
அழகப்பா தொழில் நுட்பக் கல்லூரி	486	...	145	20	651
கட்டடக்கலை மற்றும் திட்ட மிடுதல் பள்ளி	161	..	53	..	214
சென்னை தொழில் நுட்பக் கல்லூரி	598	..	156	5	759
மொத்தம் ..	2,792	755	1347	150	5,044

தத்துவப் புலமையாளர் (எம்.பில்.) மற்றும் முனைவர் (பி.எச்.டி) பட்டப் படிப்புகளும் பெரும்பாலான துறைகளில் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை இப்பல்கலைக் கழகத்தால் 201 மற்றும் 122 மாணவர்களுக்கு (எம்.பில்.) மற்றும் (பி.எச்.டி.) பட்டங்கள் வழங்கப் பட்டுள்ளன.

3. நீர்வள ஆய்வு மையம்—பொறியியல் கல்லூரி வளாகம் :

இம்மையம் நீர்வளத் திட்டம், முன்னேற்றம் மேற்பார்வை போன்ற பல பிரிவுகளில் நீர் பயன் படுத்துவோர், நிதி உதவியாளர் போன்ற பலருடைய கூட்டு முயற்சிகளுடன் பத்தாண்டு காலமாக செயலாற்றி ஒரு பல்துறை இணைப்பு மையமாக இயங்கி வருகின்றது. இதுவரை, பலதிறப்பட்ட ஆராய்ச்சி மற்றும் கலந்தாய்வுத் திட்டத்திற்காகவும், தேசிய மற்றும் ஒருங்கிணைந்த தேசீய நிறுவனங்கள் ஆகிய பலதிறப்பட்ட நிதியுதவி நிறுவனங்களிடமிருந்து ஏறத்தாழ ஐந்துகோடி ரூபாய் நிதியுதவி பெற்றுள்ளது. அவற்றுள் தமிழ்நாடு அரசிடமிருந்து ரூபாய் பன்னிரண்டு லட்சம் நிதியுதவி பெறப்பட்டுள்ளது. தமிழ் நாட்டிலுள்ள சுமார் முப்பதாயிரம் நீர்ப்பாசன ஏரிகளை நவீனப்படுத்த சுமார் நாலாயிரம் மில்லியன் ரூபாய் நிதியினைக் கடனாகத் தந்து உதவ உலக வங்கி தன் இசைவினைத் தெரிவித்துள்ளது. ஏற்கெனவே இம்மையம் போர்டு பவுண்டேஷன் (Ford foundation) நிறுவனத்தாரால் வழங்கப் பட்ட முப்பத்து ஓராயிரம் டாலர் நிதியுதவியுடன், சிறு நீர்ப்பாசன திட்டங்களை நவீனப்படுத்தும் திட்டத்தை சீரிய முறையில் செயலாற்றி குறிப்பிடத்தக்க பணியை ஆற்றியுள்ளது. இப்பணி, தேசீய மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட தேசீய நிறுவனங்களடையே ஒரு குறிப்பிடத் தக்க ஊக்கத்தை உருவாக்கியுள்ளது. தற்போது, ஐரோப்பிய பொருளாதாரப் பிரிவினால் வழங்கப்பட்ட ரூபாய் இருநூற்று அறுபது மில்லியன் உதவியுடன் நூற்று ஐம்பது நீர்ப்பாசன ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தை செயல்படுத்தி வருகின்றது. இம்மையம், முதுநிலைப் பட்டப் பின் படிப்பு முதுநிலை பொறியியல் பட்டப்படிப்பு, முனைவர் பட்டப்படிப்புகளையும் நடத்தி வருகின்றது.

4. தொலை உணர்வு மையம் :

1982-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் தோற்றுவிக்கப்பட்ட இத்தொலை உணர்வு மையத்தை இந்திய அரசு, தேசீய தொலை உணர்வு செயற்பணி மையமாக அங்கீகரித்துள்ளது. இந்திய அரசு வழங்கிய ரூ. 1.27 கோடி, தமிழக அரசு வழங்கிய ரூ. 2.73 கோடி, ஜெர்மன் நாட்டரசு வழங்கிய ரூ. 3.50 கோடி ரூபாயும் சேர்ந்து மொத்தம் ரூ. 7.5 கோடி ரூபாய் நிதி உதவியுடன் இம் மையம் இயங்கி வருகின்றது. இந்நிதி உதவியுடன், இம்மையம் சுற்றுப்புறச் சூழல் மாற்றம், இயற்கை வனப்பாதுகாப்பு ஆகியவற்றின் நிலப்படங்கள் தயாரிக்க, தொலை உணர்வு மைய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கு மிக நவீன அறிவியல் பொறிகளை நிறுவியுள்ளது. அவற்றுள் குறிப்பிடத் தக்கது வாக்ஸ் - 11/780 (VAX – 11/780) கணிப்பொறி ஆகும். இக்கணிப்பொறி இன்னும் சில பொறிகளுடன் ஒருங்கிணைத்து செயற்கைக் கோள் மூலம் பெறப்படும் புள்ளி விவரங்களை எண் மான உருமூலம் ஆய்வு செய்ய மிகவும் பயன்படுகிறது. இந்த மையம் பல திறப்பட்ட பயிற்சித் திட்டங்களுடன், முதுநிலை தொழில்நுட்பப் பட்டப் படிப்பினையும் (M. Tech.) நடத்தி வருகின்றது.

5. சுற்றுப்புறச் சூழல் மையம் :

1955-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட, பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை, உலகச் சுகாதார நிறுவனத்தின் உதவியுடன் ஒருங்கிணைக்கப்பட்டு, சுற்றுப்புறச் சூழல் கல்வி மையமாக 1982-ஆம் ஆண்டு உயர்நிலை பெற்றது.

தென்கிழக்கு ஆசியப் பகுதியில் சுற்றுப்புறச் சூழல் பொறியியல் மனித வள மேம்பாட்டில், இம்மையம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மையமாகத் திகழ்கின்றது. அதுமட்டுமின்றி விஸ்தரிப்புத் திட்டம், கலந்தாய்வு ஆராய்ச்சி, தொடர் கல்வி, உயர்ரக கல்வி புகட்டல்

போன்ற பணிகளிலும் இம்மையம் பணியாற்றி வருகின்றது. இந்திய அரசினிடமிருந்தும், பல்கலைக் கழக மானியக் குழுவினரிடமிருந்தும் வளர்ச்சி நிதியாக சுமார் 84 இலட்சம் ரூபாய்களைப் பெற்றுள்ளது. இம்மையம் சுற்றுச்சூழல் பொறியியல் முதுநிலை பட்டமுறிப் படிப்பையும் முதுநிலை பட்ட படிப்பையும் நடத்துவதோடு ஒரு குறுகிய காலப் பயிற்சியை, பொறியாளர்களுக்காக நடத்தி வருகின்றது. முனைவர் பட்டதாரிகளுக்கென ஆய்வுத் திட்டங்களையும் நடத்தி வருகின்றது. இம்மையம் தேவையான ஆய்வுத் தளவாடங்களையும், களக் கருவிகளையும் பெற்றுள்ளது. இந்திய அரசு மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளால் பரிந்துரைக்கப்பட்ட பற்பல பெரும் ஆய்வுகளையும், முன்னேற்றத் திட்டங்களையும் இம்மையம் ஏற்று நடத்துகின்றது.

மனித குடியமர்த்து மையம்—கட்டடக்கலை மற்றும் திட்டப் பள்ளி :

இம்மையம் 1981-ஆம் ஆண்டு, திட்டம் மற்றும் முன்னேற்ற நிறுவனங்களால், ஆராய்ச்சி கலந்தாய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கும், பயிற்சித் திட்டங்களை வளர்ப்பதற்காக வட்டார திட்டங்களைத் தயாரிப்பதற்கும் ; கட்டடக்கலை மற்றும் திட்டப் பள்ளியில் கல்விப்பயிற்சியினை ஆதரிப்பதற்கும் தோற்றுவிக்கப்பட்டது. இம்மையம் பெரும் அளவில் ஒருங்கிணைந்த தேசிய நிறுவனங்களுக்கும் அரசு நிறுவனங்களுக்கும் பல பட்டறைப் பயிற்சிகளை நடத்தியுள்ளது. ஆராய்ச்சி மற்றும் ஆவணக்காப்பு மையம் 1985-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தற்போது இம்மையம் வீட்டுவசதிப் பகுதிகளை வரைப்படம் தயாரித்தலும் ''வீட்டு வசதி மண்டலப் பிரதேச வரைப்படம்'' வரைதல் என்ற தலைப்பில் திட்டத்தை நடத்தி வருவதிலும் முனைந்துள்ளது. இத்திட்டம், புதுதில்லி, தேசிய கட்டடங்கள் நிறுவனத்தாரால் நிதி உதவி பெற்றுள்ளது. பல கலந்தாய்வுப் பணிகளும், பயிற்சித் திட்டங்களும் இம்மையம் ஏற்று நடத்தி வருகின்றது.

புதிய மற்றும் புதுப்பிக்கும் ஆற்றல் மையம் :

இம்மையம் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் 1985-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கள ஆய்வுக் கூடத்தில் ஒரு உயிரியல்—பெரும் ஆற்றல் பண்ணையும் நிறுவப்பட்டுள்ளன. புதுப்பித்தல் ஆற்றல் முறையினையும், உயிரியல் — கூட்டு எரி பொருளைப் பயன் படுத்தி கணிதம் மற்றும் கணிப் பொறியைத் தழுவி ஏற்படுத்தப்பட்ட திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது. வீணாக வெளியேறும் வெப்பத்தைத் திரும்பப் பெறும் கொதி நீர் கொள் கலம் ஒன்று திட்டமிட்டு பொருத்தப்பட்டுள்ளது. ஆற்றல் பாதுகாப்புத் துறையில் இம்மையத்திற்கும் இங்கிலாந்து பல்கலைக் கழகங்களுக்கும் ஒரு கல்வி இணைப்பு பரிமாற்ற திட்டத்திற்கு பல்கலைக்கழக மானியக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. இயற்கை வாயுவை வெப்ப பொறியியல் திட்டங்களில் பயன் படுத்துதல் என்ற பிரிவின் ஆராய்ச்சி திட்டத்திற்காக, திட்டப்பணியின் கீழ் ரூ. 20 இலட்சத்தினை மனித வள மேம்பாட்டுத்திட்ட அமைச்சகம் அளித்துள்ளது. புறநகர் மற்றும் கிராமப்புற வாழ் மக்களின் நன்மைக்காக ஒரு ‘‘ சூரிய ஆற்றல் வள மேம்பாட்டு மையம் ’’ அமைப்பதற்காக இப்பல்கலைக்கழகம் தமிழக அரசின் நிதியுதவியை நாடுகிறது.

6. படிக வளர்ச்சி மையம்.—அழகப்பா தொழில் நுட்பக் கல்லூரி வளாகம் :

செய் பொருள் அறிவியல் ஆராய்ச்சியில் இத்துறை ஒரு புதிதாகத் தோன்றிய ஆய்வுக்களமாகும். மின்னணுத் தொழிற்சாலை, நார்ஒளி பரப்புதல் போன்றவற்றில் உபயோகப்படும் செய்பொருள்களான படிகங்களை வளர்ப்பதில் இம்மையம் ஒரு ஊடுருவி ஆய்வுக் களமாக அடையாளம் காட்டப்பட்டுள்ளது. அண்ணா பல்கலைக்கழகத்தில் இந்த படிக வளர்ச்சி மையம் 1982-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. போதுமான ஆய்வுக்கூட வசதிகளையும் மிக நவீன படிக வளர்ச்சி மற்றும் சிறப்புத் தன்மை வாய்ந்த தளவாடங்களையும் இம்மையம்

பெற்றுள்ளது. தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட ரூ. 4 லட்சம் நிதி உதவியும், இந்திய அரசால் வழங்கப் பட்ட ரூ. 37 லட்சம் நிதி உதவியும், பல நிதியுதவி நிறுவனங்களின் தாராளமான நிதி உதவியும் சேர்ந்து ஏறத்தாழ மொத்தம் ரூ. 50 இலட்சம் நிதியுதவியி னால் இம்மையத்தின் வசதிகள் நிலையாக அதிகப் படுத்தப்பட்டுள்ளது. தேசீய மற்றும் ஒருங்கிணைந்த தேசீய பருவ அறிவியல் வெளியீடுகளில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது, இம்மையத்திற்கு பெருமை சேர்ப்பதொன்றாகும். அத்துடன் மதிப் பிடத்தக்க ஒருங்கிணைந்த தேசீய ஆய்வுக் கூடங் களில் ஆய்வினை மேற்கொள்ள இம்மையத்தில் இருந்து இருபது ஆராய்ச்சிப் பணியாளர்களுக்கு ஒருங் இணைக்கப்பட்ட தேசீய பயிலகப்படி கிடைக்கப் பெற்றுள்ளது. இம்மையம் படிக வளர்ச்சியில் பல கோடை மற்றும் குளிர்காலப் பள்ளிகளையும் ஒருங் கிணைக்கப்பட்ட தேசீய கருத்தரங்குகளையும் நடத்தியுள்ளது.

இம்மையத்தில், பாதுகாப்புத் துறைக்குப் பயன் படக்கூடிய ஒரு பெரிய காலியம் ஆர்சனைடு ஒற்றைப் படிகத்தை இந்தியாவிலேயே முதன் முதலாக வளர்க் கப்பட்டது. மற்றும், அண்மையில் இண்டியம் பாஸ்பைட் ஒற்றைப்படிகத்தையும் இந்தியாவிலேயே முதன் முறையாக இம்மையத்தில் வளர்க்கப்பட்டது. இப்பல்கலைக் கழகத்தில் இப்பொருள் தொடர்பாக உருவாக்கிய தொழில் நுட்பம் உலக அரங்கில் நம் நாட்டிற்கு எட்டாவது இடத்தைப் பெற்றுத்தந்தது.

இம்மையத்தில் மேற்கொள்ளப்பட்ட மிகச் சிறந்த ஆய்வுப் பணியினை நன்கறிந்த பல்கலைக் கழக மானியக் குழு, இம்மையத்தினை தேசீய படிக வளர்ச்சி மையமாக உயர்த்த அண்மையில் அனுமதித் துள்ளது. மற்றும் நாடெங்குமுள்ள ஆராய்ச்சிப் பணியாளர்களுக்கு வசதிகளை அளிக்க ஒருங்கிணைந்த பல்கலைக்கழகமையமாக செயலாற்ற ஆரம்ப நிதி உதவியாக ரூ. 1.50 கோடியினை வழங்கியுள்ளது.

7. உயிர் சார் நுட்பவியல் மையம் :

இம்மையம் முனைவர் பட்டப் படிப்பினையும், தொழில் நுட்ப முதுகலைப் பட்டப் படிப்பினையும் நடத்தி வருகின்றது, இம் மையத்தின் பெரும்பாலான ஆய்வுக் கூடங்கள் நன்கு திட்டமிடப்பட்ட நவீன கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இம் மையம் சுவிட்சர்லாந்து, ஐக்கிய நாடுகள், பிரான்சு நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்ட தேசீய பரிமாற்றத் திட்டங்களைக் கொண்டுள்ளது. தொழிற்சாலை - பல்கலைக் கழக ஒருங்கிணைந்த செயல் திட்டத்தை வலுப்படுத்த தென் வட்டார பெட்ரோ வேதியல் தொழிற்சாலை நிறுவனத்துடன் ரூ. 2.50 கோடி நிதிச்செலவில் ஒரு பெரிய தொழிற்சாலை நிறுவ ஒப்பந்தக் குறிப்பு ஒத்துக் கொள்ளப்பட்டது. இக்குறிப்பின்படி அடிப்படை ஆராய்ச்சிகளின் கண்டுபிடிப்புகளை வியாபாரத்துறைகளில் பயன்படுத்துவதற்கு இம்மையத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக ஒரு தென்வட்டார பெட்ரோ வேதியல் தொழிற்சாலை உயிரியல் ஆய்வுக் கூடம் நிறுவப்படும். பயோசைடு – பி மற்றும் பயோசைடு–டி ஆகியவற்றை உள் நாட்டில் பெருமளவில் உற்பத்தி செய்திட தென் வட்டார பெட்ரோ வேதியல் மற்றும் அல்கெலின் கெமிக்கல்ஸ் போன்ற தொழில் நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளப்பட்டு அதற்கான உரிமைகள் பெறப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் உதவித் தொகையான ரூ. 7.50 இலட்சம் உள்பட ஏறத்தாழ மொத்தம் ரூ. 1.3 கோடிகள் நிதி உதவியுடன் இம் மையத்தில் பல பரிந்துரைக்கப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப் படுகின்றன. இந்திய - சுவிட்சர்லாந்து நிறுவனத்தால் பரிந்துரைக்கப்பட்ட ரூ. 60 இலட்சங்கள் செலவில் நடத்தும் ‘‘உயிரியல் தொழில் நுட்ப முன்னேற்றத்திற்குத் தேவையான வசதிகள்’’ என்ற பிரிவில் நடத்தப்படும் ஆராய்ச்சித் திட்டம் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

8. ஒருங்கிணைக்கப்பட்ட பெருங்கடல் மேலாண்மை மையம்.—பொறியியல் கல்லூரி வளாகம் :

ஒருங்கிணைக்கப்பட்ட பெருங்கடல் மேலாண்மை நிறுவனம் தோற்றுவிக்க 1983–ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்டது. பல்வேறுபட்ட பெருங்கடல் அறிவியல் பற்றிய அடிப்படைச் செய்திகளைச் சேகரிக்க முதல் படியாக ஒரு பெருங்கடல் புள்ளி விபர மையம் நிறுவப்பட்டது. கடற்கரை வள மேலாண்மை பற்றி அறிவதற்காக, இன்றியமையாத வசதிகளைச் சேகரிக்க ; பல்கலைக் கழக மானியக் குழு Cosist திட்டங்களின் கீழ் ரூ. 35.5 இலட்சங்கள் வழங்கப்பட்டது. அண்மையில் தமிழ்நாட்டில் மீன் வளப் பண்ணைகளின் உயர் வளர்ச்சிக்காக ஒரு பெரும் ஆராய்ச்சித் திட்டம் இந்திய அரசின் உயிரியல் துறையினால் கொள்கையளவில் ஒத்துக் கொள்ளப்பட்டு, ரூ. 64.00 இலட்சம் வழங்கப்பட உள்ளது. செயற்கைக் கோள்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தமிழ்நாடு கடற்கரை ஓரமாக மீன் வளத் திட்டங்கள் குறித்து தொலைக் காட்சி நிறுவனத்திற்கும், வானொலி நிறுவனத்திற்கும் மற்றும் செய்தித் தாள்களுக்கும் தேவையான தகவல்களை வாரந்தோறும் இம்மையம் அனுப்பி வருகிறது.

நீண்ட கடற் கரையையும் பரந்த நிலைச் சக்தியையும், கடல் வள முன்னேற்றமும் பெற்று இந்திய கடற்கரை முன்னேற்ற மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாக விளங்குகிறது. தமிழ் நாட்டின் கடற்கரைப் பகுதிகளின் மேலாண்மை நல்ல பாதுகாப்பு போன்றவைகளின் முன்னேற்றத்திற்காக கடற்கரை மீன் வளத்தை வெளிப்படுத்தவும், வெளிக் கொணரவும், உயர் கல்வியிலும், ஆராய்ச்சிகளிலும் ஊக்கத்துடன் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

9. கணிப்பொறி அறிவியல்— பொறியியல் பள்ளி, பொறியியற் கல்லூரி வளாகம் :

இப்பள்ளி 1987–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இப்பள்ளி கணிப் பொறி அறிவியல் மற்றும் பொறியியல் துறைகளில் இளநிலை பொறியியல் பட்டப்படிப்பு,

முதுநிலை பொறியியல் பட்டப் படிப்பு, முதுநிலை கணிப் பொறி (M.C.A.) மற்றும் இளநிலை அறிவியல் பட்ட மேற் படிப்பினையும் நடத்தி வருகின்றது. இத் துறை நன்கு தேர்ச்சிப் பெற்ற ஆசிரியர்களையும், பணியாளர்களையும் பெற்றுள்ளது. இத் துறைப் படிப்புக்குப் போதுமான ஆய்வுக் கூட வசதிகளுடன் கூடிய ஒரு புதிய கட்டடம், பல்கலைக் கழக மான்யக் குழுவினால் அளிக்கப்பட்ட ரூ. 28 இலட்சம் நிதியுதவியுடன் அண்மையில் கட்டப்பட்டுள்ளது. இப் பள்ளியில் ஒரு ரொபோடிக்ஸ் (Robotics) ஆராய்ச்சிக் கூடத்தையும், ஒரு செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சிக் கூடத்தையும் ஏற்படுத்துவது வருங்கால திட்டமாகும்.

10. கருவி மற்றும் மின்னணுப் பள்ளி:— சென்னை தொழில் நுட்பக் கல்லூரி (M.I.T.) வளாகம் :

சென்னைத் தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்தி லுள்ள கருவி தொழில் நுட்பத் துறையையும், மின் னணுத் துறையையும் ஒருங்கிணைத்து, இப் பள்ளி 1987 ஆம்–ஆண்டு நிறுவப்பட்டது. இந்திய அர சினிடமிருந்தும், பல்கலைக் கழக மான்யக் குழுவினரிட மிருந்தும், ஜெர்மானியக் கூட்டுக் குடியாட்சியிட மிருந்தும் இப்பள்ளிக்கு மொத்தம் ரூ. 144 இலட்சம் நிதி கிடைத்துள்ளது. இத்துடன் ரூபாய் 15 இலட்ச மதிப்புள்ள பரிந்துரைக்கப்பட்ட ஆராய்ச்சித் திட்டங் கள் நிகழ்ந்து வருகின்றன. நமது நாட்டுப் பாது காப்புக்கு மிகவும் முக்கியமான சூரிய வெப்பப் (Solar Cell) பணிக்கும், ராடார் கிளட்டர் கல் விக்கும் தேவையான பல படிக சிலிகான் ஆராய்ச்சிப் பணியையும் இப்பள்ளி அண்மையில் நடத்தி வருகின் றது. வானொலி, ஒளிபரப்பு தொடர்புடைய துறை யுடன் தமிழ்நாட்டிலுள்ள (Ionospheric) அயன மண்டலத்தின் பல்வேறு குணங்களைப் பற்றி அறிந்து வருகிறது. இப் பள்ளி முனைவர் பட்டப் படிப்பு வாய்ப்புகளுடன், பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற் படிப்புகளையும் நடத்தி வருகின்றது. இப்பள்ளி சிறந்த கருவிகளுடன் கூடிய ஆய்வுக் கூடத்தையும் பெற்றுள்ளது.

11. பல்கலைக்கழகம் மற்றும் தொழில் நிறுவனங்கள் ஒத்துழைப்பு மையம் :

இம்மையம் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நிறுவப்பட்டது. ஒரு இயக்குநரின் தலைமையில் இயங்கிவரும் இம் மையத்தில் கீழ்க்கண்ட மூன்று உட்பிரிவுகள் உள்ளன :

(i) சுயதொழில் வளர்ச்சிப் பிரிவு.

(ii) பல்கலைக் கழகமும், தொழில் நிறுவனங்களும் ஒத்துழைப்புப் பிரிவு.

(iii) வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சிப் பிரிவு.

சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனங்களுடன் தொடர்புக்குத் தேவையான அடிப்படை புள்ளி விவரங்களைச் சேகரிக்கவும், கலந்தாய்வுத் திட்டங்களுக்கு உதவி நல்கவும் மற்றும் அண்ணா பல்கலைக் கழகத்திற்கும் சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கும் இடையே தீவிரமான ஒத்துழைப்பு வளர அனைத்து வாய்ப்புகளை நாடவும், மற்றும் கல்லூரி வளாக நேர்முகத் தேர்வுகளின் வழியாகவும் பழைய மாணவர்களின் தொடர்புகளின் மூலமும் தக்க வேலை வாய்ப்புகளைப் பெற மாணவர்களுக்கு உதவுவதும் இம் மையத்தின் குறிக்கோளாகும்.
Cerannic Technology மற்றும் PetroleumRefining and Petro chemicals என்கிற இரு தலைப்புகளிலும் தொழில் சார்ந்த முதுநிலை பட்டப் படிப்புக்களை Carborundam universal Ltd and Madras Refineries Ltd என்ற இரு தொழில் நிறுவனங்களிடமிருந்து ஒத்துழைப்பை அழகப்பா தொழில் நுட்பக் கல்லூரி பெற்றுள்ளது.

தனிப்பட்ட ஒத்துழைப்பு முயற்சிகளுக்காக இப் பல்கலைக்கழகம் (Confederation of Engineering Industries and Ambathur Industrial Estate ManufacturersAssociation என்ற இரு நிறுவனங்களிடமும் ஒப்பந்தங்களை ஏற்றுக் கொண்டுள்ளது.

12. ராமானுஜம் கணிப் பொறி மையம் — பொறியியற் கல்லூரி வளாகம்.

ஏறத்தாழ 100 (Personal Computers Terminals) வசதிகளுடன உள்ள இப்பல்கலைக்கழகத்தில், இம் மையம் நாள் முழுவதும் 24 மணி நேரமும், வாரத்தில் ஏழு நாட்களும் அயராது பணி புரிந்து வருகிறது. அலுவலக நிர்வாக வேலைகளிலும் மற்றும் பல்கலைக்கழகத் தேர்வு சம்பந்தப்பட்ட பணிகளிலும் ஒத்துழைப்பு அளிப்பதுடன், இம்மையம் மேலும் இரு சிறப்பான திட்டங்களை மேற்கொண்டுள்ளது. முதலாவதாக, சென்னை மாநகரில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை தோறும் கணிப் பொறி குறித்து சிறப்பு வகுப்புகளை நடத்துகிறது. இரண்டாவதாக, 6 கிராமங்களில் வசிக்கும் மாணவர்களுக்காக நடமாடும் கணிப் பொறி திட்டம் உதவியாக கல்வி கற்றுத் தருகிறது. இவ்விரு திட்டங்களின் மூலமாக பல்கலைக் கழகத்திற்கும், பள்ளி மாணவர்களுக்கும் இணைப்பு போற்றத் தக்கதாக வளர்ந்து வரும்.

அத்தியாயம் VIII.

சட்டக் கல்வித் துறை.

தமிழ்நாட்டில் சட்டக் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன சட்டக் கல்வித் துறை 1953-ஆம் ஆண்டு துவங்கப்பட்டு தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இத் துறை தோற்றுவிக்கப்பட்ட பிறகு தமிழ்நாட்டில் சட்டக் கல்வியின் தரம் அனைத்து வகையிலும் முனனேற்றம் அடைந்துள்ளதோடு மேன்மேலும் முன்னேற்றமடைய இத் துறை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. 1891-ஆம் ஆண்டில் சென்னை சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது. 1974-ஆம் ஆண்டு மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி திறக்கப்பட்டது. 1979-80ஆம் ஆண்டில் திருச்சி மற்றும் கோவை ஆகிய இரு இடங்களிலும் தலா ஒரு சட்டக் கல்லூரி வீதம் இரண்டு சட்டக்கல்லூரிகள் திறக்கப்பட்டன. 1983-84-ஆம் கல்வியாண்டு முதல் மூன்றாண்டு சட்டப்படிப்பு தவிர பிளஸ்—2 படித்த மாணவர்களுக்காக ஐந்தாண்டுச் சட்டப்படிப்பு நான்கு சட்டக்கல்லூரிகளிலும் அறிமுகப் படுத்தப்பட்டது. மூன்றாண்டு சட்டப்படிப்பும், ஐந்தாண்டு சட்டப்படிப்பும் ஒரே சமயத்தில் நான்கு சட்டக்கல்லூரிகளிலும் நடத்தப்பட்டு வருகின்றன. சென்னை மற்றும் மதுரை சட்டக்கல்லூரிகளில் 1983-84—ஆம் ஆண்டு முதல் மாலை நேரத்தில் குற்றவியல் மற்றும் தீங்கியல், ஒப்பந்த சட்டவியல், சொத்துரிமைச் சட்டம் மற்றும் நிர்வாகச் சட்டம் மற்றும் தொழிலாளர் சட்டம் ஆகிய பாடப்பிரிவுகளில் சட்ட மேற்படிப்பு (எம். எல்.) வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. 1991-92-ஆம் கல்வியாண்டு முதல் திருச்சி சட்டக்கல்லூரியில் மாலை நேரத்தில் நிர்வாகச் சட்டம் மற்றும் தொழிலாளர் சட்டம் பாடப் பிரிவில் சட்ட மேற்படிப்பு (எம். எல்.) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2. பணியிலிருப்போருக்காக 1966-67ஆம் கல்வியாண்டிலிருந்து சென்னை சட்டக்கல்லூரியிலும், 1977-78ஆம் ஆண்டிலிருந்து மதுரைச் சட்டக் கல்லூரியிலும் மாலை நேர சட்டப்படிப்பு தொடங்கப்பட்டு, இந்திய வழக்கறிஞர் மன்றத்தின் அறிவுரைப்படி 1979-80—ஆம் ஆண்டுடன் நிறுத்தப்பட்டது. இந்திய வழக்கறிஞர்

மனறத்தின் அனுமதியை பெற்று மீண்டும் 1983-84 ஆம் கல்வியாண்டு முதல் நான்கு சட்டக் கல்லூரிகளிலும் மாலை நேர சட்டப்படிப்பு தொடங்கப்பட்டு நடை பெற்று வருகிறது.

3. மூன்றாண்டு பகல்நேர சட்டப்படிப்பு மாணவர் களுக்காக தமிழிலும் முறையான சட்டம் போதிக்கப்படு கிறது. இதற்காக அம் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வருடத்திற்கு ரூ. 180 ஊக்கத் தொகைவழங்கப்படு கிறது. சென்னை, மதுரை மற்றும் திருச்சியிலுள்ள சட்டக் கல்லூரிகளில் புத்தக வங்கி செயல்பட்டு வருகிறது. இத்துறையில் சட்டக்கல்வி ஆண்டுமலர் (Year Book of legal Studies) ஒன்று வெளியிடப்படுகிறது. இவ்வெளியீட்டில் வழக்கறிஞர் கள் சட்டப் பேராசிரியர்கள் போன்றோர்களின் கட்டு ரைகள் மற்றும் கருத்துகள் வெளியிடப்படுகின்றன.

4. நான்கு சட்டக்கல்லூரிகளிலும் மொத்தம் 5,730 மாணவர்கள் பயினறு வருகின்றனர். ஒவ்வொரு சட்டக் கல்லூரியிலும் ஒவ்வொரு வகுப்பிலும் (Course–wise) ஒப்பளிக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை பின் வருமாறு :—

அட்டவணை 23.

சட்டக்கல்லூரியின் பெயர்.	மூன்றாண்டு சட்டப் படிப்பு. (பகல்நேரம்)	மூன்றாண்டு சட்டப் படிப்பு. (மாலை நேரம்)	ஐந்தாண்டு சட்டப் படிப்பு,	எம். எல்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
சென்னை	810	720	1,010	120	2,660
மதுரை	570	360	780	30	1,740
திருச்சி	240	180	427	15	862
கோவை	150	180	250	..	580
மொத்தம் —	1,770	1,440	2,467	165	5,842

சட்ட ஆலோசனை தேவைப்படும் ஏழை மற்றும் எளிய மக்கள் பயன்பெறும் நோக்கத்துடன் சட்டக் கல்லூரிகளில் இலவச சட்ட உதவி மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் IX

பொது நூலகத் துறை.

''குறைந்த செலவில் நிறைந்த மக்களுக்குச் சிறந்த படிப்பு'' இதுவே பொது நூலகப் பணியின் குறிக்கோளாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், ''நாடு நலம் பெற வீட்டுக்கொரு நூலகம் தேவை'' என வலியுறுத்தியுள்ளார்கள்.

பொது நூலகத் துறை கிராமப் பகுதிகள் உள்ளிட்டு மாநிலம் முழுவதும் நூலகப் பணியினைச் சீரிய முறையில் செய்து வருகிறது. 1992–93–ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் இத் துறைக்கென ரூ. 1,134 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. கன்னிமாரா பொது நூலகம் :

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948-ன்படி சென்னையிலுள்ள கன்னிமாரா பொது நூலகம் மாநிலத்தின் மைய (தலைமை) நூலகமாகும். நூல் விநியோகச் சட்டம், 1954–ன் படி இந்தியாவில் வெளியிடப்படும் அனைத்து நூல்கள், நாளேடுகள் மற்றும் பருவ ஏடுகள் ஒவ்வொன்றிலும் ஒரு பிரதியை இலவசமாகப் பெறும் நான்கு தேசிய வைப்பு நூலகங்களில் இந்நூலகமும் ஒன்றாகும். நூலகப் பணி இங்கு மேம்படுத்தப்பட்ட நிலையில் தனித்தனிப் பிரிவாக—குறிப்புதவும் பிரிவு, பாடநூல் பிரிவு, பருவ ஏடுகள் பிரிவு, நூற்றொகைப் பிரிவு, இந்திய மொழி நூல்கள் பிரிவு, ஆங்கில நூல்கள் பிரிவு,—நகலெடுக்கும் பிரிவு மற்றும் வீடுதோறும் நூல் வழங்கும் பிரிவு செயல்பட்டு வருகிறது. இந் நூலகத்தில் தொலைக்காட்சி, படப் பதிவுப் பெட்டி மற்றும் கணிப்பொறி ஆகியவைகளும் வாசகர்களின் நலன் கருதி வைக்கப்பட்டுள்ளன. இந் நூலகத்தில் நூல்கள் கட்டுமானப் பிரிவு மற்றும் நூல்கள் செப்பனிடும் பிரிவு ஆகியவைகளும் செயல்பட்டு வருகின்றன.

இந்நூலகத்தில் 119 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். 1991–92ம் நிதியாண்டில் (1–3–1992 வரை) இந்நூலகத்தில் மொத்தம் 4.65 இலட்சம் நூல்கள் இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நூலகத்தைப் பயன்படுத்திய வாசகர்களின் எண்ணிக்கை 6.85 இலட்சம். இந்நூலகத்திலுள்ள 49,679 உறுப்பினர்கள் 1991–92ம் நிதியாண்டில் இரவலாகப் பெற்றுச் சென்ற நூல்களின் எண்ணிக்கை 1.61 இலட்சம். 1991–92ம் ஆண்டில் இந்நூலகத்தில் இலவசமாகப் பெறப்பட்ட பருவ ஏடுகளின் எண்ணிக்கை 3.,611, செய்தித் தாட்களின் எண்ணிக்கை 240 ஆகும்.

3. நூலக ஆணைக்குழுக்கள் :

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948 பிரிவு 5-ன்படி ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் ஒரு நூலக ஆணைக்குழு ஏற்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட விதிமுறைகளுக்கேற்ப, தற்போது மாநில அளவில் 21 நூலக ஆணைக்குழுக்கள் செயல்பட்டு வருகினறன. இதில் 3 நூலக ஆணைக்குழுக்கள் 1991–92ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டனவாகும். தற்சமயம் இந்நூலக ஆணைக்குழுக்களின் கீழ் 18 மாவட்ட மைய நூலகங்களும், 9 இயங்கு நூலகங்கள் உட்பட 1,540 கிளை நூலகங்களும் மற்றும் 920 பகுதிநேர நூலகங்களும் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகினறன. 1–3–1992 நிலவரப்படி அலுவலர்கள் உட்பட 3,549 பணியாளர்கள் நூலகப் பணியினை செம்மையாக செய்து வருகின்றனர்.

இந்நூலகப் பணி விவரம் கீழ்வருமாறு :

		(இலட்சத்தில்)
(i)	நூலிருப்பு	178.40
(ii)	உறுப்பினர்கள்	20.26
(iii)	வாசகர்கள்	420.00
(iV)	இரவல் வழங்கப்பட்ட நூல்களின் எண்ணிக்கை	129.00

4. நூலக வரி :

1990–91ம் நிதியாண்டில் நூலக ஆணைக்குழுக்கள் நூலக வரியாக வசூலித்துள்ள தொகை ரூ. 263 இலட்சம். கடந்த 10 ஆண்டு காலத்தில் உள்ளாட்சி நிறுவனங்களிலிருந்து வசூலிக்கப்பட்ட நூலக வரி வசூல் விவரம் கீழே தரப்படுகிறது :

அட்டவணை 24

வரிசை எண். (1)	ஆண்டு. (2)			நூலக வரி வசூல். (ரூபாய் இலட்சத்தில்)
1	1981–82	..	..	148.24
2	1982–83	..	..	132.82
3	1983–84	..	..	111.99
4	1984–85	..	..	144.32
5	1985–86	..	..	126.51
6	1986–87	..	..	163.14
7	1987–88	..	..	163.51
8	1988–89	..	..	201.75
9	1989–90	..	..	260.51
10	1990–91	..	..	263.43

5. நலிந்த நூலக ஆணைக்குழுக்களுக்கு சிறப்பு மான்யம் :

புதுக்கோட்டை, தருமபுரி போன்ற நூலக ஆணைக்குழுக்களின் வருவாய் போதுமானதாக இல்லை. இத்தகைய நலிந்த நூலக ஆணைக்குழுக்களுக்கு உதவும் வகையில் நூல்கள் வாங்க 1991–92ம் நிதியாண்டில் அரசு சிறப்பு மான்யமாக ரூ. 11 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்தகைய உதவி 1992–93ம் நிதியாண்டிலும் தொடருகிறது.

6. புகைப்பட பிரதி எடுக்கும் கருவி/தொலைக்காட்சி பெட்டி இணைந்த படப்பதிவு நாடாச் சுருள் கருவிகள் :

வாசகர்களின் நலனையும் நூலகப் பணிச் சிறப்பினையும் கருதி கல்கத்தா இராஜாராம் மோகன்ராய் அறக்கட்டளை நிறுவன இணை மான்ய உதவியுடன் 21 மாவட்ட நூலக ஆணைக்குழுக்களுக்கும் தொலைக் காட்சி பெட்டி இணைந்த படப் பதிவுப் பெட்டிகள் இடம் பெற்றுள்ளன.

தேவையான நகல்களை வாசகர்கள் உடனுக் குடன் பெற்றுக் கொள்ள உதவும் நோக்கத்துடன் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம் மற்றும் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். ஆகிய மாவட்ட நூலக ஆணைக்குழுக்களில் புகைப்பட பிரதி எடுக்கும் கருவி பொருத்தப்பட்டுள்ளது.

7. பொது மக்களின் ஒத்துழைப்புடன் அனைத்து மக்களும் பங்கு கொள்ளத் தக்க வகையில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக நூலகத்தை சிறப்புற அமைக்க தமிழ்நாடு அரசு எட்டு அம்ச திட்டம் வகுத்து செயல்படுத்தி வருகிறது. இந்த எட்டு அம்ச திட்டத்தை நிறைவேற்றுவதில் அடைந்துள்ள சாதனைகளின் விவரம் வருமாறு :

(i) தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு பொது நூலகத் திற்கும் இலவச நிலம் பெறுதல் :

நூலக வளர்ச்சிக்கு ஒவ்வொரு நூலகத்திற்கும் சொந்த மனை மிகவும் அவசியமாகும். ஆனால் நிதிப் பற்றாக்குறை காரணமாக அங்காடி விலைக்கு மனை கள் வாங்குவதென்பது இயலாததாகும். எனவே, பொது மக்களிடம் இலவச மனைகள் கோரிப் பெற வேண்டியது அவசியமாகிறது. இந்த வகையில் கீழ்க் காணும் விவரப்படி 1,649 இலவச மனைகள் பெறப் பட்டுள்ளன.

அட்டவணை 25:

	எண்ணிக்கை	அங்காடி விலை	அரசு நிர்ணய விலை.
		(ரூபாய் இலட்சத்தில்)	
பொது மககளிடமிருந்து இலவசமாகப் பெற்று பதிவு செய்யப் பட்ட மனைகளின் எண்ணிக்கை	370	243.00	100.00
உள்ளாட்சி நிறுவனங்களில் நூலகங்களுக்காக பதிவு செய்து தரப்பட்ட மனைகளின் எண்ணிக்கை	490	322.00	132.00
உள்ளாட்சி நிறுவனங்களால் தீர்மான வடிவில் தரப்பட்ட மனைகளின் எண்ணிக்கை	789	520.00	214.00
இலவசமாகப் பெறப்பட்ட மொத்த மனைகளின் எண்ணிக்கை ..	1,649	1,085.00	446.00

(ii) பொது நூலகங்கள் செயல்படும் ஊர்களில் உள்ள படித்த ஒவ்வொருவரையும் நூலக உறுப்பினராக சேர்த்தல் :

படிப்பறிவு பெற்ற ஒவ்வொருவரையும் நூலகத்தை பயன்படுதக் செய்வதே நூலகத்துறையின் முக்கிய குறிக்கோளாகும். இந்த வகையில் நூலக உறுப்பினராக்குதல் நூலக இயக்ககத்தின் தலையாயப் பணி. இதன்படி கடந்த நான்கு ஆண்டுகளில் 3.54 இலட்சம் பேர், தமிழ்நாட்டில் நூலகத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். சனவரித் திங்கள் 1992 வரை 1.02 இலட்சம் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களையும் சேர்த்து மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 20.27 இலட்சம் ஆகும்.

(iii) தமிழகத்திலுள்ள ஒவ்வொரு பொது நூலகத்திற்கும் பொது மக்களிடமிருந்து நன்கொடையாகப் போதிய தளவாடங்களைப் பெறுதல்:

பொது நூலகங்களில் நூலடுக்குகள், மனைத் துணைப் பொருட்கள், மின் சாதனங்கள் முதலியன போதுமானதாக இல்லை. இத்தகைய குறைகளை நீக்க, பொது மக்கள், கொடையுள்ளம் கொண்டவர்கள் ஆகியோரிடமிருந்து ரூ. 122 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் நன்கொடையாக பெறப்பட்டுள்ளது. இதன் விளைவாக பெரும்பாலான நூலகங்கள் தளவாடப் பொருட்களைப் பொறுத்தவரை தன்னிறைவும் பெற்றுள்ளன. 1992 ஆம் ஆண்டு பிப்வரித் திங்களில் நூலக நிதியைப் பெருக்க தருமபுரி மாவட்டத்தில் மாநாடு ஒன்று நடத்தப்பட்டது.

iv) பொது நூலகம் ஒவ்வொன்றுக்கும் இரு பகுதி நேர நூலகங்கள் திறந்து செயல்படுத்துதல்.

பொது நூலகங்களிலுள்ள நூலிருப்புகளில் 10 விழுக்காடு முதல் 20 விழுக்காடு வரை உள்ள

நூல்கள் மட்டுமே உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன. எஞ்சியுள்ள நூல்கள் நூலகத்தில் நூலடுக்குகளில் தேக்கி வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய நூல்களை அருகிலுள்ள கிராமங்களில், பகுதி நேர நூலகங்கள் திறப்பதன் மூலம் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள இயலும். இதற்கென 1991–92ஆம்நிதியாண்டில் 5,000 மக்கட்தொகைக்கும் குறைவாக உள்ள கிராமங்களில் 250 பகுதி நேர நூலகங்கள் திறக்க குறிக்கோள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு திறக்கப்படவிருக்கும் பகுதி நேர நூலகங்கள் கீழ்க்காணும் பொது மக்களின் ஆதரவை பெற்றிருத்தல் வேண்டும். அதாவது (1) இலவசக் கட்டடம் (2) 5 செண்ட் முதல் 10 செண்ட் வரை இலவசமனை, (3) நூலகத்திற்குப் பயன் தரத்தக்க ரூ. 2,000 மதிப்புள்ள தளவாடங்கள் அல்லது ரொக்கம் ரூ. 2,000 நன்கொடை, (4) குறைந்தது 100 உறுப்பினர்களைச் சேர்த்தல் ஆகியவைகளாகும். 1991–92ஆம் ஆண்டில் சனவரித் திங்கள் வரை 186 பகுதி நேர நூலகங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மாநில அளவில் மொத்தம் இதுவரை 920 பகுதி நேர நூலகங்கள் கிராமப் பகுதிகளில் திறக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

(V) பொதுமக்களிடமிருந்து நூலகங்களுக்கு நன்கொடையாக நூல்கள் நாளேடுகள் மற்றும் பருவ இதழ்கள் பெறுதல்:

நூல்கள், நாளிதழ்கள் மற்றும் பருவ ஏடுகள் ஆகியவற்றின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இவற்றின் விலையும் பல மடங்கு உயர்ந்து வருகிறது. எனவே நூலக வரியைக் கொண்டு இவற்றை வாங்க நிதி போதுமானதாக இல்லை. இதனை நிவர்த்தி செய்ய ஒவ்வொரு நூலகத்திற்கும் பொது மக்களிடமிருந்து நன்கொடையாக நூல்கள், நாளேடுகள் மற்றும் பருவ இதழ்கள் பெறத் திட்டம் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 10.20 இலட்சம் மதிப்பில் நாளிதழ்களும்/பருவ ஏடுகளும் நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளன.

(vi) நூலகந்தோறும் புரவலர் சேர்த்து நூலக இயக்கத்தை வளர்த்தல்:

நூலக ஆர்வலர்களிடமிருந்து ரூ. 1,000 நன்கொடையாகப் பெற்று புரவலர் சேர்க்கும் திட்டத்தை அரசு வகுத்துத்தந்துள்ளது. இத்திட்டத்தின் நோக்கம் புரவலர்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைத் தொகையை நீண்ட கால வைப்பு நிதியில் சேர்த்து அதிலிருந்து பெறப்படும் வட்டியைக் கொண்டு நல்ல நூல்கள் மற்றும் பருவ ஏடுகளை வாங்குவதாகும். இத்திட்டம் பெருவாரியான பொது மக்களின் நன் மதிப்பைப் பெற்று இதுவரை 4,050 புரவலர்கள் சேர்க்கப்பட்டு இதன் மூலம் ரூ. 40.50 இலட்சம் நிதி நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளது.

(vii) இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்குள் ஒவ்வொரு நூலகத்தையும் சொந்த கட்டடத்தில் செயல்படச் செய்தல்:

மொத்தம் உள்ள 1,559 நூலகங்களில் 311 நூலகங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 474 நூலகங்கள் இலவசக் கட்டடங்களிலும், 774 நூலகங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. வாடகை மற்றும் இலவசக் கட்டடங்களில் செயல்பட்டு வரும் பெரும்பாலான நூலகங்கள், நூலகம் நடத்த கட்டடங்கள் போதுமானதாக இல்லை. இக்குறையினை நிவர்த்திக்க அரசு' ''குறைந்த பட்ச கட்டடத் திட்டம்'' ஒன்று வகுத்து தந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 15,000 மக்கட் தொகைக்குக் கீழ் உள்ள இடங்களில் ரூ. 1 இலட்சம் மதிப்பிலும், 15,000 மக்கட் தொகைக்கு மேல் உள்ள இடங்களில் ரூ. 2 இலட்சம் மதிப்பிலும் கட்டடங்கள் கட்ட அனுமதித்துள்ளது. இதுவரை ரூ. 1 இலட்சம் திட்டத்தின்கீழ் 401 கட்டடங்களும் ரூ. 2 இலட்சம் திட்டத்தின்கீழ் 81 கட்டடங்களும் கட்ட அனுமதிக்கப்பட்டது. இதன்படி ஏற்கனவே கட்டடம் கட்ட அனுமதிக்கப்பட்ட 210 கட்டடங்களையும் சேர்த்து இதுவரை 692 கட்டடங்கள் கட்ட கடந்த நான்காண்டுகளில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(viii) நூலகங்களை வங்கிகள் மற்றும் பிற நிறுவனங்கள் தத்து எடுக்க ஆவன செய்தல்:

பொது நூலகங்கள் மிகவும் சிக்கனமான அதே நேரத்தில் வலிவுமிக்க கல்வி நிறுவனமாகும். ஆனால் இந்நிறுவனங்கள் தேவையான போதிய தளவாடங்கள் இல்லாததால் குறைந்த அளவே பயன்படுத்தப் படுகின்றன. நமக்கு மேலும் கற்கும் கருவிகள் சாதனங்கள் மனைத் துணைப் பொருட்கள், கட்டடங்கள் ஆகியவை தேவைப்படுகின்றன. இத்தேவைகள் முழுமையாக நிறைவு பெற, குறிக்கோள் நிறைவேற நூலகங்களை வங்கிகள், தொழில் நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் தத்தெடுத்துக் கொள்ளுதல் அவசியம். இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே 8 நூலகங்கள் வங்கிகளால் தத்தெடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. நூலக வளர்ச்சி மாநாடுகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்படுகின்றன. இதுவரை 14 நூலகச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்பெற்றுள்ளன. 1991-92 ஆம் நிதியாண்டில் சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் நூலக வளர்ச்சி மாநாடுகள் நடத்தப்பெற்று முறையே ரூ. 53 இலட்சம் மற்றும் ரூ. 31 இலட்சம் பொது மக்களிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளன.

(8) நூலகவியல் பயிற்சி நிலையம் :

பயிற்சி பெறா மூன்றாம் நிலை நூலகர்களுக்குப் பயிற்சி தர, பொது நூலக இயக்ககத்தில் ஒரு நூலகவியல் பயிற்சி நிலையம் நடத்தப்படுகிறது. இந்நிறுவனம் முதல் நிலை/இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நூலகர்களுக்கு ஆண்டுதோறும் புத்தறிவுப் பயிற்சியும் அளித்து வருகிறது.

அத்தியாயம் X

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்.

ஆவணக்காப்பக நிருவாகம் தற்போது உலகெங்கிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நடைமுறைப்படுத்தப் பட்டுவரும் விஞ்ஞானமாகும். ஆவணங்கள் நிருவாகத்தின் கருவிகளாகும். அவை ஒரு நிறுவனத்தின், குடும்பத்தின், தனிப்பட்ட நபரின் நினைவுகளேயாம். கடந்த கால நிகழ்ச்சிகளுக்கும் முன்னேற்றத்திற்கும் சட்ட பூர்வமான உரிமைகளுக்கும் உருவம் அளிப்பது ஆவணங்களேயாம். அரசைக் கணிக்க மக்களுக்கு ஆதாரமாக விளங்குவது இவையேவாகும். எனவே ஆவணப் பாதுகாப்பிற்கு, தக்க ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியது அரசிற்கு தவிர்க்க இயலாத ஒரு கடமையாகும்.

2. இந்தியாவைப் பொறுத்தமட்டில், ஆவணப் பாதுகாப்பில் தமிழ்நாடு தனித்துவம் பெற்று விளங்குவதுடன், வரலாற்று மற்றும் நிருவாகச் சிறப்பு வாய்ந்த ஆவணச் சேகரிப்பில் பிற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. பதினெட்டாம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் அரசு ஆவணங்களில் எண்ணிக்கை பல மடங்காகப் பெருகியது. இப் பெருக்கம், ஆவணங்களை முறையாக பத்திரப்படுத்தி பாதுகாக்கப்படவேண்டிய கட்டாயத்தை அரசுக்கு ஏற்படுத்தியது. பல்வேறு துறைகளில் சிதறிக்கிடந்த தலைமைச்செயலக ஆவணங்களை ஓரிடத்தில் மையப்படுத்தி அதை ஒரு ஆவணக் காப்பாளரின் மேற்பார்வையின் கீழ் கொண்டு வந்து அவைகளை முறையாக பராமரிக்க 1805 ஆம் ஆண்டில் இந்திய ஆவணக் காப்பக நிறுவனத்தை அமைத்ததன் மூலம் தமிழ்நாடு ஆவணர் காப்பகத்திற்கான கரு உருவாக அடிகோலிய பெருமை அப்போதைய சென்னை மாகாண கவர்னரான லார்ட் வில்லியம் பெண்டிங் பிரபு அவர்களையே சாரும். ஒரு முழுமையான வளர்ச்சி பெற்ற ‘‘சென்னை ஆவண அலுவலகம்’’ என்ற தனி அலுவலகமாக 1909 ஆம் ஆண்டு முதல் இயங்குவதற்கு 103 ஆண்டுகள் ஆனது.

அரசியல் மாற்றங்களுக்கேற்ப இவ்வலுவலகத்தின் பெயரானது '' சென்னை மாநில ஆவணக்காப்பகம் '' என 1968 ஆம் ஆண்டிலும், சென்னை மாநிலமானது '' தமிழ்நாடு '' என 1969 ஆம் ஆண்டில் பெயர் மாற்றம் செய்யப்பட்டபோது, '' தமிழ்நாடு ஆவணக் காப்பகம் '' என்றும், இறுதியாக '' தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி '' துறை என 1973 ஆம் ஆண்டு முதலும் செயல்பட்டு வருகிறது.

3. ஆவணக் காப்பகத்தின் தலையாய பணியானது, அனைத்து நிலையான ஆவணங்களை மையப்படுத்தி, முறையாக வரிசைப்படுத்தி, நவீன விஞ்ஞான தொழில் நுட்ப உதவியுடன் பாதுகாப்பதாகும். இவ்வாவணங் களை வரலாற்று ஆராய்ச்சிப் பணி மேற்கொள்ளும் ஆராய்ச்சியாளர்களுக்கு வழங்குவதும், அரசு இயந் திரம் செம்மையாகச் செயல்பட தேவையான ஆவணங் களை குறித்த காலத்தில் உடனுக்குடன் வழங்குவதும் இவ்வலுவலகத்தின் பணிகளாகும்.

ஆவணங்களை மையப்படுத்துதல் :

4. சிப்பாய் கலகத்திற்கு முந்தைய காலத்தைச் சார்ந்த மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட நீதி மன்ற அலுவலக ஆவணங்களும், மற்றும் தற்போது செயல்பாடற்ற துறைகளின் ஆவணங்களும் மையப் படுத்தப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. இங்குள்ள ஆவணங்களில் முதன்மையான ஆவணம், கி.பி. 1670 ஆம் ஆண்டைச் சார்ந்ததாகும். தற்சமயம் இக்காப்பகத்தில் 48,85,739 கோப்புகளும், 7,47,431 தொகுப்புகளும் மற்றும் 2,163 ஆவணக் கட்டுகளும் உள்ளன. நில அடமான வங்கி, கூட்டுறவுச் சங்கங் களைச் சார்ந்த கடன் பத்திரம் மற்றும் ஒப்பந்த பத் திரங்கள் ஆகியவை இவ்வலுவலக ''பாதுகாப்பு நிலைப் பேழையில் '' பாதுகாக்கப்பட்டு வரப்படுகிறது. இவை தவிர, 1962 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியல்களும் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

ஆவணப் பாதுகாப்பு :

5 முதன்மை வாய்ந்த விஞ்ஞான ரீதியிலான முறைகளைப் பின்பற்றுவதால், தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் பின்பற்றப்படும் ஆவணப் பாதுகாப்பு முறை குறிப்பிடத்தக்கதாகும்.

(i) பாதுகாப்புப் பிரிவு

இப்பிரிவில் திறமை வாய்ந்த '' செப்பனிடுபவர்கள்'' உள்ளனர். இவர்கள் தற்சமயம் பாதுகாப்பு எழுத்தர்கள் மற்றும் புத்தகம் கட்டுநர் என்று பதவி வகிக்கின்றனர். ஆவணங்கள் செப்பனிடும் பணி துவக்கப்பட்ட 1921 ஆம் ஆண்டு ஆவண நிருவாகத்தில் ஆவணப் பாதுகாப்பிற்கு புதிய சகாப்தம் பிறந்தது. மிகவும் சிதிலடைந்த, பழமைவாய்ந்த ஆவணங்கள் ' சிப்பான் ' மற்றும் ' கைவினைத்தாள் ' துணை கொண்டு செப்பனிடப்படுகின்றன. செப்பனிடப்பட்ட தாட்கள் முறையாக தைக்கப்படுகின்றன.

(ii) லாமினேஷன் :

எளிதில் உடையக்கூடிய சிதிலமடைந்த ஆவணங்கள் ' செல்லுலோஸ் அஸிடேட் பாயில் ' மற்றும் ' டிஷ்யூ பேப்பர் ' என்ற இருவகைத் தாட்களைப் பயன்படுத்தி மேலொட்டல் இயந்திரத்தின் (Lamination Machine) மூலம் செப்பனிடப்படுகின்றன. அமிலத்தன்மை கொண்ட ஆவணங்களில் அமிலத்தன்மை நீக்கப்பட்டு, ' அஸிடேட் பாயில் ' மற்றும் ' டிஷ்யூ பேப்பர் ' துணையுடன் ரீலேமினேஷன் செய்யப்பட்டு அவை பல நூற்றாண்டுகள் நீடித்து வரும் வகையில் செப்பனிடப்படுகின்றன.

(iii) அமிலத்தன்மை நீக்கல் :

செப்பனிடுதல் மற்றும் லாமினேஷன் பணிகளுக்காக ஆவணங்கள் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன், அவற்றில் படிந்துள்ள அமிலத்தன்மையை நீக்குவதற்காக ' அமிலத்தன்மை நீக்கல் ' முறை மேற்கொள்ளப்படுகிறது.

(iv) இரசாயன புகையூட்டும் இயந்திரம் :

இடாக்ஸைடு வாயுவினைக் கொண்டு ஆவணங்கள் இரசாயனப் புகையூட்டும் இயந்திரத்தில் புகையூட்டப் படுகின்றன. ஆவணங்களில் உள்ள நுண்ணிய கிருமி களை அழிக்க இவ்வியந்திரம் பயன்படுத்தப்படுகிறது.

6. நுண் நிழற்பட பிரிவு (Micro Film Unit) :

நுண் நிழற்பட பிரிவு 1982 ஆம் ஆண்டு நிறுவப் பட்டதாகும். பழைய மூல ஆவணங்களை ஆராய்ச்சி யாளர்கள் கையாள்வதைத் தவிர்க்கும் வகையில், இவ் வாவணங்களை நுண் நிழற்படம் (Micro Filming) எடுத்து ஆராய்ச்சியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. 1991 ஆம் ஆண்டில் 1,96,059 பிரதிகள் எடுக்கப் பட்டு, ஆராய்ச்சியாளர்களுக்கு வழங்கியதன் மூலம் ரூ. 7,063 வசூலிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு நிறுவப் பட்டதிலிருந்து இதுவரை 9,43,831 பிரதிகள் எடுக்கப் பட்டுள்ளன.

7. நுண் நிழற்பட பிரிவு விரிவாக்கம் :

தற்சமயம் இயங்கிவரும் மைக்ரோ பிலிம் யூனிட்டை முக்கிய இரண்டு காரணங்களுக்காக விரிவாக்கப்பட வேண்டியது அவசரத் தேவையாகும்.

(1) தற்போதுள்ள வெளிப்பாடானது ஆவணக் காப்பகம் மற்றும் இங்கு ஆராய்ச்சி மேற்கொள்ளும் ஆராய்ச்சியாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லாதது ;

(2) தற்போது இயங்கிவரும் இயந்திரத்தின் முழுத் திறமையும் வெளிக்கொணரவும், ஒட்டுமொத்த மாக பிரிவின் செயல் திறனை அதிகரிக்கவும், இப் பிரிவிற்கு 'மைக்ரோபிலிம் டியூப்ளிகேட்டர்' தேவை. இப்பிரிவில் உள்ள 'மைக்ரோ சீல் வ்யூவர்' மற்றும் இன்செர்ட்டர்' உடன் ஒரு 'ட்யூப்ளிகேட்டர்'. இணைக்கப்பட்டாலே இதனை பயன்படுத்த இயலும். தற்போது உள்ள மைக்ரோபிலிம் பிரிவினை முழு வீச்சில் இயங்கச் செய்வதற்காக 1992-93 ஆம் ஆண்டில்

ரூ. 15.25 இலட்சத்தில் ஒரு '' மைக்ரோபிலிம் ட்யூப்ளி கேட்டர் '', ஒரு ' மைக்ரோபிலிம் ரீடர் (கம்) பிரிண்டர் '' மற்றும் மூன்று '' மைக்ரோ பிலிம் ரீடர் '' வாங்குவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

8. நூலகம் :

முறையாக பகுக்கப்பட்டு பராமரிக்கப்படும் சுமார் 2.5 இலட்சம் புத்தகங்கள் தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகத்தில் இடம் பெற்றுள்ளன. இந்நூலகத்தில் உள்ள புத்தகங்களை வெளியில் எடுத்துச் செல்ல அனுமதிப்பது இல்லை. ஆராய்ச்சியாளர்கள் பார்வையிடவும், குறிப்பெடுத்துக் கொள்ளவும், பயன்படுவதாகும்.

9. பயிற்சிப் பிரிவு :

அரசு அலுவலகங்களிலும், பொதுத்துறை நிறுவனங்களிலும் ஆவண அறைப் பொறுப்பில் உள்ள பணியாளர்களுக்கான '' ஆவணப்பராமரிப்பு '' குறித்த 30 நாட்கள் குறுகிய காலப்பயிற்சி ஒன்று தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் உள்ள '' பயிற்சிப் பிரிவினரால் '' அளிக்கப்பட்டு வரப்படுகிறது. இதுவரை 1,754 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அரசுத்துறை அல்லாத பொதுத்துறை நிறுவனங்களுக்கும் இப்பயிற்சியை அரசு விரிவாக்கம் செய்துள்ளது. இந்நிறுவனங்களின் மூலம் அனுப்பப்படும் பயிற்சியாளர்களுக்கு ரூ. 500 பயிற்சிக் கட்டணமாக வசூலிக்கப்பட்டு பயிற்சியளிக்கப்படும். 1992-93 ஆம் நிதியாண்டில் சுமார் 150 பணியாளர்களுக்கு 6 தொடர்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

10. விவரச் சுவடிப் பிரிவு :

மாவட்ட விவரச்சுவடிகளை வெளியிடும் பணியில் இப்பிரிவு ஈடுபட்டுள்ளது. இதுவரை தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர், தென்னாற்காடு, சேலம், இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட விவரச் சுவடிகள் வெளியிடப்பட்டுள்ளன. தர்மபுரி, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்ட விவரச்சுவடிகள் விரைவில் வெளியிடப்படும். செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்ட விவரச் சுவடிக்கு தேவையான கருத்துரு தொகுக்கப்பட்டு வருகிறது.

11. வெளியீட்டுப் பிரிவு :

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மற்றும் அரசு நிரு வாகம் சார்ந்த தெரிந்தெடுத்த ஆவணக் தொகுப்பு களை இக்காப்பகத்தின் வெளியீட்டுப் பிரிவு வெளி கொணர்கிறது. இதுவரை, பத்து ஆவணத் தொகுப்பு க'ள் வெளியிடப்பட்டுள்ளன. ஆறு ஆவணத் தொகுப்பு கள் தயாரிக்கப்பட்டு வரப்படுகிறது. பத்து மாவட்ட கையேடுகள் மறு பதிப்பு செய்யப்பட்டுள்ளன. இவை தவிர விலை நிர்ணயம் செய்யப்பட்ட '' ஆவண அமுதம் '' எனும் காலாண்டு இதழ் 1986 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்படுகிறது. அக்டோபர்–டிசம்பர் 1986 முதல் ஜனவரி மார்ச் 1990 வரை 12 இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதற்குப்பிந்திய ஏப்ரல்-ஜ4ன் 1990 முதல் ஜுலை-செப்டம்பர் 1991 வரை யிலான இதழ்கள் தயாரிக்கப்பட்டு அச்சில் உள்ளன.

12. தமிழ்நாடு வரலாற்றுச் சான்றேடுக்குழு :

வரலாற்று ஆய்வினை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு ஆண்டு தோறும் தகுதி வாய்ந்த நபர்களுக்கு நான்கு மாணவப்பணியிடங் கள் (Fellow ship) வழங்கிவருகிறது. கல்வி அமைச்சர் இக்குழுவின் தலைவராவார் இதுவரை, இக்குழுவில் 17 ஆராய்ச்சி மாணவர்கள் சேர்ந்து 15 நபர் ஆய்வு அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர். இவற்றில் இரண்டு அறிக்கைகள் ஆய்வுக் குழுவினால் ஏற்கப்பட்டு, ஆராய்ச்சி யாளர்களால் வெளியிடப்பட தேர்வு செய்யப்பட்டது. இரண்டு ஆராய்ச்சி மாணவர்களிடமிருந்து ஆய்வறிக் கைகள் எதிர்நோக்கப்படுகின்றன. மாநிலத்தில் உள்ள தனியார் ஆவணங்களின் விவரங்கள் அறிந்து அதனைச் சேகரிப்பது இக்குழுவின் தலையான பணியாகும்.

13. ஆவண வழிகாட்டிப் பிரிவு :

தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் உள்ள ஆவணங் களுக்கான வழிகாட்டி மத்திய அரசு நிதி உதவி யுடன் 1989-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு

வருகிறது. தமிழ்நாடு ஆவணக்காப்பக ஆவணங்களுக்கு (தலைமைச் செயலக ஆவணங்கள் நீங்கலாக) தொகுக்கப்பட்ட வழிகாட்டி தயாரிக்கும் பணி, மொத்தச் செலவினத்தில் 75 சதவீதம் மத்திய நிதி உதவியுடன் 1992-93-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின மொத்தச் செலவினத்தில் 25 சதவீதத் தொகை மாநில அரசின் பங்காகும்.

14. கர்நாடக மாநில ஆவணங்கள் பிரித்தெடுக்கும் பணி :

கர்நாடக மாநிலத்தைச் சார்ந்த ஆவணங்களைப் பிரித்து, மாற்றம் செய்யும் பணிக்காக தற்காலிகப் பணியிடங்களுக்கான ஒப்புதல் அரசால் அளிக்கப்பட்டு, இப்பணி, 31—5—1991 அன்று துவக்கப்பட்டு ஆவணங்களைப் பிரிக்கும் பணி வேகமாக நடந்து வருகிறது.

15. மாவட்ட ஆவணக்காப்பகங்கள் :

மாவட்ட அரசு அலுவலகங்களில் சிதறுண்டு கிடக்கும் வரலாற்று மற்றும் நிருவாகச் சிறப்பு மிக்க ஆவணங்களை மையம் செய்யும் பொருட்டு, இதுநாள்வரை, மதுரை, கோவை, கடலூர், திருச்சி மற்றும் சேலம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஆவணக்காப்பகங்கள் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. இந்த ஐந்து மாவட்ட ஆவணக்காப்பகங்களில் 31—12—1991 உடன் முடிவடைந்த காலாண்டுவரை 3,73,554 ஆவணங்களும் 7,432 புத்தகங்கள் மற்றும் 97,441 மோடி ஆவணங்களும் மையப்படுத்தப்பட்டுள்ளன.

அத்தியாயம் XI.

விளையாட்டு மற்றும் இளைஞர் தொண்டு.

I. விளையாட்டு.

விளையாட்டையும் இளைஞர் பணியையும் மாநிலத்தில் மேலோங்கச் செய்யும் பொருட்டு இளைஞர் விளையாட்டுப் பயிற்சித் துறை 1979-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அப்போது இருந்த விளையாட்டு மன்றங்களை மாற்றி 1984-ல் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம் உருவாக்கப் பட்டது. இந்தத் துறை மற்றும் கழகத்தின் குறிக் கோள்கள் வருமாறு :—

(அ) மாநிலத்தில் மேலும் பல விளையாட்டு அடிப்படை வசதிகளை தோற்றுவிப்பது.

(ஆ) தேசிய மற்றும் பன்னாட்டு புகழ் பெறும் சிறந்த விளையாட்டு வீரர்களில் விளையாட்டுத் திறனை கண்டறிந்து பேணி வளர்த்தல்.

(இ) விளையாட்டை வளர்ப்பதில் ஈடுபட்டிருக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு நிதியுதவி அளிப்பது, மற்றும்

(ஈ) தேசிய சேவைத் திட்டத்தையும், இளைஞர் நலப் பணிகளையும் மேம்படுத்துதல்.

2. 10-வது ஜவஹர்லால் நேரு தங்கக்கோப்பை அழைப்பு பன்னாட்டுக் கால்பந்துப் போட்டி—1993.

10வது ஜவஹர்லால் நேரு தங்கக்கோப்பை அழைப்பு பன்னாட்டு கால்பந்து போட்டியை 1993 ஜனவரியில் நடத்தும் சிறந்த வாய்ப்பு தமிழ்நாட்டுக்கு தரப்பட்டுள்ளது. சென்னை நேரு விளையாட்டு அரங்கத்தில் இந்த பெருமைக்குரிய போட்டியை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது

உள்ள நேரு விளையாட்டு அரங்கத்தை பன்னாட்டு தரம் உள்ளதாக மேம்படுத்தும் நோக்கத்தோடு புதுப்பிக்கவும்; புதுமையாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அரங்கத்தை புதுப்பிப்பதற்கு ஆகும் உத்தேச செலவு சுமார் 30 கோடி ரூபாய். மாண்புமிகு தமிழக முதல்வர் 5 கோடி ரூபாய் நல்கும்படி இந்திய அரசைக் கேட்டுள்ளார். நேரு விளையாட்டு அரங்கத்தை 1993 நேரு கோப்பைப் போட்டியை நடத்தும் அளவிற்கு புதுப்பிக்கவும், மேம்படுத்தவும் இந்திய அரசு உடனடியாக 2 கோடி ரூபாய் நல்கியுள்ளது. மாநில அரசு 5 கோடி ரூபாய் வழங்க திட்டமிட்டுள்ளது. எஞ்சிய தொகை வள்ளல்கள் மற்றும் விளையாட்டை விரும்பும் மேன்மக்கள் முதலானோரிடமிருந்து நன்கொடையாகப் பெறப்படும். இந்த விளையாட்டு அரங்கில் வணிகக் கடை அறைகளும் அமைக்கப்படவிருப்பதால் சென்னை மாநகராட்சி இதற்காக வங்கிகளிடமிருந்து கடன் வசதியையும் பெற முடியும். நேரு விளையாட்டு அரங்கை புதுப்பிக்கவும் புதுமையாக்கவும் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

3. அடித்தள வசதிகள்.

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு விளையாட்டு அரங்கம், ஒரு நீச்சல் குளம், ஒரு உள் விளையாட்டு அரங்கம் இருக்க வேண்டும் என்பது தமிழக அரசின் கொள்கை. இந்த மாநிலத்தில் தற்போது 11 வெளி விளையாட்டு அரங்கங்களும், நான்கு உள் விளையாட்டு அரங்கங்களும், நான்கு நீச்சல் குளங்களும் உள்ளன. விளையாட்டு களங்கள், விளையாட்டு அரங்கங்கள், நீச்சல் குளங்கள் முதலான அடிதள வசதிகளை மேம்படுத்துவதற்காக இந்திய அரசு நிதியுதவி செய்கிறது. இத்தகைய நிதியுதவி 1979 முதல் 1988 வரை 259 திட்டங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளன. மைய, மாநில அரசு உதவிகளுடன் பல்நோக்கு விளையாட்டு அரங்கம் ஒன்று ஈரோட்டில் கட்டப்பட்டு அண்மையில் மாண்புமிகு முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சென்னை நேருப்

பூங்காவிற்கு பின்பக்கமுள்ள ஒரு விளையாட்டு கூட்ட ரங்கம் எட்டு ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டது. அது மேம்படுத்தப்பட்டு வருகிறது. விளையாட்டுப் பயிற்சிக்கு மட்டும் பயன்படுத்தப்படும். சென்னை யில் உள்விளையாட்டு அரங்கம் ஒன்றை கட்டுவதற் காக திருவான்மியூரில் 1.23 ஏக்கர் பரப்புள்ள நிலத்தை அரசு வாங்கியுள்ளது. வேலூரில் பளு தூக்கும் விளையாட்டுப் பள்ளி ஒன்று நிறுவப்பட் டுள்ளது. ஈரோட்டில் நீச்சல் குளம் கட்டும் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

4. விளையாட்டுப் பள்ளி மற்றும் விடுதிகள்.

விளையாட்டுத் திறன் உள்ள பள்ளி மாணவர் களுக்குப் பயிற்சி தருவதற்காக சிறுவர்களுக்கு மூன்று விளையாட்டுப் பள்ளிகளையும் சிறுமியர் களுக்கு தனியேஒரு விளையாட்டுப்பள்ளியையும் மற்றும் மூன்று விளையாட்டு விடுதிகளையும் தமிழ்நாடு அரசு நடத்தி வருகிறது. சென்ற ஆண்டு விளையாட்டுப் பள்ளி மற்றும் விடுதிகளில் 601 விளையாட்டு வீரர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1991-92-ல் சென்னை ஒய். எம். சி. ஏ. விளையாட்டுப் பள்ளி, பெரிய நாயக்கன்பாளையம் ஸ்ரீராமகிருஷ்ணா மாருதி விளையாட்டுப் பள்ளி நெய்வேலி, என்.எல்.சி. விளையாட்டுப் பள்ளி, மதுரை ஒ.சி.பி.எம். மகளிர் மேல்நிலைப் பள்ளி மற்றும் திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள விளையாட்டு விடுதிகள் ஆகியவற்றில் 621 மாணவர்களுக்கு விளை யாட்டுப் பயிற்சி தரப்படுகின்றன.

1992-93 கல்வி ஆண்டில் தருமபுரியில் மாணவி யருக்கென தனியே ஒரு விளையாட்டு விடுதியை தோற்றுவிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 1992-93-ல் 30 மாணவியரை 8—ம் வகுப்பில் சேர்ப்பதும் 2-ஆம் ஆண்டு 60, 3-ம் ஆண்டு 90 என்ற முறை யில் மாணவியரின் எண்ணிக்கையை பெருக்குவதும் இத்திட்டமாகும். விளையாட்டு ஊக்கத் தொகை, விளையாட்டு சீருடை, விளையாட்டு அணிகலன்கள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் நிர்வாகச் செலவுகள் முதலானவை இதன் செலவில் அடங்கும்.

தடகளம், கபடி, கைப்பந்து, போன்ற விளையாட்டுகளுக்கு இந்த விடுதியில் ஊக்கம் தரப்படும். இந்தத் திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 3.62 இலட்சம்.

5. பள்ளிகளில் விளையாட்டு.

திறமையைக் கண்டறிந்து பயிற்சி தந்து மாநிலத்திலிருந்து திறமை மிக்க இளைஞர்களை அனுப்பி வைக்க அரசு புதுமையான பல திட்டங்களை உருவாக்கியுள்ளது. (1) இளமையில் தெரிந்தெடு, (2) மிக இளமையில் தெரிந்தெடு, (3) குடியரசு நாள் விளையாட்டுப் போட்டிகள், (4) பாரதியார் நாள் விளையாட்டுப் போட்டிகள், (5) இந்தியப் பள்ளி விளையாட்டு இணையம் நடத்தும் பள்ளி விளையாட்டுகள் முதலானவற்றை விளையாட்டுத் திறமையை இளமையிலேயே கண்டறியும் நோக்கத்தோடு நடத்தி வருகிறது. தொகுத்து உருவாக்கப்பட்ட தமிழ்நாட்டு அணி பள்ளி விளையாட்டு இணையம் நடத்திய போட்டிகளில் பங்கு பெற்று கூடைப்பந்து, கைப்பந்து பூப்பந்து முதலான விளையாட்டுகளில் தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்த்துள்ளது. 1989-90 கல்வி யாண்டில் கூடைப்பந்து, கைப்பந்து, ஆகியவற்றில் இந்தியப் பள்ளி விளையாட்டு இணைய வாகையத்தைத் தமிழ்நாடு பெற்றது. 1991-92-ல் விளையாட்டுப் பொருட்கள் 362 பள்ளிகளுக்கு 362 இலட்சம் ரூபாய் செலவில் வழங்குவதற்கான திட்டத்தை இந்திய அரசுக்கு தமிழக அரசு அனுப்பியுள்ளது.

6. ஊரக இளைஞர்களுக்கு விளையாட்டு.

ஊரக இளைஞர்களிடையே பொதிந்துகிடக்கும் விளையாட்டுத் திறமையை வெள்க்கொணர வட்ட, மாவட்ட, மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளை அரசு நடத்துகிறது. தமிழ்நாடு மாநில அணிகள் ஒவ்வொரு ஆண்டும் அனைத்திந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்கின்றன. இந்தப் போட்டிகள் தடகளம், அணி விளையாட்டுகள் முதலான பல்வேறு களங்களில் திறமுள்ள விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்துள்ளது.

7. மகளிருக்கான விளையாட்டுகள்.

தாய்க்குலத்திற்கு விளையாட்டுக் களத்திலும் சம வாய்ப்பு அளிக்க ஒன்றிய, மாவட்ட, மாநில, தேசிய அளவிலான மகளிர் போட்டிகள் நடத்தப்படுகின்றன. மேலும், சிறுமியர் எத்தகைய இன்னலும் இல்லாமல் விளையாட்டில் பங்கு பெற வாய்ப்பு தருவதற்காக மதுரையில் சிறுமியருக்கென்று தனியாக ஒரு விளை யாட்டுப் பள்ளியும், நாகர்கோவிலில் ஒரு சிறப்புத் திட்ட வளர்ச்சிப் பகுதி மையமும் தமிழ்நாட்டில் நிறுவப் பட்டுள்ளன. தமிழ்நாட்டு மகளிர் அணி 1975 முதல் ஒவ்வொரு ஆண்டும் தேசிய மகளிர் விளையாட்டு விழாவில் கூடைப்பந்து, மற்றும் தடகளம் ஆகியவற்றில் வாகையம் பெற்று வருகின்றனர். அனைத்திந்திய ஊரக விளையாட்டிலும் கூட தமிழ்நாட்டுத் தடகள வீராங்கனையர் ஒட்டு மொத்த சிறப்புப் பரிசினைப் பெற்றுள்ளனர்.

1992 பிப்ரவரியில் தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டி ஈரோட்டில் நடத்தப்பட்டது. அண்மையில் 1991-ல் தில்லியில் நடந்த உலக மகளிர் பளுத்தூக்கும் போட்டியில் தமிழ்நாட்டுச் செல்வி சாமுண்டீஸ்வரி மூனறு பதக்கங்கள் பெற்றுள்ளார்.

8. சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான ஊக்க உதவித் தொகைகள்.

(அ) தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ஊக்கத் தொகையும் உதவித் தொகையும் வழங்கப் படுகின்றன. 1980 மாஸ்கோ ஒலிம்பிக் போட்டியில் இந்திய ஹாக்கி அணியின் தலைவராக விளையாடி தங்கப்பதக்கம்பெற்ற திரு. பாஸ்கரனுக்கு செனனையில் வீடு ஒன்று வழங்கப் பட்டது. டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் சிறந்து விளங்கிய திரு. ஸ்ரீகாந்துக்கு சென்னையில் வீட்டு மனை ஒன்று வழங்கப்பட்டது. இது போன்ற மேலும் பல முனனோடித் திட்டங்கள் அரசின் செயல் நோக்கு ஆய்வில் உள்ளன.

(ஆ) விளையாட்டுப் பயிற்றுநர்களை ஊக்குவதற்காக தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டு வீரர்களை உருவாக்கும் பயிற்றுநர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வுகள் தரப்படுகின்றன.

(இ) சிறந்த விளையாட்டு வீரர்களை தத்தெடுத்தல் என்னும் திட்டம், ஏழை விளையாட்டு வீரர்கள் தொடர்ந்து பயிற்சிப் பெற உதவும். இந்தத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு விளையாட்டு வீரரும் மாதம் 500 ரூபாய் வீதம் 10 மாதங்களுக்கு ஊட்டச் சத்து உணவுத் தொகையாகவும் ஆண்டொன்றுக்கு 1,500 ரூபாய் விளையாட்டு உடை செலவுத் தொகையாகவும் வழங்கப்படுகிறது. 1991-92–ல் பலர் இதனால் பயன்பட்டு உள்ளனர்.

(ஈ) மாணவர்களை விளையாட்டில் ஊக்கப்படுத்துவதற்காக மாநில பொங்கல் விளையாட்டுப் போட்டிகள், குடியரசு நாள் விளையாட்டுப் போட்டிகள், பாரதியார் நாள் விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கும், வெற்றி வழியோடியவர்களுக்கும் முறையே ரூபாய் 600, ரூபாய் 400 என்று விளையாட்டுச் சிறப்புத் தொகை வழங்கப்படுகிறது. 1991-92–ல் அரசு இந்த வகையில் 516 மாணவர்களுக்கு 2.8 இலட்சம் ரூபாய் வழங்கி ஊக்கம் தந்துள்ளது.

(உ) வறுமை நிலையில் வாடும் சிறந்த விளையாட்டு வீரர்கள் 50 பேருக்கு மாதம் ரூபாய் 75 வீதம் விளையாட்டு ஒய்வூதியம் தரப்படுகின்றன.

விளையாட்டுத் திறப்பாட்டு வேட்கையை தணிக்கவும் மேலும் பல அடித்தள வசதிகளை உருவாக்கித் தருவதற்காக இந்த விளையாட்டுத் துறை மைய அரசோடு கூட்டாக கீழ்க்காணும் வாய்ப்புகளை உருவாக்கித் தந்துள்ளது.

(1) சென்னை நேரு பூங்காவில் தடகளம், கால்பந்து, குத்துச்சண்டை ஆகியவற்றில் பயிற்சி தரும் இந்திய விளையாட்டு உரிமத்தின் விளையாட்டு விடுதி.
(2) சேலத்தில் சிறுவர்களுக்கு தடகளம் பளுதூக்குதல், கூடைப்பந்து, கால்பந்து ஆகியவற்றில் பயிற்சிதரும்

சிறப்புத் திட்ட வளர்ச்சிப் பகுதி மையம் மற்றும் நாகர் கோவிலில் சிறுமியர்களுக்கு தடகளம், கூடைப்பந்து ஆகியவற்றில் பயிற்சி தரும் சிறப்புத் திட்ட வளர்ச்சிப் பகுதி மையம். (3) கடல் மட்டத்திலிருந்து அதிக உயரத்தில் பயிற்சி தரும் துணை மையம் ஒன்றை உதகமண்டலத்தில் அண்மையில் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது.

II. இளைஞர் தொண்டு.

வானில் மிதந்து பறத்தல், பாறை முகடுகளில் ஏறுதல், மலையில் ஏறுதல், மிதி வண்டி பயணம், காற்றுச் சறுக்குப் படகு முதலான இளைஞர்களின் தீரச் செயல்களை இத்துறை ஊக்குவிக்கிறது. சிற்றூர் மக்களை மேம்படுத்தும் நாட்டுப்புற மற்றும் சிற்றூர் இளைஞர் நலத் திட்டங்கள் ஆண்டு முழுவதும் செயல்படுத்தப்படுகின்றன. தேசிய சேவைத்திட்ட தொண்டர்கள் திட்ட அலுவலர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோருக்கு மாநில அளவிலான இளைஞர் விருதுகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. பல்கலைக் கழகங்கள் அல்லது கல்லூரிகளில் சிறந்து விளங்கும் தேசிய சேவைத் திட்ட படைக் குழுக்களுக்கு சுழற் கேடயம் வழங்க அரசு திட்டமிட்டுள்ளது.

தேசிய சேவைத் திட்டம்.

கல்வி பயிலும்போதே சமூக சேவையில் ஈடுபடும் வகையில் பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்கள் ஈடுபடும் நோக்கோடு தேசிய சேவைத் திட்டம் என்னும் ஒரு மாபெரும் மாணவ இளைஞர் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நாட்டை நன்நிலையில் உருவாக்கும் பணியில் தமக்குள்ள வலிமையெல்லாம் காட்டி முனைதல் தமக்குள்ள ஆளுமை திறமைகளையெல்லாம் மேம்படுத்துதல் ஆகியவைகள் இந்த திட்டத்தின் குறிக்கோள்கள். இந்த திட்டத்திற்கான செலவை மைய அரசும், மாநில அரசும் 7:5 என்ற முறையில் பங்கீட்டுக் கொள்கின்றன. தமிழ்நாட்டில் 1969-ம் ஆண்டு 3,000 தொண்டர்களுடன் இத்திட்டம் தொடங்கப்பட்டது. தற்போது இதில் 1,40,000 தொண்டர்கள் செயல்படுகின்றனர்.

நிகழ்ச்சிகள்.

தேசிய சேவைத் திட்ட முறையான திட்டத்தின்கீழ் தொண்டர்கள் மருத்துவ மனைகளில் தேவையான உதவிகள் புரிதல், அபலாசுரம், ஆனந்தாசுரம் போன்ற நல நிறுவனங்களில் உடல் ஊனமுற்றோருக்கு உதவுதல், நகரத்திலும், நாட்டுப்புறங்களிலும் குடிசை வாழ் மக்களுக்கு உதவுதல் முதலான பல்வேறு தொண்டுகளிலும் கல்வி புகட்டுவதிலும் ஈடுபட்டுள்ளனர். நோயற்ற வாழ்வு, புற்றுநோய், கண் பார்வை மங்குதல், தொழு நோய் முதலானவற்றில் விழிப்புணர்வு உண்டாக்கியும், சாலை போக்குவரத்தை ஒழுங்கு படுத்துதல், சமூக நலக்காடுகள் வளர்த்தல், சுற்றுப்புறச் சூழலை மேம் படுத்துதல், நகரை ஒழுங்குபடுத்துதல், மலேரியாவை ஒழித்தல் முதலான பணிகளைச் செய்தும் அத்திட்ட மாணவர்கள் தொண்டு புரிகின்றனர். சிறப்பு முகாம் திட்டத்தின்கீழ் அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட சிற்றூர் களில் 10 நாள் தங்கி அச்சிற்றூருக்குத் தேவையான பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களை உள்ளூர் நிர்வாகம் இளைஞர் மன்றங்கள் மகளிர் மன்றங்கள் முதலானவற்றோடு இணைந்து நாட்டை உருவாக்கும் பணியிலும், நாட்டுப்புறங்களை சீர்செய்யும் வகையிலும் தங்களுக்குள்ள திறமைகளையும் முனைப்புகளையும் வெளிப் படுத்தும் வகையில் செயல்படுகின்றனர். சாலைகள், சமூகக்கூடங்கள், சிக்கன வீடுகள், இளைஞர் மன்றக் கட்டிடங்கள், சமூக நலக் காடுகள், குடிநீர் கிணறுகள் முதலான பல்வேறு சமூக நிலைப்பாட்டு உடைமைகளை சிறப்பாக தொண்டர்கள் உருவாக்கியுள்ளனர். வரதட்சணை, குடிப்பழக்கம், போதை மருந்து, குழந்தைகளை வேலைக்கு அனுப்புதல், தீண்டாமை முதலான சமூகக் கொடுமைகளை ஒழிக்கும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருப்பொருள்களைக் கொண்ட நாட்டுப்புற பண்பாட்டுக் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதன் வாயிலாகவும் அவர்கள் தமக்குள்ள ஆக்கசக்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

முக்கியக் குறிப்புகள்.

மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள 50,000 மாணவர் தொகையையும் சேர்த்து தமிழ்நாட்டில் மொத்தம் 1,40,000 தொண்டர்கள் இத்திட்டத்தின்கீழ் செயலாற்றுகின்றனர். இந்த எண்ணிக்கை இந்தியாவிலேயே

மிகப் பெரியது. பாலிடெக்னிக் மாணவர்கள் 10,000 பேர்களை கொண்டு இயங்கும் ஒரே மாநிலம் தமிழ் நாடுதான். அண்ணாமலைப் பல்கலைக் கழகம், காந்தி கிராம் பல்கலைக்கழகம், அவினாசிலிங்கம் பல்கலைக் கழகம், மற்றும் அண்ணா பல்கலைக் கழகம், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், கால்நடை மருத்துவ பல்கலைக் கழகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், இந்திய பல்தொழில்நுட்ப நிறுவனம் (ஐ.ஐ.டி.) முதலான தொழில் நிறுவனங்கள் ஆகிய குடி யிருப்புப் பல்கலைக் கழகங்கள் நம் மாநிலத்தில் உள் ளன. வீட்டு மின்சாரப் பணி, ரேடியோ பழுது பார்க் கும் பணி குழாய் கிணறுகள் அவற்றின் பம்ப் செட்டுகள் ஆகியவற்றை பழுதுபார்க்கும் பணி முதலான தொழில் நுட்ப திட்டங்களை அந்தப் பல்கலைக் கழகங்கள் மேற்கொண்டு உள்ளூர் மக்களுக்கு பயிற்சி தருகின்றனர். கோழி, ஆடு, மீன் முதலான விலங்குகளை வளர்த்தல் வேளாண்மையில் புது முறைகளைக் கடைபிடித்தல், உர மிடுதல், பூச்சிக் கொல்லிகளைக் கட்டுப்படுத்துதல் முத லானவற்றை நாட்டுப்புற மக்களுக்கு அவர்கள் விளக்கு கின்றனர்.

நகர்புற கல்லூரித் தொண்டர்கள் வணிக மேம் பாட்டு பயிற்சித் தருதல் தலைமைப் பண்பு பயிற்சி தரு தல், போதை மருந்து, குடி முதலான கொடிய பண்பு களில் விழிப்புணர்வை ஏற்ப்படுத்துதல், சுற்றுப்புறச் சூழல் மேம்பாடு முதலான திட்டங்களைச் செயல் படுத்தி வருகின்றன.

மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் வைகை அணைப் பாசனப் பகுதிகள்ல் சுற்றுப்புறச் சூழல் துறையின் நிதியுதவியுடன் தொடர்ச்சியான சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்வு மற்றும் மேம் பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. அந்தப் பல்கலைக் கழகம் அண்மையில் ஐ.சி.எம்.ஆர். நிறு வனத்துடன் கூட்டாக இணைந்து காசநோயை ஒழிக்கும் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. திருச்சியில் உள்ள பாரதிதாசன் பல்கலைக் கழகம் உள்ளூர் நிர் வாகிகளுக்கு போலி உணவுப் பங்கீட்டு அட்டைகளை கண்டுபிடிக்க உதவியுள்ளது. மது விலக்கு, இரவு பாதுகாப்புப்பணி ஆகியவற்றில் உள்ளூர் காவல்

துறைக்கு உதவியுள்ளது. சென்னை பல்கலைக் கழகம், சென்னை நகரில் மலேரியா தீவிரமாகத் தாக்கும் பகுதிகளில் இண்ட்டாக் உதவியுடன் மலேரியா ஒழிப்புப் பணியை முனைந்து செய்துள்ளது. பல பல்கலைக் கழகங்கள் முழுமையான மைய அரசு நிதியுதவியுடன் தேசிய ஒருமைப்பாட்டு முகாம் தீரச் செயல்கள் போன்றவற்றை நடத்தி இளைஞரிடையே மேம்பாட்டுத் திட்ட உணர்வை ஊட்டியுள்ளன.

தனிச்சிறப்பு சாதனைகள்.

பாடத்திட்டத்தில் இணைதல்.—கோயமுத்தூரில் உள்ள அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் உயர் கல்வி நிறுவனம் (கருதப்படும் பல்கலைக் கழகம்) அதில் பயிலும் அனைத்து பட்டப்படிப்பு மாணவர்களுக்கும் தேசிய சேவைத் திட்டப் பாடத்தை மதிப்பீடு வழங்கும் பாடங்களில் ஒன்றாக ஆக்கியுள்ளது. இதனால் அதில் பயிலும் மாணவியர் சத்துணவு, உடல்நலம், தாய் சேய் நலம் மனையியல், அங்கன்வாடிகளை மேம்படுத்துதல், மகளிர் கல்வி அறிவை முனைப்பாகக் கொண்ட ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் தொண்டு முதலான களங்களில் தீவிரமாகச் செயல்படுகின்றனர். இந்தப் பல்கலைக் கழகம் தங்களின் செயல்பாடுகளுக்கு வலுவூட்டும் துணை முயற்சிகளாக ஐம்பது அங்கன்வாடிகளை தத்தெடுத்துக் கொண்டுள்ளது. அண்ணா பல்கலைக் கழகமும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும், என்.எஸ்.எஸ்./என்.எஸ்.ஓ./என்.சி.சி. பாடங்களில் ஒன்றை முதலாண்டு மாணவர்களுக்கு கட்டாய பாடமாக ஆக்கியுள்ளது.

முழுமையான கல்வி அறிவு இயக்கம்.—அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 1991 ஜூன், ஜூலை மாதங்களில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூட்டு இயக்கமாக பெரியதோர் எழுத்தறிவு இயக்கத்தை எல்லா வகையான வாய்ப்புகளையும் திரட்டி நடத்தியது. இந்த எழுத்தறிவு இயக்கமானது நான்கு ஒன்றியங்களிலுள்ள 459 சிற்றூர்களில் 34,000 பேர்களை தெரிந்தெடுத்து செயலாற்றி 31,000 பேர்களை எழுத்தறிவு உள்ளவர்களாக செய்தது.

காந்திகிராம் கிராமிய பல்கலைக் கழகம் தேசிய சேவைத் திட்ட படை அணி மதுரை மாவட்ட போடி நாயக்கனூரில் இனக் கலவரம் நடந்தபோது இன ஒருமைப்பாட்டுணர்வை ஊட்டி அமைதியை நிலை நாட்டுவதில் அதன் சாந்தி சேனைப் பிரிவின் திட்டமாக செயல்பட்டது. குடியிருப்புப் பல்கலைக் கழகங் களும், தேசிய சேவைத் திட்டப் படை அணிகள் சிற்றூர்களின் வீட்டுப்படிகளில் எல்லாம் ஏறி எல்லா வகையிலும் அவர்களுக்கு உதவும் முகவர்களாக செயல் பட்டது. நாட்டிலேயே முதன்முறையாக திருச்சி குடிமக்கள் 30,000 ரூபாய் நன்கொடை திரட்டி மாண்புமிகு தமிழக முதல்வர் பெயரால் என்.எஸ்.எஸ். பணிகளை சிறப்பாக ஆற்றும் கல்லூரிகளுக்கு விருதாக வழங்கும் கொடைத் திட்டத்தை உருவாக்கியுள்ளனர். தமிழ்நாட்டில் உள்ள என்.எஸ்.எஸ். தொண்டர்கள் 1987 முதல் தேசிய இளைஞர் விருதை பெற்று வரு கின்றனர். 1992 ஆம் ஆண்டு இரண்டு சிறுவர் களும், இரண்டு சிறுமியர்களும் இந்த விருதினை மாண்புமிகு பாரதப்பிரதமரிடமிருந்து பெற்றுள்ளனர்.

பாரதிதாசன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 24 உறுப்பினர் கொண்ட என்.எஸ்.எஸ். கலைக்குழு 1992 சனவரி 22 முதல் 25 வரை வாரணாசியில் உள்ள பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பல் கலைக் கழகங்களுக்கிடையேயான தேசிய இளைஞர் திருவிழாவில் பங்கு கொண்டு தம் உன்னதத் திறமையை வெளிப்படுத்தினர். அப்போது மேற்கத்திய இசை, தனிப்பாட்டு, மேற்கத்திய இசை குழுப்பாட்டு, நாட்டுப்புற நடனம், பிறரைப் போல் நடித்தல், களிமண் பொம்மைகள் செய்தல் ஆகியவற்றில் சிறப்புமிக்க பரிசுகளை பெற்றனர். அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி என்.எஸ்.எஸ். முதன்மைத் தொண்டர்களுக்கு என்று தனியாக ஒரு பணி முகாமை இந்த வகையில் முதன்முறையாக நடத்தப்பட்ட முகாமை—கோயம்புத்தூரில் இவ்வாண்டு சனவரி 31 முதல் பிப்ரவரி 2 வரையில் நடத்திக்காட்டியது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த 43 என்.எஸ்.எஸ். முதன்மை தொண்டர்கள் இதில் பங்கு கொண்டனர். மாநில என்.எஸ்.எஸ். விருதினை

நிறுவியுள்ள ஒரே ஒரு மாநிலம் தமிழ்நாடு தான். சிறந்த திட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கும், திட்ட அலுவலர்களுக்கும், தொண்டர்களுக்கும் 1988—89 ஆம் ஆண்டு முதல் அது வழங்கப்படுகிறது. என்.எஸ்.எஸ், செயல்பாட்டு வீரர்களுக்கு இது மாபெரும் ஊக்கம் தருவதாய் அமைந்துள்ளது.

மதுரை காமராசர் பல்கலைக் கழகம் 1991 மார்ச்சில் அந்தமான் நிகோபார் தீவுகளில் உள்ள போர்ட் பிளேயர் நகரில் முதன்முதலாக தேசிய ஒருமைப்பாட்டு முகாம் ஒன்றை நடத்தியது. இந்தியாவெங்கிலும் இருந்து வந்த 200 பேர் கப்பலில் பயணம் செய்து போர்ட்பிளேயர் நகரில் பல்வேறு செயல்களில் செயற்திறன் காட்டிய ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த முகாம் இது ஆகும். போர்ட்பிளேயர் நகரில் உள்ள இந்திய அரசு மற்றும் சிறுமாநில நிருவாகம் இந்த முயற்சியை பெரிதும் பாராட்டியது. டில்லியில் நடைபெறும் குடியரசு நாள் அணிவகுப்பில் தமிழ் நாட்டு என்.எஸ்.எஸ். தொண்டர்கள் மிகச் சிறப்பாக செயல்பட்டனர். பல மாநிலங்களில் இருந்து அணி வகுப்புக்குச் சென்றவர்களில் பலர் நீக்கப்பட்டனர். ஆனால், தமிழ்நாட்டில் இருந்து சென்ற 15 பேரும் தெரிந்தெடுக்கப்பட்டு 1992 குடியரசு நாள் அணி வகுப்பில் பங்கேற்றனர்.

என். எஸ். எஸ். தொண்டர்கள் தமது இயல்பான தொண்டுகளுடன் கீழ்க்காணும் முதன்மை திட்டங்களிலும் ஈடுபடவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளனர். முழுமையான எழுத்தறிவு இயக்கம் நூறு சதவீதம் எழுத்தறிவு பெறும் நிலையை அடைய தொண்டர்கள் அறிவொளி இயக்கத்தில் தீவிர ஈடுபாடு கொள்ளுதல் ; குறிப்பாக பல்கலைக் கழக இளைஞர்கள் பெருந்தொகையான எய்ட்ஸ் நோய் கல்வியை புகட்டுதல் . கல்லூரி அளவில் உள்ள ஒவ்வொரு தொண்டரும் 10 முதல் 15 இளைஞர்களுக்கு எழுச்சியூட்டுவதாகக் கொண்டால் 10 லட்சம் பேர் என்ற எல்லையை நாம் எட்ட முடியும். அந்த எல்லை உண்மையில் ஒரு உயர்ந்த எல்லையாகும். இந்தத் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அளவிட்டு மருத்துவத் துறையில் செயல்பட வழிகாட்டி

யுள்ளார். தமிழ்நாட்டில் உள்ள என். எஸ். எஸ். இளைஞர்கள் மிகச் சிறந்த வலிமையைப்பெற்றுள்ளனர். சிறப்பாக பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி சமூக ஆக்கத்திற்குரிய இன நல திட்டங்களில் முனைப்புடன் செயலாற்றுகின்றனர். தங்களுடைய ஆளுமைப் பண்புகளை வளர்ப்பதுடன் சமூக மறுமலர்ச்சியின் முகவர்களாக அவர்கள் செயலாற்ற முடியும்.

தேசீய மாணவர் படை

தேசிய மாணவர் படை (என். சி. சி.) சென்னையில் தலைமை அலுவலகத்தையும், அதன் கீழ் ஐந்து என். சி. சி. குழுத் தலைமை அலுவலகங்களையும் கொண்டு தமிழ்நாட்டில் இயக்கப்படுகிறது. சென்னையில் இரண்டு, மதுரை, கோவை, திருச்சி ஆகிய நகரங்களில் ஒவ்வொன்று என்று அதன் ஐந்து குழுத் தலைமை அலுவலகங்கள் இயங்குகின்றன. 50 முது சிறுமியர் கொண்ட படை அணி மற்றும் 671 இளஞ் சிறுமியர் கொண்ட படை அணி ஆகியவை கீழ்க் காணும் படை வீரர்களின் தொகையுடன் இந்த மாநிலத்தில் இயங்கி வருகின்றன.

அட்டவணை 26.

வரிசை எண். படை அணி.	ஏற்பளிக்கப்பட்ட அலுவலர்கள்.	படை வீரர்கள்.
1. முதியர் அணி (சிறுவர்)	225	17,370
2. இளையர் அணி (சிறுவர்)	624	61,350
3. முதியர் அணி (சிறுமியர்)	47	3,200
4. இளையர் அணி (சிறுமியர்)	53	5,200
மொத்தம்	949	87,120

என். சி. சி.-ன் செலவுகள் மைய மற்றும் மாநில அரசுகள் இரண்டாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வரு கின்றன. பல வகையான முகாம்கள் நடத்தப்பட்டு அதன் செலவுகள் தொடக்கத்தில் மாநில அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பின்னர் அதன் 50 சதவீதம் மைய அரசிடம் இருந்து பெறப்பட்டு ஈடு செய்யப் படுகிறது. கல்லூரிகள், பள்ளிகள் முதலான கல்வி நிறுவனங்களில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு படைப் பயிற்சி (பாரா மிலிட்டரி ட்ரெயினிங்) அளிக்கப்படுகிறது. கீழ்க்காணும் குறிப்புரை கள் என். சி. சி. ஆல் நிறைவேற்றபபடுகின்றன ; (அ) தலைமை பண்பு, ஒழுக்கப் பண்பு, தோழமைப் பண்பு, விளையாட்டு வீர உணர்வு மற்றும் சீரிய தொண்டு ஆகியவற்றில் மேம்பாடு ; (ஆ) நாட்டுக்கு நெருக்கடி காலங்களில் உதவக்கூடிய மனித ஆற்றலில் பயிற்சி அளித்து நெறியோடு வாழ உருவாக்குவது ; (இ) அலுவலர் போன்ற பண்புகளுடன் அவர்கள் மேம்படும் நோக்கோடு மாணவர்களுக்கு பயிற்சி அளித்தல், அது அவர்களை ஆயுதப் படையில் பங்கு கொள்ளச் செய்யும்,

மாதிரி வான் ஊர்தி இயக்குதல், வான் குடையில் மிதந்து செல்லல், பறந்து செல்லல், படகு ஓட்டுதல், கப்பலில் செல்லுதல், தண்ணீரில் பாய்தல், படகுப் போட்டிகளில் ஈடுபடுதல், காற்றுச் சறுக்கு படகு ஓட்டுதல், வானில் மிதந்து செல்லுதல் மற்றும் மிதி வண்டி தீரச் செயல்கள் முதலானவற்றில் அவர்களுக்கு பயிற்சி அளிப்பதுடன் இந்தியா முழுவதும் பல்வேறு இடங்களில் பல முகாம்கள் என். சி. இயக்கத்தால் மாநில படைவீரர்களும் பங்குகொள்ளும் வகையில் நடத்தப்படுகின்றன. இயக்ககங்களுக்கிடையேயான போட்டிகள் பல்வேறு முறைகளில் நடத்தப்படுகின்றன. அவை ஆண்டுதோறும் டில்லியில் குடியரசு நாள் விழா அணிவகுப்பில் விருது பெற வழிவகுக்கிறது. தமிழ்நாட்டின் இளைய மற்றும் முதியர் சிறுமியர் படை அணியைச் சேர்ந்த 116 படை வீரர்கள் 1992 சன வரியில் டில்லியில் பாரத பிரதமர் பங்கு கொண்ட குடியரசு நாள் அணிவகுப்பில் பங்குகொள்வதற்காக தெரிவு செய்யப்பட்டனர். கனடா, இங்கிலாந்து,

பங்களாதேஷ் முதலான நாடுகளில் இளைஞர் பரிமாற்றல் விழாவில் பங்கு கொள்ள என். சி. சி. படை வீரர்கள் அனுப்பப்படுகின்றனர். பாதுகாப்பு பணி ஆணைய நுழைவுத் தேர்வுக்குச் செல்லும் தமிழ் நாட்டு என். சி. சி. படை வீரர்களுக்கு ஆழ்ந்த பயிற்சி தரும் பயிற்சிப் பிரிவு ஒன்று தமிழ்நாட்டில் செயல்படுகிறது.

சாரணர் மற்றும் சாரணியர்

தமிழ்நாட்டு பாரத சாரணர் மற்றும் சாரணியர் இயக்கம் ஒரு தன்னிச்சை இயக்கமாக பள்ளிகளில் இயங்கி வருகிறது. தற்போது தமிழ்நாட்டில் 74,000 சாரணர்களும், 43,000 சாரணியர்களும் இந்தியா முழுமையும் கணக்கிட்டால் நான்கில் ஒரு பங்கு என்று கூறும் வகையில் பங்கு கொண்டு செயலாற்றி வருகின்றனர். நாட்டின் எதிர்கால குடிமக்களாகிய மாணவர்களின் நடத்தையை உருவாக்குவதில் அவை குறிக்கொண்டு செயல்படுகின்றன. சாரணர் மற்றும் சாரணியர் பிரிவில் உள்ள ஒவ்வொரு மாணவரிடம் இருந்தும் ரூபாய் ஒன்று சிறப்பு கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் அரசு பாரத சாரணர், சாரணியர் இயக்க நிர்வாக செலவுகளுக்காக மாநில அரசு ரூபாய் ஐந்து லட்சம் வழங்குகிறது.

செஞ்சிலுவைச் சங்கம்.

தற்போது செஞ்சிலுவைச் சங்கம் தமிழ்நாடு முழுவதும் 5,000 பள்ளிகளில் இயங்குகிறது. 3.80 லட்சம் மாணவர்கள் இந்த இயக்கத்தில் பங்கு கொண்டுள்ளனர். இளம் உள்ளங்களில் சூழ்நிலை சிக்கல்களை சமாளிக்கும் விழிப்புணர்வை உண்டாக்குதல், நல்ல உடல் நலத்தோடும் உடல் தூய்மையோடும் வாழ வேண்டியதன் இன்றியமையாமையை உணர்த்துதல் ஆகியவையே இந்த சங்கத்தின் நோக்கங்கள்.

அத்தியாயம் XII

அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் :

அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலின் முக்கியத் துவத்தை பரப்பவும், இளைஞர்களிடையே அறிவியலுணர்வை ஏற்படுத்தவும் தலைமைச் செயலக கல்வித் துறையில் ஒரு தனிப்பகுதி இயங்கி வருகிறது. இத்தனி அமைப்பு, தமிழ்நாட்டில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலை வளர்க்கவும், பயன்படுத்தவும் பிரபலபடுத்துவதுமான பணிகளை கவனித்து வருகிறது. இத்துணைத் துறையின் கவனத்தின் கீழ், அடியிற்கண்ட நிறுவனங்களும், திட்டங்களும் வருகின்றன :

i. தமிழ்நாடு மாநில அறிவியல்-தொழில் நுட்பவியல் மனறம்;

ii. தமிழ்நாடு அறிவியல்-தொழில் நுட்ப மையங்கள்.

iii. அண்ணா பல்கலைக் கழகத்துடன் அறிவியல் தொழில் நுட்ப பிணைப்பு.

iv. அறிவியல் மற்றும் தொழில் முனைவர்கள் மேம்பாட்டுத் திட்டம்.

மேற்கண்ட தலைப்புகளின் கீழ்வரும் பணிகள் பற்றிய விபரம் அடுத்துவரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளது.

2. தமிழ்நாடு மாநில அறிவியல்-தொழில் நுட்பவியல் மனறம்.

(i) தமிழ்நாடு அரசு, இத்தமிழ்நாடு மாநில அறிவியல்-தொழில் நுட்பவியல் உயர் நிறுவனத்தை 1984-ல் அமைத்துள்ளது. தமிழ்நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்சியை உயர்த்தும் நோக்குடன விவசாயம், சுகாதாரம், கல்வி, சக்தி, மனித குடியேற்றம் போன்ற துறைகளில் அறிவியல்-தொழில் நுட்பத் திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றும் பொறுப்பினை இம்மன்றம் ஏற்றுள்ளது. இந்த மன்றம் மத்திய மாநில அரசுகளின் இணைப்புப் பாலமாகத் திகழ்கிறது. மற்றும், மாநில அரசின் ஆண்டு

மற்றும் ஐந்தாண்டு திட்டங்களில், வளர்ச்சித்துறைகளில் அறிவியல் தொழில் நுட்ப பகுதிகளை உருவாக்குவதற்கான ஆலோசனைகள் வழங்கவும் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இம்மன்றத்தின் தலைவர் ஆவார். முதலமைச்சர் அவர்கள், தனக்குப் பதிலாக, மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் செ. அரங்கநாயகம் அவர்களை அம்மன்றத்தின் தலைவராக நியமித்துள்ளார்கள். குறிப்பிடத்தக்க கல்வியாளரும் புகழ் பெற்ற பொருளாதார நிபுணருமான டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேஷய்யா அவர்கள் துணைத் தலைவர் மற்றும் செயற்குழு தலைவராகவும் பொறுப்பேற்று மன்றத்தை நடத்தி வருகின்றனர்.

(ii) தமிழக அரசு 1986–92 ஆண்டுகளில் ரூ. 141 இலட்சங்கள் கீழ்வரும் அறிவியல் தொழில்நுட்பவியல் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக மானியமாக வழங்கியுள்ளது.

(அ) அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் குறித்த திட்டங்கள்.

(ஆ) அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் செய்தி அமைப்பு முறை.

(இ) இளம் விஞ்ஞானிகளுக்கு ஊக்கத்தொகை உதவி.

(ஈ) அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் பிரபலப்படுத்தல்.

(உ) குழந்தைகளிடையே அறிவியல்-தொழில் நுட்பவியல் திறன் கூட்டும் திட்டங்களுக்கு உதவி.

(ஊ) ஆராய்ச்சியாளர்-தொழில் நிறுவனம் கருத்து ஒப்புரவு.

(எ) கருத்தரங்குகளும் குழு விவாதங்களும்.

1992-93ஆம் ஆண்டிற்கான இம்மன்றத்தின் வரவு செலவு திட்டம் ரூ. 37.50 இலட்சங்கள் செலவு செய்வதற்கு வகை செய்கிறது.

(iii) இதுவரை 8 அறிவியல்-தொழில் நுட்பவிய. திட்டங்களை இம்மன்றம் நிறைவேற்றியுள்ளது மேலும், பல்வேறு ஆய்வுத் துறைகளில் 31 திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்கள் இத்துடன் இணைத்துள்ள பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

அட்டவணை 27.

அறிவியல் தொழில் நுட்பவியல் திட்டங்களின் நிதி ஒதுக்கீடு.

வரிசை எண்.	ஆண்டு.		திட்டங்களின் எண்ணிக்கை.	நிதி ஒதுக்கீடு. (ரூபாய்)
1.	1986–87	..	5	6,49,000.00
2.	1987–88	..	2	7,94,000.00
3.	1988–89	..	3	20,85,172.00
4.	1989–90	..	4	11,66,265.00
5.	1990–91	..	10	10,64,964.00
6.	1991–92	..	16	15,81,280.00
	மொத்தம்	..	40	73,40,681.00

இத்திட்டங்கள், விவசாயம்-மீன்வளம், நீர்நிலைகள், சுகாதாரம் சுற்றுப்புறமாசுபடுத்தல் கட்டுப்பாடு ஆகிய துறைகளுடன் சம்பந்தப்பட்டவை. நுட்ப ஆய்வுகளில் கண்ட தெரிவுகள் சிபாரிசுகள் ஆகிய வற்றின் தொடர்பான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. அறிவியல் – தொழில் நுட்பவியல் பிரபலபடுத்தல் திட்டத்தின் கீழ் இம்மன்றம் குழந்தைகளிடையேயும் எளிய மக்கள் மத்தியிலும் அறிவியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காக அறிவியல்-தொழில் நுட்பவியல் சம்பந்தப்பட்ட பொருட்காட்சிகள், ஆசிரியர்களுக்கு பணி இடைப் பயிற்சி அளித்தல் போன்ற செயல் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. இச்செயல் திட்டங்கள்

மக்கள் மத்தியில் குறிப்பாக கிராமப்புற மக்ளிடையே அறிவியல் கண்ணோட்டத்தை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டவை. மேலும், 'இளம் விஞ்ஞானிகளுக்கு ஊக்குவிப்பு' என்ற திட்டத்தின் கீழ் கருத்தரங்குகளில் பங்கு கொண்டு தங்கள் அறிவியல் கண்டுபிடிப்புகளை அங்கே அரங்கேற்றம் செய்ய உதவியாக பயணச் செலவில் பாதி வழங்கியும், நிறுவனங்கள் தாங்களே கருத்தரங்குகள் நடத்தவும் அறிவியல் தொழில் நுட்ப பயன்களை மேற்கொள்ளவும் இம்மன்றம் ஆவன செய்கின்றது. இம்மன்றத்தின் ஆதரவில் இயங்கும் 'தொழில் நுட்ப தகவல் மையம்', களநிலை நிர்வாகிகள், ஆராய்ச்சி நிலையங்கள், நிதி நிறுவனங்கள் ஆகியோரிடை ஒரு சுமுகமான உறவை ஏற்படுத்தி ஆராய்ச்சியின் விளைவுகளை களத்தில் பயன்படுத்த உதவுகிறது. வளர்ச்சித் துறைகள் சார்பான முக்கிய தலைப்புகள் பற்றி, தொழில் நுட்பங்களை கண்டுபிடிப்போருக்கும் அதை உபயோகிப்போருக்கும் இடையே கலந்தாலோசனை நடைபெற குழு விவாதங்களுக்கு ஏற்பாடு செய்யப்படுகின்றது.

(iv) வளர்ச்சித் துறைகளல் அறிவியல் தொழில் நுட்பவியலின் முக்கியத்துவத்தைக் கோடிட்டு காட்டும் நோக்கோடு, 1992–93 ஆம் ஆண்டில் இம்மன்றம் மேற்கண்ட செயல் திட்டங்களைத் தொடர உள்ளது. வளர்ச்சித் துறைகளில் சில குறிப்பிட்ட இடங்களுக்குத் தேவையான அறிவியல் தொழில் நுட்பங்கள் பற்றி தமிழ் நாட்டில் கருத்தரங்குகள் நடத்தப்பட உள்ளன. கொள்கை முடிவுகள் எடுக்கும் அரசுக்குத் தேவையான, அறிவியல் தொழில் நுட்பவியல் அடிப்படையுடன் தொடர்புடைய நுண் ஆற்றல், முக்கிய அமைப்புகள் செய் நேர்த்தி ஆகியவை பற்றிய தகவல் முறைகளும் உருவாக்கப்படவுள்ளன. தமிழ்நாட்டில் சமூக பொருளாதாரத் தேவைகளின் அடிப்படையில், வளர்ச்சித் துறைகளில் காணப்படும் உடனடி பிரச்சினைகள் எவை என்று கண்டு அவைகளுக்கு முன்னுரிமம் வழங்கப்படவுள்ளன. பயனுடைய சுய வேலைக்கு வாய்ப்பளிக்கும் தொழில் முனைவர்கள மேம்பாட்டுச் செயல் திட்டங்கள் உருவாக்கப்படவுள்ளன. சமுதாயத்தில்

நலிந்த பிரிவுகளைச் சேர்ந்த பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் நன்மை பயக்கும் முகத்தான் சத்தில்லாஉணவு, சுகாதாரமுறை பற்றி பயிற்சி முறை செயல் திட்டங்களும் உருவாக்கப்படவுள்ளன. இம்மன்றத்தின் உதவியுடன் உருவாக்கப்பட்ட கையிலெடுத்துச் செல்லும் குறைந்தவிலை வேதியல் கருவியுறையின் துணைக்கொண்டு பள்ளியில் செய்ய வேண்டிய அனைத்துப் பரிசோதனைகளையும் வகுப்பிலேயே செய்து காட்டலாம் என்பதை தொழில் முனைவர்கள் மூலம் மக்களிடையே பிரபலப் படுத்த இம்மன்றம் முனைகிறது.

3. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையங்கள்:

(i) தமிழக அரசு மக்களிடையே அறிவியலைப் பரப்புவதற்காக, 'தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையங்கள்' என்ற ஒரு நிறுவனத்தை 1983–ஆம் ஆண்டில் நிறுவியது. இந்நிறுவனத்திற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் தலைவர் ஆவார். இம்மையத்தின் நோக்கம் இளைஞரிடையே அறிவியல் உணர்வையும் சிந்தனா சக்தியையும் வளர்க்கவும், மற்றும் அறிவியல் தொழில் நுட்ப பயன் பற்றிய தகவலை பரப்புவதுமாகும். அரசு ரூ. 401.25 இலட்சம் செலவில் சென்னை கோட்டூர்புரம் பகுதியில் பெரியார் அறிவியல் தொழில் நுட்ப வளாகத்தில் முதல் பகுதியை நிறுவியுள்ளது. அதே வளாகத்தில் திரு. சி. கே. பிர்லா அளித்த நன்கொடை ரூ. 2.00 கோடியின் உதவியுடன் கோளரங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

(ii) பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மையம் கடந்த 17–9–1990-லிருந்து செயல்படத் துவங்கியது. கோளரங்கம் 11–5–1988 அன்றிலிருந்து இயங்கி வருகிறது. இவை ஆரம்பித்த நாளிலிருந்து இதுவரை ஏறக்குறைய 11.5 இலட்சம் மக்கள், மாணவர்களும் குழந்தைகளும் உட்பட, இவற்றைக் காண வருகை தந்துள்ளார்கள்.

(iii) கோளரங்கம் மற்றும் அறிவியல் மையம் ஆகிய இரு அமைப்புகளும், தற்காலிக பொருட்காட்சிகள், பயிற்சி வகுப்புகள், கருத்தரங்கங்கள்,

பேருரைகள் நிகழ்த்தல், இரவில் வானவெளித் தோற்றங்கள், குறுகிய காலப் பயிற்சிகள், அறிவினைத் தூண்டும் வினா-விடைப் போட்டிகள் போன்ற செயல் முறைகளை நடத்தி வருகின்றன. இக்கல்வி செயற்பாடுகளில் பங்கேற்றோர் பெரிதும் பயன் பெற்றுள்ளனர். அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைந்து செயல்பட்டு, பெரியார் அறிவியல் மையம், வானவியல், வான்கோள்வியல், போக்குவரத்து மின் அணுவியல் தொடர்பான 8 பல்கலைக் கழக மானியக் குழு (U.G.C.) நிகழ்ச்சிகளைத் தயாரித்துள்ளது.

(iv) பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மையம் 5 காட்சிக் கூடங்களுடன் செயல்பட்டு வருகிறது. முதல் நுழைவுக் காட்சிக் கூடமானது பெரியார் காட்சிக்கூடமாகும். இங்கு தந்தை பெரியார் அவர்கள் தேசிய தலைவர்களுடன் உள்ள திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன. மேலும் உள்ள 4 காட்சிக்கூடங்கள் முறையே போக்குவரத்து மின்னணுவியல் மற்றும் தொடர்பு இயல், அறிவியல் மற்றும் சிறுவர் காட்சிக் கூடம் முதலான காட்சிப் பொருள்களுடன் அமைந்துள்ளன. பெரும்பாலான காட்சிப் பொருட்கள் நேரிடையாக இயக்கி அறியும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளன. இக்காட்சிப் பொருட்களை இயக்கும் போது, பொது மக்களும், இளைஞர்களும் குறிப்பாக சிறுவர்களும் மகிழ்ச்சியடைகிறார்கள். இது, காட்சிப் பொருள்களின் அறிவியல் கோட்பாடுகளை மாணவர்கள் மற்றும் குழந்தைகள் அறிந்து கொள்ளத் தூண்டும் ஆர்வத்தினை வளர்க்கிறது.

(v) நடப்பு ஆண்டில் 1991-92இல் உயிர் அறிவியல், திடப்பொருள் அறிவியல், நேரிடை இயக்கும் இயக்கத் திறன் ஆற்றல் போன்ற துறைகளில் காட்சிக் கூடங்களை மேம்பாடு படுத்தும் முயற்சியில் பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மையம் முனைப்பாக ஈடுபட்டிருந்தது. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் சூரிய ஒளி பம்பு, சூரிய சக்தி சுடுநீர் சாதனம், சூரிய சக்தியால் உணவு தயாரிக்கும் சாதனம், மின் உற்பத்தி செய்யும் காற்றாலைகள் போன்ற சாதனங்களை உள்ளடக்கிய எரிசக்தி மாதிரி கிராமம் (Model) ஒன்று உருவாக்கும் பணி முடியும் தரு

வாயில் உள்ளது. பொது மக்களின் நன்கொடையுடன் வருகின்ற 1992-93ஆம் ஆண்டில், கனிப்பொறி அறிவியல் காட்சிக்கூடம் ஒன்று அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

(vi) அறிவயல் தொழில் நுட்பவியல் கருத்துக் களை சிற்றூர் மற்றும் கிராமப்பகுதிகளில் பிரபலப் படுத்துவதற்காக, 24 காட்சிப் பொருட்களையும் ஒரு சிறு கோளரங்கத்தையும் உள்ளடக்கிய காட்சியகமாக பேருந்து ஒன்று தொடர்ந்து மாநிலத்தின் பல பகுதி களைச் சுற்றி வந்துகொண்டிருக்கிறது.

(vii) 1991-92 இல் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் துணையுடன், ஒரு தற்காலிக அறிவியல் தொழில் நுட்பவியல் பொருட்காட்சியும் சிறு கோளரங்கக்காட்சி ஒன்றும் நடத்தப்பட்டன. அப்பொருட் காட்சி இலட்சக்கணக்கான மக்களை ஈர்த்தது.

(viii) கோளரங்கம் 1988-மே மாதத்தில் ஆரம் பித்த நாளிலிருந்து இதுவரை, வானவியல், வானக் கோளியல், விண் வெளி அறிவியல் தொடர்பான 7 செயல் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 1991-92-ல் ''வால்நட்சத்திரங்கள்'' ''நமது அண்டம்'' எனற தலைப்புகளில் காட்சிகள் தயாரித்து காண்பிக்கப் படுகின்றன. 1992-93 ஆம் ஆண்டிற்கு பல காட்சித் திட்டங்கள் உருவாக்கப்பட உள்ளன.

(ix) குறிப்பாக பள்ளிகளுக்கென்றே வானவியல் பயிற்சி வகுப்பு (Work Shop) ஒன்று திட்ட மிடப்பட்டு சென்னை நகரில் பல பள்ளிகளில் நடத்தப் பட்டது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், திருச்சியில் மண்டல மையம் ஒனறு அமைய உள்ளது.

4. அண்ணா பல்கலைக் கழகத்துடன் அறிவியல் தொழில் நுட்ப பிணைப்பு :

அறிவியல் தொழில் நுட்பவியல் துறைகளில் சில குறிப்பிட்ட பகுதிகளை வளர்க்கும் நோக்கோடு தமிழக அரசு அண்ணா பல்கலைக்கழகத்தில் மேல்வளர் மையங்கள் சிலவற்றை அமைத்துள்ளது. அவற்றில் ஒன்றே கீழ் வருவது:

தொலை உணர்வு மையம் :—இம்மையம் 1982-ல் ஜனவரியில் அமைக்கப்பட்டது. இது இந்திய அரசால் தொலை உணர்வு நிகழ்வில் ஒரு தேசிய உபமையமாக ஏற்கப்பட்டுள்ளது. இதற்கான மொத்த நிதி ஒதுக்கீடான ரூ. 7.50 கோடியில் தமிழக அரசின் பங்கு ரூ. 2.73 கோடியாகும். இந்த மையத்தைப் பற்றிய மேல் விபரங்கள் தொழில் நுட்பக்கல்விப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

5. அறிவியல் மற்றும் தொழில் முனைவர்கள் மேம்பாட்டுத்திட்டம்

(i) இந்திய அரசின் அறிவியல் தொழில் நுட்ப வியல் துறையைச் சேர்ந்த தேசீய அறிவியல் தொழில் நுட்பவியல் தொழில் முனைவர் மேம்பாட்டு வாரியத்தின் கூட்டுமுயற்சியாக தருமபுரி மாவட்டத்திற்கு '' தொழில் வாய்ப்பு பற்றிய தகவல் குறிப்பு '' ஒன்று தயாரிக்கும் திட்டத்திற்கு தமிழக அரசு ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டம் 1985 முதல் செயல்பட்டு வருகிறது. தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம் இந்த திட்டத்தின் மொத்த செயலாட்சி முகமையாகும். இந்திய தொழில் நுட்பவியல் நிறுவனங்களிலும், பல்கலைக்கழகங்களிலும், பொறியியல் கல்லூரிகளிலும் பயிற்சி பெற்ற அனைத்து நிலை அறிவியல் தொழில் நுட்பவியல் பணியாளர்களுக்கும் சுயவேலை வாய்பை உருவாக்கித்தருவதற்காகவே இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

(ii) இத்திட்டத்தின கீழ் தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தில் உள்ள விவரங்களைக் கொண்டும் மற்றும் பிறநிறுவனங்களிலிருந்து கிடைத்திடும் விவரங்களை வைத்தும் தருமபுரி மாவட்டத்திற்கு என்று ஒரு '' தொழில் வள வாய்ப்பு விவர நூல் '' தயாரிக்கப்பட்டுள்ளது. தொழில் தொடங்கும் வாய்ப்புகள் பற்றிய ஒரு மூனறாண்டு முன்னோக்கத் திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது. பல நிறுவனங்களால் உருவகப்படுத்தப்பட்ட தொழில்கள், மற்றும் தருமபுரி மாவட்டத்திற்கேற்றவை என தெரிந்தெடுக்கப்பட்ட தொழில்கள் ஆகிய அனைத்து விவரங்களும் அடங்கிய அட்டவணைப்

புத்தகம் ஒன்று வெளியிடப்பட்டு பல்வேறு நிறுவனங்களுக்கு விரிவாக விளம்பரப்படுத்துவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(iii) அறிவியல் தொழில்நுட்ப நபர்களிடம் தொழில் முனைப்பு எண்ணத்தை ஊக்குவிக்க அறிவியல் தொழில் நுட்பவியல் முனைவர் மேம்பாட்டுத் திட்ட அதிகாரிகள் கருத்தரங்குகளையும் பயிற்சி முகாம்களையும் நடத்தியிருக்கிறார்கள். இது தவிர தொழில் முனைவர் மேம்பாட்டுத் திட்டத்தில் பயிற்சி பெற்ற நபர்கள் எழுவர் மற்றும் அறிவியல் தொழில் நுட்பவியல் நபர்கள் 70 பேர் ஆகியோருக்கு குறிப்பிட்ட தொழில்களுக்கான செயல்திட்ட அறிக்கைகளை தயாரிக்க இத்திட்டம் உதவி செய்துள்ளது. தொழில் முனைவர்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் பயிற்சி பெற்ற 4 நபர்களுக்கும், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் நபர்கள் 40 பேருக்கும் நிதி நிறுவனங்களுடன் தொடர்பு ஏற்படுத்தி உதவிபெற வகை செய்துள்ளது. இதுவன்றி, புதிய நிறுவனங்கள் அமைக்க தொழில் முனைவர் திட்ட பயிற்சி பெற்ற 3 நபர்களுக்கும், அறிவியல் தொழில் நுட்ப நபர்கள் 30 பேருக்கும் உதவி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அமைக்கப்பட்ட 33 நிறுவனங்கள், 395 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளன. இத்திட்டத்தை தருமபுரி மாவட்டத்தில் செயல்படுத்துவதற்காக 1990-91-ல் ரூ. 4.12 இலட்சத்தை மைய அரசு மானியமாக வழங்கி, ‘அறிவியல் தொழில் நுட்பவியல் மூலம் பெருமளவில் வேலை வாய்ப்பு’ (MEGSAT) என்ற திட்டத்தின் மூலம் 57 தொழில் முனைவோரை உருவாக்கியுள்ளது. மைய அரசின் அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சிக் கழகத்தின் (CSIR) ஆய்வகமாகிய மத்திய மின் வேதியியல் ஆராய்ச்சி நிலையத்தின் ஒத்துழைப்புடன பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1992-93 லும் இத்திட்டத்தைத் தொடர்ந்து நடத்த மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பவியல் துறை ஒப்புதல் அளித்துள்ளது.

முனைவர் செ. அரங்கநாயகம்
கல்வி அமைச்சர்,
தமிழ்நாடு அரசு.

புள்ளி விவரம்

1 பள்ளிக் கல்வி புள்ளி விவரம் :

I பள்ளி வயது சிறார், சேர்க்கையும் சதவீதமும்

II பள்ளிகளின் எண்ணிக்கை

III ஆசிரியர்களின் எண்ணிக்கை

